பக்கங்கள்: இருபத்துநான்கு

# உதயன்

விலை ரூபா 15.00

www.uthayan.com

சுடர் 25 வள்ளுவர் ஆண்டு 2041 தை 06 செவ்வாய்க்கிழமை (19.01.2010)UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 054

# பொன்சேகாவின் வாக்குறுதியில் அமெரிக்கா அதிக நம்பிக்கை

## ஆனால் எந்த வேட்பாளரையும் வாஷிங்டன் ஆதரிக்காது என்கிறார் அந்த நாட்டு அதிகாரி

கொழும்பு, ஜனவரி 19

இலங்கை ஜனாதிபதித் தேர்தலில் எதிர்க்கட்சிகளின் பொதுவேட்பாளராகப் போட்டியிடும் ஜெனரல் சரத் பொன்சேகாவின் வாக்குறுதிகளில் அமெரிக்கா அதிக நம்பிக்கை கொண்டுள்ளதாக அந்த நாட்டின் மூத்த அதிகாரி ஒருவர் ஏ.எவ்.பி. செய்திச் சேவைக்குத் தெரிவித்திருக்கிறார்.

எனினும், இந்தத் தேர்தலில் எந்தவொரு வேட்பாளரையும் அமெரிக்கா ஆதரிக்காது என்றும் அந்த அதிகாரி சுட்டிக்காட்டியுள்ளார்.

இது தொடர்பாக அந்த செய்திச் சேவை மேலும் குறிப்பிட்டுள்ளவை வருமாறு:-

இலங்கையில் நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தல் காரணமாக அந்த நாட்டுடனான உறவுகளில் சிறந்த மாற்றம் ஏற்படும் என்ற நம்பிக்கை அமெரிக்காவில் காணப்படுகின்றது. தேர்தல் இரு நாடுகளின் உறவுகளில் மாற்றங்களைக் கொண்டு வருமா எனக் (02ஆம் பக்கம் பார்க்க)

## தேர்தல் தினத்தன்று இராணுவத்தினரை பாதுகாப்புக் கடமையில் ஈடுபடுத்துக!

கொழும்பு, ஜன. 19

தேர்தல் தினத்தன்று இராணுவத்தினரைப் பாதுகாப்புக் கடமையில் ஈடுபடுத்த வேண்டுமென ஜே.வி.பி. கோரிக்கை விடுத்துள்ளது.

வாக்களிப்பு நிலையங்களுக்கு இராணுவத்தினரின் மேலதிக பாதுகாப்பு வழங்கப்பட வேண்டுமென் ஜே.வி.பியின் நாடாளுமன்ற உறுப்பினர் அனுரகுமார திஸாநாயக்க தேர்தல் ஆணையாளரிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

(24ஆம் பக்கம் பார்க்க)

## வன்னி இறுதிக் கட்டப் போரில் இறந்த படையினரின் எண்ணிக்கை 30 ஆயிரம்

### மாத்தளைக் கூட்டத்தில் பொன்சேகா தகவல்

கொழும்பு, ஜன. 19

இறுதிக் கட்டப்போரின்போது முப்பதாயிரத்திற்கும் மேற்பட்ட படையினர் உயிரிழந்தனர் என ஜெனரல் சரத்பொன்சேகா தெரிவித்துள்ளார்.

கடந்த சனிக்கிழமை மாத்தளையில் நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் உரையாற்றும்போதே அவர் இத்தகவலை வெளியிட்டுள்ளார்.

அவர் அங்கு மேலும் கூறியவை வருமாறு:-

தற்போது மஹிந்த ராஜபக்ஷ அரசு போர் வெற்றியை விற்று ஜனாதிபதித் தேர்தலில் வெல்வதற்கான முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றது.

நாட்டில் இன, மொழி பேதங்களை ஒழித்து மக்கள் அனைவருக்கும் சம உரிமைகளை பெற்றுக்கொடுத்து (24ஆம் பக்கம் பார்க்க)

## அமைச்சரின் அலுவலகம் மீதான தாக்குதலில் ஒருவர் பலி; 4 பேர் காயம்!

கொழும்பு, ஜன. 19

குருநாகல் பிரதேசத்தில் உள்ள சுகாதார மேம்பாடு மற்றும் தொற்றுநோய்த் தடுப்புத்துறை அமைச்சர் ஜெயரத்ன ஹேரத்தின் அலுவலகத்தின் மீது நேற்று இரவு மேற்கொள்ளப்பட்ட கைக்குண்டுத் தாக்குதலில் ஒருவர் கொல்லப்பட்டும், நால்வர் காயமடைந்தும் உள்ளனர்.

இந்தக்கொலையை அடுத்து ஜனாதிபதித் தேர்தல் வன்முறைகளில் பலியானோரின் எண்ணிக்கை நான்காக உயர்ந்துள்ளது.

இதில் இருவர் ஆளும் கட்சியையும் அடுத்து இருவர் (24ஆம் பக்கம் பார்க்க)

## 'தமிழ் பேசும் தலைமகன்' பட்டம் வழங்கி சம்பந்தன்கௌரவிப்பு



மட்டக்களப்பு, ஜன.19

அம்பாறை மாவட்டத்தில் விஜயம் மேற்கொண்டுள்ள தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனுக்கு கல்முனை மாநகர சபை ''தமிழ் பேசும் தலை மகன்'' என்ற பட்டத்தை வழங்கி கௌரவித்துள்ளது.

நேற்று மாலை கல்முனை மாநகரசபை மண்டபத்தில் நடைபெற்ற தேர்தல் பிரசாரக்கூட்டத்தில் வைத்து அச் சபையின் நகர முதல்வர் எம்.ஹரிஸ், சம்பந்தனுக்கு இந்தப் பட்டத்தை வழங்கி முடிசூட்டி, பொன்னாடைகள் போர்த்துக் கௌரவித்தார்.

பெரும் எண்ணிக்கையான தமிழ், முஸ்லிம் மக்கள் அங்கு கூடி கரகோஷம் எழுப்பி சம்பந்தருக்கு வாழ்த்து தெரிவித்தனர்.

இந்தக் கௌரவத்தைப் பெற்றபின் சம்பந்தன் உரையாற்றுகையில், இன்று எனக்குக்கிடைத்த கௌரவத்தை தமிழ் பேசும் மக்களுக்கு கிடைத்த கௌரவமாகவே கருதுகிறேன். தமிழ் மக்களும் முஸ்லிம் மக்களும் மீண்டும் இணைந்து வாழ்வதற்கு கிடைத்த முதற்படியாகவும் இந்த நிகழ்வை கருதுகிறேன்-என்றார். (ஒ-1)

## சரத் பொன்சேகாவின் ஆதரவாளர் வாரியப்பொலவில் சுட்டுக்கொலை

கொழும்பு, ஜன. 19

நேற்றுக்காலை வாரியப்பொலப் பகுதியில் எதிர்க்கட்சிகளின் பொது வேட்பாளர் சரத் பொன்சேகாவின் ஆதரவாளர் ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார் எனத் தேர்தல் நடவடிக்கைகளுக்குப் பொறுப்பான சிரேஷ்ட பொலிஸ் மா அதிபர் காமினி நவரத்ன தெரிவித்துள்ளார்,

சரத் பொன்சேகாவிற்கு ஆதரவளிக்கும் வகையில் 10 பேர் அவரது சுவரொட்டிகளை ஒட்டிக்கொண்டிருந்தவேளை ஏழு மோட்டார் சைக்கிள்களில் வந்த குழுவினரே இத்தாக்குதலை மேற்கொண்டுள்ளனர் எனத் (02ஆம் பக்கம் பார்க்க)

## மஹிந்த மீண்டும் ஆட்சிபீடம் ஏறினால் கிழக்கு மாகாணம் நிச்சயம் பறிபோகும்

### விடக்கூடாது என்கிறார் இரா. சம்பந்தன்

கொழும்பு, ஜன. 19

''தற்போதைய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மீண்டும் ஒரு தடவை ஆட்சிப் பீடம் ஏறினால் கிழக்கு மாகாணம் முற்றிலுமாக பெரும்பான்மையினரிடம் பறிபோய்விடக் கூடிய நிலை ஏற்பட்டிருக்கிறது. இதனைத் தமிழர்கள் மாத்திரமல்ல, முஸ்லிம்களும் நன்கு அறிந்து வைத்திருக்கிறார்கள். எனவே, அதனை சிறுபான்மை மக்கள் ஒருபோதும் அனுமதிக்கக் கூடாது.''

-இவ்வாறு தெரிவித்திருக்கிறார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான இரா. சம்பந்தன்.

கிழக்கில் தற்போது ஜெனரல் சரத் பொன்சேகாவுக்கு ஆதரவாக பிரசாரத்தில் ஈடுபட்டுவரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எம்.பிக்கள் (23ஆம் பக்கம் பார்க்க)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# பண்பான சமுதாயத்தை உருவாக்கும் தலைவர்களாக் எமது மாணவர்கள் எதிர்காலத்தில் திகழ வேண்டும்

## சென். ஜோன்ஸ் கல்லூரி நிகழ்வில் நீதிபதி விக்னராஜா



நல்லூர், ஜன.19

சென். ஜோன்ஸ் கல்லூரியில் புதிதாக இணையும் மாணவர்களாகியநீங்கள்இறைவனால் ஆசீர்வதிக்கப்பட்டவர்கள். இந்தக் கல்லூரி ஒழுக்கத்தைக் கற்றுக் கொடுத்த கல்லூரி. நீங்களும், ஒழுக்கம் உள்ளவர்களாகவும், பண்பான நல்ல சமுதாயத்தை உருவாக்கும் தலைவர்களாகவும் எதிர்காலத்தில் திகழ வேண்டும். இவ்வாறு யாழ். மேல்நீதி மன்ற நீதிபதி ஆர்.ரி.விக்னராஜா கூறினார்.

வன்னி நலன்புரி நிலையங்களில் இருந்து யாழ். சென்.ஜோன்ஸ் கல்லூரியில் இணைந்து கொண்ட மாணவர்களை வரவேற்கும் நிகழ்வு கடந்த சனிக்கிழமை கல்லூரி மண்டபத்தில் அதிபர் வண. என். ஜே. ஞானபொன்ராஜ் தலைமையில் நடைபெற்றது.

நீதிபதி விக்னராஜா அங்கு மேலும் பேசும் போது கூறியதாவது :-

பரம்பரை பரம்பரையாக கல்வியில் முன்னேறி நாட்டுக்கே முன்மாதிரியாக இருந்த இந்தச் சமூகம் நவீன தொழில்நுட்பமுறைகளை எதிர்மாறாகப் பயன்படுத்தி வருகிறது. இன்றைய மாணவர்கள் நவீன தொழில்நுட்பத்தை உரிய முறையில் பயன்படுத்தி நாட்டுக்குப் பயனுள்ளவர் களாக உருவாக வேண்டும்.

இரண்டாவது உலகப்போரில் தரைமட்டமான ஜப்பான் இன்று அமெரிக்காவுக்கு உதவி வழங்கக் கூடிய அளவுக்கு தொழில்நுட்ப அறிவினால் முன்னேற்றகரமான பாதையில் செல்கிறது. ஒருவன் கல்வி அறிவு பெற்று முன்னேறுவதில் தான் அவனது வளர்ச்சி, முன்னேற்றம் என்பன ஏற்படுகின்றன. வாழ்க்கையில் கஷ்டங்கள், இழப்புக்கள் ஏற்படினும் இறை நம்பிக்கையுடன் சவால்களுக்கு எதிர்நீச்சல் போட்டு முன்னேற வேண்டும்.

கல்வியறிவுடன் மட்டுமன்றி நீங்கள் எந்த மதமானாலும் அது கூறும் அடிப்படை உண்மைகளை அன்றாட வாழ்வுடனும் கல்வியுடனும் அறிவுபூர்வமாக கலந்து முன்னேற்றம் காணவேண்டும்.

யாழ்ப்பாண சமூகம் கல்வியால் உயர்ந்து உள்நாட்டில் மட்டுமன்றி வெளிநாடுகளிலும் தலைநிமிர்ந்து வாழ்ந்தவர்கள் என்பதை நீங்கள் மறக்கக்கூடாது - என்றார்.

யாழ். வலயக்கல்விப்பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் பேசும்போது கூறியதாவது:

இந்தக்கல்லூரியில் கற்பதற்கான வாய்ப்புக்கள் எல்லோருக்குமே கிடைப்பதில்லை. உங்களுக்கு அந்த வாய்ப்பு கிடைத்திருக்கிறது. வன்னியில் இருந்து பெரும் எண்ணிக்கையான மாணவர்கள் இங்கு வந்தபோது அவர்களுக்கு உரிய கல்வியை வழங்க வேண்டும் என்பதில் இங்குள்ள கல்விச் சமூகம் தன்னால் முடிந்த அளவுக்கு பணியாற்றியுள்ளது.

இந்தக் கல்லூரி அதிபர் உங்கள் இடங்களுக்கே உங்களைத்தேடி வந்து தெரிவு செய்துள்ளார். இது உன்னதம் மிக்கதொரு செயலாகும். இறைவனின் தூதுவராக இருந்து அவர் மேற்கொண்ட முயற்சி நல்ல வெற்றியைத் தரவேண்டும் என்றார்.

நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தரபரமாச்சார்ய சுவாமிகள், அங்கிலிக்கன் திருச்சபை வண.நேசகுமார், யாழ்.நாகவிகாராதிபதி ஸ்ரீவிமலதேரர், மௌலவி முகம்மத்லெப்பை, சென். பற்றிக்ஸ் கல்லூரி அதிபர் வண.ஜெரோமி செல்வநாயகம், நல்லூர் பிரதேச உதவிச் செயலர் திருமதி காந்தசீலன் ஆகியோரும் இந்நிகழ்வில் உரையாற்றினார்கள். (ஒ-111)

# பொன்சேகா-சம்பந்தன் இடையிலான உடன்படிக்கையை பகிரங்கப்படுத்துக!

## ஊடகத்துறை அமைச்சர் மீண்டும் வலியுறுத்துகிறார்

கொழும்பு, ஜன. 19

எதிர்க்கட்சிகளின் பொதுவேட்பாளர் சரத் பொன்சேகாவிற்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தனுக்கும் இடையே கைச்சாத்தாகியுள்ள ஒப்பந்தம் குறித்த விவரங்களை வெளியிடுமாறு அரசு மீண்டும் எதிர்க்கட்சிகளிடம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் மாநாட்டில் இந்த வேண்டுகோளை விடுத்த தகவல் ஊடகத்துறை அமைச்சரும் அமைச்சரவைப் பேச்சாளருமான அநுர பிரியதர்ஷன யாப்பா, எதிர்க்கட்சித் தலை வர்களை இலக்குத் தவறிய ஏவுகணைகள் என்றும் வர்ணித்தார்.

செய்தியாளர் மாநாட்டில் அவர் மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு:-

தேர்தல் வன்முறைகளில் எதிர்க்கட்சிகள் ஈடுபடுகின்றன. அதேவேளை, ஜெனரல் சரத் பொன்சேகாவும் எதிர்க்கட்சிகளின் தலைவர்களும் பிரசார மேடைகளில் அதனை எமக்கு எதிராகப் பயன்படுத்துகின்றனர்.

நாடு முன்னர் எப்போதும் கண்டிராத வகையில் தேர்தல் மேடைகளில் எதிர்க் கட்சியினர் மிகவும் கீழ்த்தரமாக நடந்து கொள்கின்றனர்.

எதிர்க்கட்சி வேட்பாளர் தன்மீதான குற்றச்சாட்டுகளை எதிர்கொள்ள முடியாமல் கூச்சலிடுகின்றார். ஜெனரல் சரத் பொன்சேகா தான் இராணுவ சீருடையில் உள்ள சுவரொட்டிகளை ஒட்டுவதற்கு எதற்காக அனுமதி வழங்கினார்.

அவர் ஒழுக்கம் நிறைந்த ஒருவராக இருந்தால் ஓய்வு பெற்ற பின்னர் ஏன் அதனைப் பயன்படுத்த வேண்டும்?

ஐக்கிய தேசியக் கட்சி, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, முஸ்லிம் காங்கிரஸ் மற்றும் மனோகணேசன் இணைந்து மக்களை ஏமாற்றுவதற்கு முகமூடியணிந்துள்ளனர்.

2005 இல் இவர்கள் ரணிலை ஆதரித்தனர். தற்போது இவர்கள் இலக்குத் தவறிய ஏவுகணைகளாக ஜெனரல் பக்கம் சென்றுள்ளனர்.

ரவூப் ஹக்கீம் முன்னர் விடுதலைப்புலிகளுடன் ஒப்பந்தம் செய்துகொண்டு தனது மக்களுக்குத் துரோகமிழைத்தார். தற்போது ஜெனரல் சரத் பொன்சேகாவை அவ்வாறு தவறாக வழிநடத்துகிறார் என்றார். (அ-சி)

## கடலோட்டு இயந்திரவியல் கல்லூரிக்கு விண்ணப்பம்

வண்ணை, ஜன.1

யாழ்.கடற்றொழில் மற்றும் கடலோட்டு இயந்திரவியல் கல்லூரி 2010 ஆம் ஆண்டிற்கான புதிய கற்கை நெறிகளுக்கு மூன்று துறைகளில் விண்ணப்பங்களைக் கோரியுள்ளது.

கொக்சன் சான்றிதழ் பயிற்சி நெறி இடுகலம் செலுத்துவதற்கானது. கடலக தொழில்நுட்ப பயிற்சிநெறி பெண்களுக்கு மட்டும். கடலக இயந்திர தொழில்நுட்ப பயிற்சி நெறி ஆகியவற்றிற்கான பயிற்சிகளில் சேரவிரும்புவோர் இம் மாதம் 22ஆம் திகதிக்கு முன்பாக யாழ்.பங்ஷால் வீதியிலமைந்துள்ள மேற்படி கல்லூரியுடன் தொடர்பு கொண்டு பதிவை மேற்கொள்ள முடியுமென உதவிப்பணிப்பாளர் இ.செபஸ்தியாம் பிள்ளை தெரிவித்துள்ளார். (1-160)

# சம்பந்தனுக்கு 'ஜயவேவா' கோஷம் எழுப்பி சிங்கள மக்கள் வரவேற்பு!

## அம்பாறை விகாரைக்குச் சென்ற வேளையில்

கல்முனை, ஜன.19

அம்பாறை சென்றல் காம்ப் விகாரைக்குச் சென்ற தமிழ் தேசியக்கூட்டமைப்புத் தலைவர் இரா.சம்பந்தனுக்கு ஆதரவு தெரிவித்து சிங்கள மக்கள் கரகோஷம் செய்து ஆரவாரத்துடன் வரவேற்றனர்.

அங்கு சென்ற சம்பந்தரை சூழ்ந்து கொண்ட நூற்றுக்கணக்கான சிங்கள மக்கள், ஐக்கிய தேசிய முன்னணியுடன் தமிழ் தேசியக்கூட்டடைப்பு ஏதாவது ஒப்பந்தம் செய்துள்ளதா என்பதை சிங்கள மொழியில் கூறவேண்டும் என்று அவரிடம் கோரினர்.

எவருடனும் நாங்கள் ஒப்பந்தம் செய்யவில்லை. ஜனாதிபதி மஹிந்தவுடனும் பொன்சேகாவுடனும் நாங்கள் பல தடவைகள் பேச்சுக்களில் ஈடுபட்டோம். தமிழ்பேசும் மக்க ளின் பிரச்சினைகளுக்கு பொன்சேகாவால் தீர்வு காணமுடியும். எனக்கருதியதால் அவரை ஆதரிக்க முடிவுசெய்தோம் - என்று சிங்களத்தில் விளக்கிக் கூறினார் - சம்பந்தன்.

அங்கு கூடியிருந்த சிங்கள மக்கள் சம்பந்தனுக்கு 'ஜயவேவா' (சம்பந்தனுக்கு வெற்றி வாழ்த்து) எனக் கோஷம் எழுப்பியபடி ஆடிப்பாடி மகிழ்ந்தனர். (ஒ-1)

## சரத் பொன்சேகாவின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவிக்கப்பட்டுள்ளது. குறித்த குழுவினர் தாக்குதலை நடத்திவிட்டுத் தப்பிச் சென்றுள்ளனர்.

இத்தாக்குதலில் கொல்லப்பட்டவர் 33 வயதான எச்.எம். தம்மிக்க ஹேரத் எனும் வர்த்தகராவார். இவரது தந்தை வாரியப்பொல அமாகடவர வித்தியாலயத்தின் முன்னாள் அதிபர் என்பது குறிப்பிடத்தக்கது.

இவரது சடலம் குருநாகல் வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட் டிருப்பதாகவும், இவ்வன்முறை தொடர்பில் இதுவரை ஐந்து சந்தேக நபர்களிடம் விசாரணைகள் நடத்தப்பட்டுள்ளன எனவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதேவே[illegible], தேர்தல் வன்[illegible] கள் அதிகரித்து[illegible] நிலையில் தேர்தலுடன்தொடர் புடைய மூன்றாவது கொலை இது என்பது குறிப்பிடத்தக்கது.

(அ-சி)




# பொன்சேகாவின்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கேட்டதற்கு, அந்த நாட்டின் மூத்த அதிகாரியொருவர் ''உறவுகள் செயற்படும் விதத்தை அது ஏற்கனவே சாதகமாக மாற்றிவிட்டது'' என்றார்.

எதிர்க்கட்சிகளின் பொதுவேட்பாளர் சரத் பொன்சேகா அதிகளவு ஊடக சுதந்திரம் மற்றும் சுயாதீன ஆணைக்குழுக்களை அமைத்தல் போன்ற வாக்குறுதிகளை வழங்கியுள்ளமை குறித்து அமெரிக்க அதிகாரி அதிகளவு நம்பிக்கையும் எதிர்பார்ப்பும் வெளியிட்டார்.

''எதிர்காலத்தைப் பற்றி எதிர்வு கூறுவதற்கு நான் தயக்கம் கொண்டுள்ளேன். வேட்பாளர்கள் பலவிதமான வாக்குறுதிகளை வழங்குவதும் பின்னர் அவற்றை நிறைவேற்றாமல் விடுவதுமே இதற்குக் காரணம். என்றாலும் ஜெனரல் பொன்சேகா சில நல்ல வாக்குறுதிகளை வழங்கியுள்ளார்'' என அந்த அதிகாரி குறிப்பிட்டார்.

எனினும், அமெரிக்கா சரத் பொன்சேகாவிற்கு நிதியுதவி வழங்குவதாக இலங்கையின் ஆளும் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் தெரிவித்த குற்றச்சாட்டுகளை வோஷிங்ரன் நிராகரித்துள்ளது.

மேலும் இலங்கை நீண்டகால நலனை அடிப்படையாகக் கொண்டு அமெரிக்காவுடன் நல்லுறவுகளை ஏற்படுத்த விரும்ப வேண்டும் என்று குறிப்பிட்ட அந்த அதிகாரி இலங்கையின் தேயிலை, ஆடைகள் போன்றவற்றுக்கான முக்கிய சந்தையாக மேற்குலகமே விளங்குவதைச் சுட்டிக் காட்டினார்.

மேற்குலகில் உள்ள இலங்கை பற்றிய ஆய்வாளர்கள் - குறிப்பாகப் புலம்பெயர்ந்த தமிழ் சமூகத்தினர் சரத் பொன்சேகா குறித்த இரு வேறுபட்ட கருத்துகளைக் கொண்டுள்ளனர். இவர்களே மேற்குலக நாடுகள் இலங்கை குறித்துக் கடுமையான [illegible]டுக்கவேண்டும் என வாதிடுபவர்கள்.

இலங்கையின் ஜனாதிபதியாக வர வேண்டும் என அமெரிக்கா கருதும் முதல் நபராக பொன்சேகா விளங்கமாட்டார் எனினும், அவர் வென்றால் அது அமெரிக்காவுடனான நல்லுறவுக்கான பாதையைத் திறக்கும் என அமெரிக்க மக்கள் கழகமொன்றைச் சேர்ந்த இலங்கை விவகார நிபுணர் ரொபேர்ட் ஓ பேர்ஸ்ட் குறிப்பிட்டார்.

இராணுவத்துக்கும் பொன்சேகாவுக்கும் உள்ள தொடர்பே அவரது பெயருக்குக் களங்கத்தை ஏற்படுத்துகின்றது. யுத்தக் குற்றங்கள் உண்மையில் இடம்பெற்றிருந்தால் அது அவருக்குத் தெரிந்திருக்கும். அவருக்கு அதில் தொடர்பிருக்கும் என்றும் ஓபேர்ஸ்ட் தெரிவித்தார்.

பொருளாதாரத் தேவை ஏற்பட்டாலொழிய வேறெந்தச் சந்தர்ப்பத்திலும் இலங்கை, மேற்குலகின் எதிரி நாடுகளின் பக்கம் திரும்பாது என ஜோர்ஜ் டவுன் பல்கலைக்கழகப் பேராசிரியர் அசோக பண்டாரகே தெரிவித்தார்.

தீவிர சிங்களத் தேசியவாதிகள் கூட இலங்கை மேற்குலகிலிருந்து துண்டிக்கப் படுவதை விரும்பமாட்டார்கள் என்றார் அவர்.

இதேவேளை, இலங்கைப் பொருள்களைப் பகிஷ்கரிக்க வேண்டுமென்ற பிரசாரத்தை முன்னெடுத்துவரும் 'பேர்ள்' அமைப்பைச் சேர்ந்த மனோரஞ்சன், சரத் பொன்சேகாவுக்கும் ராஜபக்ஷவுக்கும் இடையில் தெரிவு செய்வதற்கு எதுவுமில்லை என்றார்.

தேர்தலுக்குப் பின்னர் தமிழ் மக்கள் குறித்து எவ்வித கரிசனையும் இருக்காது என்றும் அவர் குறிப்பிட்டார்.

இதேவேளை, மஹிந்த ராஜபக்ஷவை வெறுக்கும் புலம் பெயர் தமிழர்களில் சிலர் பொன்சேகாவுக்குச் சந்தர்ப்பம் ஒன்றை வழங்கத் தயாராகவுள்ளனர்.

புலம் பெயர்ந்த தமிழர்கள் மஹிந்த தோற்கடிக்கப்படுவதை விரும்புகின்றனர். இது மாற்றங்களைக் கொண்டு வரும் என்றார் கனடா தமிழ் காங்கிரஸின் டேவிட் பூபாலபிள்ளை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

## வதந்தியும் வத்தி வைப்பும்

இலங்கையின் அடுத்த ஜனாதிபதி யார் என்பதைத் தீர்மானிக்கும் வாக்கெடுப்பு அடுத்த வாரத்தில் நடைபெறப் போகின்றது.

தேர்தல் பிரசாரம் இன்னும்கூட தமிழ்ப் பகுதிகளில் சூடுபிடிக்கவில்லை. விறுவிறுப்பை எட்டவில்லை. ஆனால் தென்னிலங்கையோ தேர்தல் பிரசார ஜுரத்தில் தகிக்கிறது.

தமிழர் பிரதேசத்தைப் பொறுத்தவரை அவர்களின் தீர்மானம் ஓரளவு புரிந்ததுதான். இனி நடக்கப் போகின்ற பிரசாரங்கள் அங்கு பெரிய மாற்றத்தை ஏற்படுத்தும் என்று எதிர்பார்ப்பதற்கில்லை. தமிழ் நாட்டில் தேர்தல்களை ஒட்டிப் பெரும் பண ஆறு புரண்டு ஓடும். கற்றை கற்றைகளாகக் காசு கைமாறும். பணத்தால் வாக்குகளை வாங்கும் கைங்கரியம் அங்கு என்றால், இலவச சைக்கிள்கள், மோட்டார் சைக்கிள்கள் என்று வாரி வழங்கும் தாராளம் தமிழர் பிரதேசத்தில் - குறிப்பாக வடக்கில் - தற்சமயம் அரங்கேறுகின்றது. தமிழகத்தில் ஆறாய் ஓடும் பணம் வாக்குகளாய்க் கைமாறுவது போல இங்கு இலவசமாக ஓடும் சைக்கிள்கள் வாக்குகளாய் மாறுமா என்பதைப் பொறுத்திருந்துதான் பார்க்கவேண்டும்.

எது, எப்படியோ தமிழர் தரப்பின் தீர்மானம் எத்தகையது என்பது வெளிப்படையானது. அது இங்கே பகிரங்கப்படுத்திக் காட்டித்தான் தெரியவேண்டும் என்பதல்ல.

வழமையாகத் தமிழ்பேசும் சிறுபான்மையினருக்கு எதிராகப் பேரினவாதத்தைக் கிளப்பி, அதன்மூலம் ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றும் தென்னிலங்கைத் தரப்புகள் இப்போதும் ஆட்சி அதிகாரத்தைத் தக்க வைத்துக்கொள்வதற்காக அதே இனவாதப் பூதத்தைக் கையில் எடுத்திருக்கின்றமைதான் துரதிஷ்டவசமானதாகும்.

இந்தத் தேர்தலில் என்ன நிலைப்பாடு எடுப்பது என்பது குறித்துத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இரு பிரதான வேட்பாளர்களுடனும் திறந்த மனதுடன் பேசியது. ஒருபுறம் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ. மறுபுறம் ஜெனரல் சரத்பொன்சேகாவும் ஐ.தே.க. தலைவர் ரணில் விக்கிரமசிங்கவும்.

இருதரப்புகளுடனும் பேசிய பின்னரே, தாம் ஆட்சியில் தொடர்வதற்கு மீண்டும் ஒரு தடவை ஆணை தரக்கோரும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை ஆதரிப்பதில்லை என்றும் எதிர்க்கட்சிகளின் பொதுவேட்பாளரான சரத்பொன்சேகாவை ஆதரிப்பது என்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முடிவு எடுத்தது.

அவ்வளவுதான். அதுவரை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஆதரவுக்காகக் கை நீட்டிய ஆளும் தரப்பு இனவாத அரசியலைக் கக்குவதற்குப் புறப்பட்டுவிட்டது.

ஏதோ தமிழர்களுக்குத் தனிஈழம் பிரித்துக் கொடுக்க ஜெனரல் சரத்பொன்சேகா உடன்பட்டுவிட்டார் என்பது போலவும், அதற்கான உடன்படிக்கை ஒன்றில் கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழுத்தலைவர் இரா.சம்பந்தனோடு அவர் ஒப்பமிட்டிருக்கிறார் என்ற மாதிரியும் பிரசாரங்களைத் தென்னிலங்கையில் முடுக்கிவிட்டிருக்கின்றது ஆளும்தரப்பு.

தமிழர் தாயகத்தின் மீது வரலாற்றில் என்றுமில்லாதவாறு மிகக் கொடூரமானதும், மிகக் குரூரமானதும், மிகக்கோரமானதுமான யுத்தத்தைத் தொடுத்துத் தமிழினத்துக்கு என்றுமில்லாதவாறு பேரழிவையும், போரழிவையும் ஏற்படுத்தி, அதன் தேசிய ஆன்மாவில் என்றும் ஆறாத ஆழமான வடுவை ஏற்படுத்தி, அந்த இனத்தை அடிமைப்படுத்திய மேலாதிக்க நினைப்பில் மிதக்கும் இந்த ஆட்சித் தரப்பு, அழிவின் விளிம்பில் அல்லாடும் இந்தச் சிறுபான்மை இனத்தோடு, இதன் பின்னரும் சமரசம் செய்து, நல்லிணக்கம் கண்டு, உடன்பட்டுப் போகும் தாராண்மைத்தனம் இல்லாமல் மேலாண்மைச் செருக்கோடுதான் விடயங்களைக் கையாள எத்தனிக்கின்றது.

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் தமிழர் தரப்பின் ஆதரவு தனக்கு இல்லை என்றதும், எதிர்க்கட்சிகளின் பொதுவேட்பாளர் சரத்பொன்சேகா தமிழர்களுக்குத் தனிநாடு வழங்க இணங்கி விட்டார் என்ற இனவாதத்தைத் தூண்டிவிடுகின்ற - அரசியல் ஆயுதத்தைக் கையிலெடுத்துப் பிரசாரத்தை முடுக்கி விட்டிருக்கும் ஆளும் தரப்பின் போக்கு அதனை துலாம்பரப்படுத்தி நிற்கின்றது.

ஆளும் தரப்பு இப்படித் தமிழீழத்தைத் தமிழருக்கு வழங்க தமிழ்த்தேசியக் கூட்டமைப்புடன் பொன்சேகா உடன்பாடு கண்டுவிட்டார் எனப் பிரசாரம் செய்ய, மறுபுறத்தில் தனது வேட்புமனு மூலம் ஆட்சியிலிருக்கும் ஜனாதிபதியின் வெற்றியை உறுதிபடுத்தம் செயற்பாட்டில் துடித்துக்கொண்டு இறங்கியிருக்கும் சிவாஜிலிங்கமோ மறுவளமாகப் பிரசாரத்தை முன்னெடுக்கிறார்.

தமிழர் தாயகத்தை மூன்று துண்டுகளாக்கிவிட தமிழ்க் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன், எதிரணியின் பொதுவேட்பாளர் சரத் பொன்சேகாவிடம் இரகசிய ஒப்பந்தம் செய்துவிட்டார் என்று புதுக்கதை அவிழ்த்து விடுகிறார் அவர். 'சரத்பொன்சேகாவிற்கு விழக்கூடிய தமிழ் வாக்குகளை அவருக்கு விழவிடாமல் பிரித்து நான் சுருட்டிக் கொள்கிறேன். அதன்மூலம் உங்கள் தரப்பின் வெற்றியை உறுதிப்படுத்த உதவுவேன்' என்று ஆளும் தரப்போடு 'இரகசிய உடன்பாடு' கண்டவர் யார் என்பது தமிழர்களுக்கு நன்கு தெரியும்.

ஆட்சியிலிருக்கும் ஜனாதிபதியின் வெற்றிக்காகத் தமிழ்த் தேசியத்தை விற்று, சரணாகதி அரசியல் நடத்தும் பிரகிருதிகள் யார் என்பதும் தமிழர்களுக்குப் புரியும். தனித்தமிழீழம் அமைக்க எதிரணிப் பொது வேட்பாளருடன் உடன்பாடு கண்டு விட்டது தமிழ்க் கூட்டமைப்பு என்ற தென்னிலிங்கை வதந்தி ஒருபுறம். தமிழர் தாயகத்தை மூன்று துண்டுகளாக்க அதே பொதுவேட்பாளருடன் தமிழ்க்கூட்டமைப்பு உடன்பாடு கண்டுவிட்டது என்ற வடபகுதியின் வத்திவைப்பு மறுபுறம். பேரினவாதத்தின் வதந்தி தென்னிலங்கையில் எடுபடுமோ என்னவோ தெரியவில்லை. ஆனால் வடபகுதியின் வத்திவைப்பு மட்டும் தமிழர்களிடம் பற்றிக் கொள்ளாது, பிசுபிசுத்து நூர்ந்து போகும் என்பது உறுதி.

# வடக்கில் மீள் குடியேற்றப்பட்ட பகுதிகளில் கல்வி நடவடிக்கை சிறப்பாக முன்னெடுப்பு

## வடமாகாணக் கல்வியமைச்சின் செயலாளர் சொல்கிறார்

கொழும்பு, ஜன.19

மீள்குடியேற்றப்பட்ட பகுதிகளில் ஆரம்பிக்கப்பட்டுள்ள சகல பாடசாலைகளிலும் கல்வி நடவடிக்கைகள் சிறப்பாக இடம்பெறுவதாகவும் பெரும்பாலான பாடசாலைகள் திருத்தப்பட்டுள்ளதாகவும் வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளர் எல். இளங்கோவன் தெரிவித்தார்.

போர்ச் சூழல் காரணமாக சேதமான வட பகுதி பாடசாலைகள், ஆசிரியர் விடு திகள் என்பன 290 மில்லியன் ரூபா செலவில் திருத்தியமைக்கப்பட்டு வருவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

மீள்குடியேற்றப்பட்ட பகுதிகளில் உள்ள பாடசாலைகள் திருத்தப்படவில்லை எனவும் கல்வி கற்கக் கூடிய சூழல் அங்கு கிடையாது எனவும் தெரிவிக்கப்படும் குற்றச்சாட்டை அமைச்சின் செயலாளர் முழுமையாக நிராகரித்தார்.

போர்ச் சூழல் காரணமாக சேதமான கிளிநொச்சி மாவட்ட பாடசாலைகளைத் திருத்த 50 மில்லியன் ரூபாவும், முல்லைத்தீவு மாவட்ட பாடசாலைகளைத் திருத்த 40 மில்லியன் ரூபாவும் மன்னார் மாவட்டப் பாடசாலைகளைத் திருத்த 50 மில்லியன் ரூபாவும் வவுனியா மாவட்டப் பாடசாலைகளைத் திருத்த 50 மில்லியன் ரூபாவும் யாழ்.மாவட்டப் பாடசாலைகளைத் திருத்த 100 மில்லியன் ரூபாவும் வழங்கப்பட்டுள்ளன.

மோதல்கள் காரணமாக கூடுதலாகச் சேதமான பாடசாலைகள் யாவும் திருத்தப்பட்டுள்ளதோடு சிறு சேதங்கள் ஏற்பட்ட பாடசாலைகளைத் திருத்தும் பணிகள் பூர்த்தியடைந்து வருகின்றன எனவும் செயலாளர் கூறினார்.

மீள்குடியேற்றம் நடத்தப்பட்டுள்ள சகல பிரதேசங்களிலும் கல்வி நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. மடு வலயத்தில் உள்ள 20 பாடசாலைகளில் கல்வி நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டதோடு துணுக்காய் வலயத்தில் 27 பாடசாலைகளும், கிளிநொச்சி மாவட்டத்தின் பூநகரி வலயத்தில் 17 பாடசாலைகளும், கரைச்சி வலயத்தில் 8 பாடசாலைகளும் மீள ஆரம்பிக்கப்பட்டுள்ளன. பூநகரியில் எஞ்சியுள்ள 6 பாடசாலைகளையும், கரைச்சியில் எஞ்சியுள்ள 3 பாடசாலைகளையும், மடு வலயத்தில் உள்ள 7 பாடசாலைகளையும் மீள ஆரம்பிக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

யாழ்.குடாநாட்டில் தங்கியுள்ள சுமார் 720 ஆசிரியர்கள் தினமும் பஸ்களில் பாடசாலைகளுக்கு அழைத்து வரப்பட்டு கல்வி நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இவர்களில் நூற்றுக்கும் அதிகமான ஆசிரியர்கள் பாடசாலைகளுக்கு அருகில் உள்ள வீடுகளில் தங்கி கற்பித்தல் செயற்பாட்டில் ஈடுபட்டு வருகின்றனர். இவர்களுக்குத் தேவையான பாதுகாப்பு மற்றும் வசதிகள் வழங்கப்பட்டு வருவதாக செயலாளர் கூறினார். (50-200)

## தற்காலிக இணைப்பு பெற்ற ஆசிரியர்களுக்கு இனிமேல் நிரந்தர வலயங்களிலேயே சம்பளம்

யாழ்ப்பாணம், ஜன.19

யாழ்.மாவட்ட பாடசாலைகளில் தற்காலிக இணைப்பு பெற்று கடமையாற்றும் ஆசிரியர்களுக்கு இனி நிரந்தரப்பாடசாலைகளின் வலய அலுவலகங்கள் மூலம் சம்பளம் வழங்கப்படவுள்ளது.

தற்காலிக இணைப்பு பெற்று கடமையாற்றும் ஆசிரியர்களுக்கு சம்பளம் வழங்கும் நடவடிக்கைகளை நிறுத்துமாறு அறிவிக்கப்பட்டுள்ளதாக கல்வித் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன.

தற்காலிக இணைப்பு பெற்று யாழ்.மாவட்டத்தில் கடமையாற்றிய ஆசிரியர்கள் தமது நிரந்தரப் பாடசாலைகளில் கடமைகளை பொறுப்பேற்று வருவதால் ஜனவரி மாதம் தொடக்கம் நிரந்தரப் பாடசாலைகளின் வலயக்கல்வி அலுவலகங்கள் ஊடாக சம்பளம் வழங்கப்படவுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

தற்காலிக இணைப்பு பெற்ற ஆசிரியர்களுக்கு ஆரம்ப காலத்தின் நிரந்தரப் பாடசாலைகளின் வலயக்கல்வி அலுவலகங்கள் ஊடாகவே சம்பளம் வழங்கப்பட்டதாகவும் கடந்த மே மாதம் தொடக்கம் தற்காலிக இணைப்புப் பெற்றுக் கடமையாற்றும் வலயக் கல்வி அலுவலகங்கள் ஊடாக சம்பளம் வழங்கப்பட்டு வந்ததாகவும் தெரிவிக்கப்பட்டது.

தற்காலிக இணைப்பு பெற்ற ஆசிரியர்கள் வேதன அளவுத் திட்டத்தின் ஆரம்பச் சம்பளத்தினையே இதுவரை பெற்று வந்ததாகவும் கடந்த ஐந்து வருடங்களாக சம்பள ஏற்றம், சம்பள அதிகரிப்பு எதுவுமின்றி சம்பளத்தினை மாதாந்தம் பெற்று வந்ததாகவும் தெரிவிக்கப்பட்டது. (50-207)

## 12 உள்ளூராட்சி மன்றங்களுக்கு 'பிக்கப்' வாகனங்கள் வழங்கப்பட்டன

யாழ்ப்பாணம்,ஜன,19

யாழ்.மாவட்டத்தில் உள்ள 12 உள்ளூராட்சி மன்றங்களுக்கு தலா ஒவ்வொரு 'பிக்கப்' வாகனங்கள் கடந்த 16 ஆம் திகதி வழங்கப்பட்டன.

மாகாண உள்ளூராட்சி அமைச்சர் ஜனக பண்டார தென்னக்கோன், வட மாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜீ.ஏ.சந்திரசிறி ஆகியோரால் தம்புள்ளவில் உள்ள யாப்பகம விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்ற நிகழ்வில் வைத்து இந்த வாகனங்கள் கையளிக்கப்பட்டன.

வடக்கின் வசந்தம் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் ஓர் அங்கமாக கையளிக்கப்பட்ட இந்த 12 'பிக்கப்' வாகனங்களும் உள்ளூராட்சி மன்றங்களின் செயலாளர்களின் பாவனைக்கென வழங்கப்பட்டுள்ளன.

உள்ளூராட்சி மன்றங்களின் பயன்பாட்டுக்கு தேவையான வாகனங்களின் விவரங்களை மாகாண மற்றும் உள்ளூராட்சி அமைச்சர் ஜனக பண்டார தென்னக்கோன் கோரியிருந்தார். அதற்கமைவாக வழங்கப்பட்ட விவரங்களை அடிப்படையாகக் கொண்டே இந்த வாகனங்கள் வழங் கப்பட்டதாக யாழ்மாவட்ட உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திருமதி. மதுமிதா வசந்தகுமார் தெரிவித்தார். (50-14)

# 10 ஆயிரம் கிலோ கழிவுத்தேயிலையுடன் இரு லொறிகள் கண்டியில் சிக்கின

## பிரதான வர்த்தகர் தலைமறைவு

கொழும்பு, ஜன. 19

பாவனைக்குதவாத சாயமேற்றப்பட்ட பத்தாயிரம் கிலோ கிழிவுத் தேயிலையை ஏற்றி வந்த இரு லொறிகள் கைப்பற்றப்பட்டதுடன் அவற்றிலிருந்த நான்குபேர் சந்தேகத்தின்பேரில் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

கழிவுத் தேயிலையை ஏற்றிய இந்த இரு லொறிகளும் கொழும்பு-கண்டி பிரதான வீதி நூகே சந்தியில் பயணித்துக்கொண்டிருந்தபோது பொலிஸாரால் மடக்கிப்பிடிக்கப்பட்டன எனத் தெரிவிக்கப்பட்டது.

பொலிஸ் விசேட நடவடிக்கைக் குழுவினரால் கடந்த 15 ஆம் திகதி இந்த லொறிகள் மடக்கிப் பிடிக்கப்பட்டதுடன், லொறிகளில் இருந்த சந்தேகநபர்களும் கைதுசெய்யப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

கைது செய்யப்பட்டவர்களிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின்பின், இந்த கழிவுத்தேயிலை வியாபாரத்தை நடத்திச் செல்லும் பிரதான வர்த்தகரைத் தேடிப்பிடிப்பதற்கு பொலிஸார் தீவர நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளனர் எனவும் குறிப்பிட்ட வர்த்தகர் தலைமறைவாகியுள்ளாரெனவும் தெரியவருகின்றது.

கைது செய்யப்பட்டவர்கள் மேலதிக விசாரணைக்காக பேலியகொடை பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

பொலிஸ் விசேட நடவடிக்கைப் பிரிவில் கட்டளையிடும் அதிகாரி கே.எம்.எல். சரத்சந்திரவின் மேற்பார்வையில், பொலிஸ் அத்தியட்சகர் வருண ஜயசுந்தரவின் தலைமையில் சென்ற பொலிஸ் குழுவே இந்த லொறிகளை மடக்கிப் பிடித்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

### நாளை

| | |
|---|---|
| தை 7 | 20.01.2010 |
| | புதன்கிழமை |
| திதி: | பஞ்சமி |
| | மு.இ. 10.28 வரை |
| நட்சத்திரம்: | பூரட்டாதி |
| | பி.ப. 04.24 வரை |
| சுபநேரம்: | 05.05-06.35 வரை |
| [illegible] | [illegible] |

## ஆசிரியர்களைக் குறிவைக்கும் கேகாலை அரசியல்வாதிகள்

மாவனல்லை, ஜன. 19

நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் கேகாலை மாவட்ட ஆசிரியர்களின் வாக்குகளைப் பெறுவதற்காக அரச தரப்பிலும், எதிர்த்தரப்பிலும் பகீரதப் பிரயத்தனங்கள் மேற்கொள்ளப்படுகின்றன எனத் தெரிவிக்கப்படுகின்றது.

அரச தரப்பின் முக்கிய அமைச்சர்களும், தொகுதி அமைப்பாளர்களும் போட்டி போட்டுக்கொண்டு இம்மாவட்டத்திலுள்ள ஆசிரியர்களைத் தமது இருப்பிடங்களுக்கே அழைத்து அரசிற்கு ஆதரவு அளிக்க கோருகின்றனர்.

இதேபோன்று,சரத்பொன்சேகாவை ஆதரிக்கும் படியும், நேர்மையான ஊழலற்ற ஓர் அரசியல் கலாசாரத்தை உருவாக்க உதவும்படியும் எதிர்த்தரப்புத் தொகுதி அமைப்பாளர்கள் ஆசிரியர்களின் ஆதரவைக் கோருகின்றனர்.

இதன்பொருட்டு ஆசிரியர்களுக்குப் போக்குவரத்து வசதிகளும், சிற்றுண்டி உபசார என்பனவும் வழங்கப்படுகின்றனஎன்பதும்குறிப்பிடத்தக்கது.

### தாகசாந்தி மண்டப புனரமைப்புப் பணி பூர்த்தி

வழக்கம்பரை முத்துமாரி அம்மன் கோயிலின் புனரமைக்கப்பட்ட தாக சாந்தி மண்டபம் பால் காய்ச்சி வழிபாடுகளுடன் திறந்துவைக்கப்பட்டது.

சிவஸ்ரீ சு.சுந்தரராசக் குருக்கள் வழிபாட்டு நிகழ்வை நிறைவுசெய்து வைத்தார். லண்டனில் வாழும் அமரர் சிவப்பிரகாசம் குடும்பத்தினர் வழங்கிய மூன்றரை லட்சம் ரூபா நிதியைக் கொண்டு இந்தப் புனரமைப்புப் பணிகள் நடைபெற்றன. (ஒ-28)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



யாழ். மேல்நீதிமன்ற நீதிபதி இ.த.விக்னராஜாவின் வாழ்க்கைத் துணைவியார் சாந்திகுமாரி நினைவாக 'சவால்கள் சாதனைகள் சாந்தி' என்னும் நினைவேடு வெளியீட்டு நிகழ்வு நேற்று திங்கட்கிழமை யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் இடம்பெற்ற போது எடுக்கப்பட்ட படங்கள் இவை.

நீதிபதி இ.த.விக்னராஜா மேடையில் வைக்கப்பட்டிருந்த துணைவியார் சாந்திகுமாரியின் உருவப்படத்திற்கு விளக்கேற்றுவதை முதல் படத்திலும், உயர் நீதிமன்ற நீதியரசர் கே.ஸ்ரீபவன் மங்கள விளக்கேற்றுவதையும், நினைவேட்டின் முதல் பிரதியை வணபிதா ஜஸ்ரின் வி.ஞானப்பிரகாசத்திற்கு நீதியரசர் ஸ்ரீபவன் வழங்குவததையும் மேல்வரிசைப் படங்களிலும்-

நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ ஞானசம்பந்தபரமாச்சார்ய சுவாமிகள், யாழ் ஆயர் அதிவண.தோமஸ் சௌந்தரநாயகம், யாழ்.நாகவிகாராதிபதி வண.விமலதேரர், வண.பிதா.ஜஸ்ரின் வி.ஞானப்பிரகாசம் ஆகியோர் உரையாற்றுவதையும், கூடியிருந்த மக்களில் ஒரு பகுதியினரையும் இரண்டவாது வரிசைப்படங்களிலும்-

இந்துமாமன்ற பொதுச் செயலாளர் கே.நீலகண்டன், உடுவில் மகளிர் கல்லூரி அதிபர் ஷிராணிமில்ஸ், யாழ்.பல்கலைக்கழக ஆங்கிலப்பிரிவின் தலைவர் எஸ்.சுந்தரேஸ்வரன், தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானத் தலைவர் ஆறு.திருமுருகன் ஆகியோர் உரையாற்றுவதையும், நிகழ்வில் கலந்து கொண்ட பிரமுகர்களின் ஒரு பகுதியினரையும் கீழ் வரிசைப்படங்களிலும் காணலாம்.

(படங்கள்: லக்ஷ்மன், உமா)

# அதிக தேர்தல் வன்முறைகள்: அமெரிக்கா ஆழ்ந்த கவலை

## அமைதியான வாக்களிப்பை உறுதிசெய்ய வலியுறுத்து



கொழும்பு, ஜன.19

இலங்கையில் நடைபெற்றுவரும் அனைத்துத் தேர்தல் வன்முறைகள் குறித் தும் அரசு நீதியான பொலிஸ் விசாரணை களை மேற்கொள்ள வேண்டும் என வேண்டுகோள் விடுத்துள்ள அமெரிக்கா அனைத்து மக்களும் வன்முறைகள், அச் சுறுத்தல்கள் அற்ற விதத்தில் ஜனவரி 26 ஆம் திகதி வாக்களிக்க வேண்டும் எனத் தான் விரும்புவதாகக் குறிப்பிட்டுள்ளது.

தேர்தல் வன்முறைகளுக்கு மக்களுடன் சேர்ந்து ஜனநாயகமும் பலியாகிறது எனக் கவலை வெளியிட்டுள்ள இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் பற்றீசியா புட்டெனிஸ் இதுபற்றி மேலும் குறிப்பிட்டுள்ளவை வருமாறு:-

இலங்கையில் நடைபெறவுள்ள தேர்தல் தொடர்பாகக் கடந்த வாரம் அமெரிக்கத் தூதரகம் இருஅறிக்கைகளைவெளியிட்டது.

இலங்கையில் தேர்தல் சுதந்திரமானதாக, நேர்மையானதாக, நம்பகத்தன்மை மிக்கதாக, வன்முறைகள் அற்றதாக இடம்பெறவேண்டும் என்ற எமது முக்கிய கரிசனையை வலியுறுத்துவதாக அந்த அறிக்கைகள் அமைந்திருந்தன.

இந்தத் தேர்தல் பிரசாரத்தில் அமெரிக்கா நடுநிலையாக உள்ளதுடன் எவர் வென்றாலும் இலங்கையுடனான எமது வலுவான உறவுகள் தொடரும்.

மேலதிக சிந்தனைகள், கருத்துகள் சிலவற்றை உங்களுடன் பகிர்ந்து கொள்ள விரும்புகின்றேன்.

### முக்கியத்துவம் வாய்ந்த தேர்தல்

இலங்கை வரலாற்றில் இதுவே மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த தேர்தல். பல தசாப்தங்களுக்குப் பின்னர் முதல் தடவையாக இலங்கையின் அனைத்துப் பகுதியைச் சேர்ந்தவர்களும் நாட்டுக்குத் தலைமை தாங்குவது யார் என்பதைத் தெரிவு செய்வதற்கான தமது ஜனநாயக உரிமையைப் பயன்படுத்தவுள்ளனர்.

இலங்கை நீண்டகால அரசியல் விவகாரங்களைக் கொண்ட நாடு. இந்தத் தேர்தல்கள் அந்தப் பாரம்பரியத்தின் தொடர்ச்சியாக அமைகின்றன.

இந்தத் தேர்தலில் அமெரிக்காவின் விருப்பத்துக்குரிய வேட்பாளர் என எவரும் இல்லை. எமது அறிக்கைகளும் செயற்பாடுகளும் சமநிலை தளராதவையாக அமைந்திருப்பதை உறுதி செய்ய நாம் விசேட கவனம் எடுத்துள்ளோம்.

மேலும் ஜனநாயக செயற்பாட்டிலேயே கவனம் செலுத்துகிறோம். அதன் முடிவு குறித்து அல்ல. ஜனநாயக நாடென்ற வகையில் இலங் கையர்கள் இந்த வரலாற்றுச் சந்தர்ப்பத் தைப் பயன்படுத்திக் கொள்வதைக் காண விரும்புகிறோம்.

### ஜனநாயக செயற்பாடுகளில் ஆர்வம் தேவை

அவர்கள் ஜனநாயக செயற்பாடுகளில் ஆர்வத்துடன் செயற்பட வேண்டும். தமது விருப்பத்திற்குரியவருக்கு வாக்களிக்கவேண்டும். இலங்கையின் முக்கியமான விடயங்கள் குறித்து விவாதிக்க வேண்டும். தாங்கள் தெரிவு செய்பவர்களுக்கு சுதந்திரமாக வாக்களிக்க வேண்டும்.

இதில் மிக முக்கியமானது என்னவென்றால், இலங்கையர்கள் இவை அனைத்தையும் வன்முறைகள்,அச்சுறுத்தல் பழிவாங்கப்படுதலின்றிச் செய்ய வேண்டும். கடந்த வாரம் வன்முறைகள் தீவிரமாக அதிகரித்தன.

செவ்வாய்க்கிழமை பஸ்ஸில் சென்று கொண்டிருந்த பெண்மணியொருவர் கொல்லப்பட்டார். சனிக்கிழமை இன்னொரு நபர் உயிரிழந்தார். ஞாயிற்றுக்கிழமை இரவு மற்றுமொரு உயிர் பறிக்கப்பட்டது எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

### ஜனநாயகமும் பலியாகி உள்ளது

இந்தக் கொடூரமான தாக்குதல்களில் பொதுமக்கள் மாத்திரமல்ல. ஜனநாயகமும் பலியாகியுள்ளது.

இவ்வாறான வன்முறைகள் இலங்கையின் ஜனநாயக உரிமைகளையும், பாரம்பரியங்களையும் பாதிக்கின்றன.

சகல தேர்தல் வன்முறைகள் தொடர்பாகவும் பொலிஸாரை விசாரணை செய்யுமாறு அரசு உத்தரவுவிட வேண்டும் என நாங்கள் வேண்டுகோள் விடுக்கிறோம். தாக்கப்பட்டது எந்தத் தரப்பாக இருந்தாலும் விசாரணை இடம்பெற வேண்டும்.

தேர்தலின் இறுதி வாரத்திற்குள் நாடு நுழைந்துள்ள நிலையில் இந்த வன்முறைகள் தணியும். ஜனவரி 26 ஆம் திகதி அனைவரும் வன்முறை, அச்சுறுத்தல் அற்ற விதத்தில் வாக்களிக்கலாம் என எதிர்ப்பார்கின்றோம்-எனத் தெரிவித்துள்ளார்.(அ-சி)

# பாடநூல்களை எடுத்துச் சென்ற ஆசிரியர் விபத்தில் படுகாயம்

இரத்தினபுரி,ஜன. 19

கல்வி வெளியீட்டுத் திணைக்களத்தால் நடமாடும் காரியாலயத்தில் பெற்றுக்கொண்ட பாடப்புத்தகங்களைத் தான் பணிபுரியும் பாடசாலைக்கு விநியோகிப்பதற்காக அவற்றை சைக்கிளில் எடுத்துக்கொண்டு பயணித்த ஆசிரியர் ஒருவர், எதிரே வந்த பஸ்ஸுடன் மோதுண்டு பலத்த காயங்களுடன் இரத்தினபுரி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டது.

இரத்தினபுரி சீவலி மத்திய மகா வித்தியாலயத்தில் கல்வி வெளியீட்டுத் திணைக்களம் ஏற்பாடு செய்திருந்த நடமாடும் சேவையில் புத்தகங்களைப் பெற்றுக்கொண்டு வேறொருவருடன் சைக்கிளில் பயணித்தபோதே இவ்விபத்து இடம்பெற்றதாகக் கூறப்படுகின்றது.

பெல்மதுளை, ஹந்துருகந்த பிரதேசத்தில் உள்ள பாடசாலையொன்றில் பணிபுரியும் இந்த ஆசிரியர் இரத்தினபுரி வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தியாவுக்கு எதிராகத் தொடர்ந்து செயற்படுகின்றது பாகிஸ்தான்

## வெளிவிவகாரச் செயலாளர் நிருபமா சொல்கிறார்



புதுடில்லி,ஜன.19

''பாகிஸ்தானின் எல்லைகள், பயங்கரவாதிகள் மூலம் இந்தியாவுக்கு எதிராக தொடர்ந்து பயன்படுத்தப்பட்டு வருகின்றன''- இவ்வாறு வெளியுறவுத்துறை செயலாளர் நிருபமா ராவ் தெரிவித்துள்ளார்.

தனியார் தொலைக்காட்சி ஒன்றுக்கு அளித்த பேட்டியில், நிருபமா ராவ் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் கூறியவை வருமாறு:-

காஷ்மீரில் சமீபத்தில் நடந்த தற்கொலைப் படை தாக்குதல் சம்பவங்கள், எல்லைப் பகுதியில் நடக்கும் பயங்கரவாதிகளின் ஊடுருவல்கள் எல்லாம், இந்தியாவுக்கு எதிராக, பாகிஸ்தான் தொடர்ந்து செயல்படுவதையே காட்டுகிறது.

தங்கள் அதிகாரத்துக்குட்பட்ட பகுதியில், பயங்கரவாத நடவடிக்கைகளை பாகிஸ்தான் அரசு கட்டுப்படுத்தவில்லை என்பது, இதன்மூலம் தெரிகிறது.பாகிஸ்தான் அரசின் உதவியில்லாமல், பயங்கரவாதிகளால்இந்தசெயல்களைசெய்யமுடியாது.

கடந்த 20 ஆண்டுகால சம்பவங்களில், இதை நாம் நன்கு தெரிந்து கொண்டுள்ளோம். பொதுவாக குளிர்காலத்தில் காஷ் மீர் எல்லையில் அதிக ஊடுருவல் இருக்காது. ஆனால், இப்போது கடும் பனியிலும் ஊடுருவல்கள் நடக்கின்றன. -என்றார்.

## சமாஜவாதியின் செயலர் அமர்சிங்கின் ராஜிநாமா ஏற்பு

லக்னோ, ஜன. 19

சமாஜவாதி கட்சியின் அனைத்து பொறுப்புகளிலிருந்தும் விலகுவதாக அதன் பொதுச் செயலர் அமர்சிங் அளித்திருந்த இராஜிநாமாக் கடிதத்தை அக்கட்சித் தலைவர் முலாயம் சிங் ஞாயிற்றுக்கிழமை ஏற்றுக்கொண்டார்.

கடந்த இரு வாரங்களுக்கு முன் கட்சியிலிருந்து விலகுவதாகக்கூறி முலாயம் சிங் யாதவிடம் இராஜிநாமா கடிதம் அளித்திருந்தார் அமர்சிங். ஆனால் அவரது இராஜிநாமா வை ஏற்காமல் சமாதானப்படுத்தும் முயற்சியில் ஈடுபட்டார் முலாயம். இந்நிலையில் இராஜிநாமா கடிதத்தை அமர்சிங் திரும்பப் பெறுவார் என எதிர்பார்த்திருந்த முலாயமுக்கு ஏமாற்றமே மிஞ்சியது.

இதைத் தொடர்ந்து ஞாயிற்றுக்கிழமை அவரது இராஜிநாமாவை ஏற்றுக் கொண்ட தாக லக்னோவில் செய்தியாளர்களிடம் பேசும்போது தெரிவித்தார்.

# முதலமைச்சர் பதவியிலிருந்து கருணாநிதி ஓய்வு பெறமாட்டார்

## மத்திய அமைச்சர் அழகிரி தெரிவிப்பு

தூத்துக்குடி,ஜன.19

முதல்வர் பதவியிலிருந்து கருணாநிதி ஓய்வு பெற மாட்டார். அவருக்கு ஓய்வே கிடையாது என மத்திய அமைச்சர் அழகிரி தெரிவித்தார். கடந்த மாதம் நடந்த திருச்செந்தூர் சட்டசபை இடைத்தேர்தலில் தி.மு.க சார்பில் போட்டியிட்ட அனிதா ராதாகிருஷ்ணன், 46,861 வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றார்.

அதற்காக, அக்கட்சி சார்பில் வாக்காளர்களுக்கு நன்றி தெரிவிக்கும் கூட்டம் நேற்று முன்தினம் தொகுதியில் பல இடங்களில் நடந்தது.

இதில் பங்கேற்ற மத்திய அமைச்சர் அழகிரி நிருபர்களிடம் கூறியவை வருமாறு:-

முதல்வர் கருணாநிதி, தினம் ஒரு மக்கள் நலத்திட்டத்தை செயல்படுத்தி வருகிறார். 108 இலவச அம்புலன்ஸ் சேவை, மருத்துவ காப்பீட்டு திட்டம் போன்வற்றிக்கு மக்களிடம் நல்ல வரவேற்பு உள்ளது.

'ஸ்பிக்' உர ஆலையை இம்மாத இறுதியில் திறந்து இயக்கத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. லோக்சபாவில் தமிழில் பேச அனுமதிக்க வேண்டுமென நான் மட்டும் கேட்கவில்லை. தி.மு.க கூட்டணியின் ஒட்டு மொத்த எம்.பிக்களும் அதற்காக சபாநாயகரிடம் கோரிக்கை தந்துள்ளோம். எனவே, அங்கு தமிழில் பேச அனுமதிக்க வேண்டும். மத்திய அமைச்சர் சிதம்பரம், தமிழில் தான் பதவிப் பிரமாணம் ஏற்றுக்கொண்டார். ஆனால், ஊடகங்களில் என்னைப் பற்றி மட்டுமே தேவையில்லாத செய்திகள் வருகின்றன. நான், மத்திய அமைச்சர் பதவியில் இருந்தபடியே தமிழக மக்களுக்கும், கட்சித் தொண்டர்களுக்கும் நல்லது செய்ய முடியும்.

நான் ஏற்கனவே கூறியபடி தேறாத அக்கட்சி(தே.மு.தி.க.,) தற்போது கூட்டணி தேடும் கட்சியாக மாறிவிட்டது. கிரிக்கெட்டிலிருந்து ஓய்வு பெறப்போவதாகக் கூறிவரும் டெண்டுல்கர், தொடர்ந்து விளையாடி வருகிறார். தமிழக முதல்வர் பதவியிலிருந்து தலைவர் (கருணாநிதி) ஓய்வு பெற மாட்டார்; அவருக்கு ஓய்வே கிடையாது - என்றார்.

## இந்தியச் செய்திகள்

# முன்னாள் முதல்வர் ஜோதிபாசுவின் உடல் கொல்கத்தா மருத்துவக் கல்லூரிக்குத் தானம்!

கல்கத்தா,ஜன.19

மறைந்த மேற்கு வங்க முன்னாள் முதலமைச்சர் ஜோதிபாசுவின் உடல்



கொல்கத்தாவில் உள்ள எஸ்.எஸ்.கே.எம். அரச ஆஸ்பத்திரியில் வைத்து மருத்துவக் கல்லூரிக்கு தானமாக வழங்கப்பட்டது.

ஜோதிபாசு தனது கண்களையும், உடலையும் தானமாக வழங்குவதாக அறிவித்து இருந்தார். எனவே நேற்று முன்தினம் ஆஸ்பத்திரியில் அவர் மரணம் அடைந்ததும், அவரது கண்கள் அகற்றப்பட்டன.

மேலும் அவரது விருப்பப்படி, உடலும் மருத்துவ கல்லூரி மாணவர்களின் ஆராய்ச்சிக்கு தானமாக வழங்கப்பட்டது.

ஜோதிபாசுவின் மறைவுக்கு அனுதாபம் தெரிவிக்கும் வகையில், மேற்கு வங்காள மாநிலத்தில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை அரசு விடுமுறை விடப்பட்டு உள்ளது.

ஜோதிபாசுவின் மரணத்துக்கு பல்வேறு கட்சிகளின் தலைவர்களும் இரங்கல் தெரிவித்து உள்ளனர். தி.மு.க.வின் சார்பில் அக்கட்சியின் நாடாளுமன்ற குழு தலைவர் டி.ஆர்.பாலு, ஜோதிபாசுவின் உடலுக்கு அஞ்சலி செலுத்தினார்.

# காங்கிரஸ் கட்சியின் உறுப்பினர்களின் எண்ணிக்கை 3 கோடியால் குறையுமாம்!

## ராகுல் காந்தியின் நடவடிக்கையின் பிரதிபலிப்பு

புதுடில்லி,ஜன.19

காங்கிரஸ் கட்சியில் போலி உறுப்பினர்களைச் சேர்ப்பதற்க்கு அக்கட்சியின் பொதுச் செயலர் ராகுல், அதிரடி 'செக்' வைத்துள்ளார். படம் மற்றும் இருப்பிடச் சான்றிதழ் இல்லாதவர்களை உறுப்பினர்களாகச் சேர்க்க முடியாது என, கட்சித் தலைமை அறிவித்துள்ளது.

இதனால், காங்கிரஸ் உறுப்பினர் எண்ணிக்கை கணிசமாகக் குறையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

காங்கிரஸ் பொதுச் [illegible]லர் ராகுல், அடுத்த பொதுத் தேர்தலுக்கான பணிகளை தற்போதே ஆரம்பித்துள்ளார். விரைவில் நடக்கவுள்ள உத்தரப்பிரதேச சட்டசபை தேர்தலை, இதற்கு முன்னோட்டமாக அவர் கருதுகிறார். இதையடுத்து, காங்கிரஸ் கட்சியில் அமைப்பு ரீதியான தேர்தலை நடத்த அவர் ஏற்கனவே உத்தரவிட்டுள்ளார். ஒவ்வொரு மாநிலத்திலும் கட்சிக்கு புதிய உறுப்பினர்களை சேர்த்து, நகர, ஒன்றிய மற்றும் மாவட்ட அளவிலான நிர்வாகிகள் தேர்தலை நடத்துவதற்கும் அவர் உத்தரவிட்டுள்ளார். இதற்கான பணிகள், நாடு முழுவதும் தீவிரமாக நடந்து வருகின்றன. ஒவ்வொரு மாநிலத்திலும் கட்சிக்கு உறுப்பினர்களை சேர்க்கும் நடவடிக்கை மும்முரமாக நடந்து வருகிறது.



இதில், போலி உறுப்பினர்கள் சேர்க்கப்பட்டுள்ளதாக புகார் எழுந்துள்ளது. குறிப்பாக, ஒவ்வொரு மாநிலத்திலும், கட்சி யின் முக்கிய பொறுப்பை வகிக்கும் நிர்வாகிகள், தங்களின் பதவியை தக்க வைத்துக் கொள்வதற்கு முயற்சிக்கின்றனர். இதன் ஒரு பகுதியாக, தங்கள் மாநிலத்தில் கட்சி பலமாக இருப்பதை காட்டுவதற்காக, பெரும் எண்ணிக்கையான போலி உறுப்பினர்களைச் சேர்க்கும் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளனர். இது, காங்கிரஸ் பொதுச் செயலர் ராகுலின் கவனத்துக்குக் கொண்டு செல்லப்பட்டது. போலி உறுப்பினர் சேர்க்கைக்கு, 'செக்' வைக்கும் அதிரடி நடவடிக்கைகளில் அவர் தற்போது களம் இறங்கியுள்ளார். இதன் ஒரு பகுதியாக, படம் மற்றும் தகுந்த இருப்பிடச் சான்றிதழ் இணைக்கப்படாத உறுப்பினர்களின் விண்ணப்பத்தை ஏற்க வேண்டாம் என, கட்சியின் மேலிட தலைவர்களிடம் இருந்து உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

# இந்தியாவுக்கு எதிரான செயல்களை தடுத்து நிறுத்த நேபாள அரசிடம் வலியுறுத்து

## வெளியுறவுத்துறை அமைச்சர் கோரிக்கை

காத்மாண்டு,ஜன.19

இந்திய ரூபா நோட்டுகளை போலியாக அச்சிடுவது, போதை கடத்துவது போன்ற செயல்களை நேபாள அரசு அனுமதிக்கக் கூடாது என, மத்திய வெளியுறவுத் துறை அமைச்சர் கிருஷ்ணா வலியுறுத்தியுள்ளார்.

நேபாளத்தில் மூன்று நாள் பயணம் மேற்கொண்ட வெளியுறவு அமைச்சர் கிருஷ் ணா, அந்நாட்டு ஜனாதிபதி ராம் பரண் யாதவ், பிரதமர் மாதவ் குமார் நேபாள், மாவோயிஸ்ட் தலைவர் பிரசாந்தா உள்ளிட்ட தலைவர்களை சந்தித்து பேசினார்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தோனேஷியாவில் தடுத்துவைக்கப்பட்டுள்ள இலங்கை அகதிகள் குறித்து ஆஸி. அரசு மெத்தனம்

கொழும்பு, ஜன.19

இந்தோனேஷியாவின் மெராக் துறை முகத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ள இலங்கை அகதிகள் குறித்து ஆஸ்திரேலியா போதுமான நடவடிக்கைகளை மேற்கொள்ளவில்லை எனக் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

ஆஸ்திரேலியாவின் கிறீன்ஸ் கட்சி இக் குற்றச்சாட்டை முன் வைத்துள்ளது. இந்த நிலையில் இலங்கை அகதிகள் விடயத்தில் உரிய நடவடிக்கை முன்னெடுக்கப்பட வேண்டும் என நேற்று முதல் மெல்போர்னில் ஆர்ப்பாட்டம் ஒன்று நடைபெறுகின்றது.

ஆஸ்திரேலிய அரசு இலங்கை அகதிகள் தொடர்பில் செயற்படவில்லை என கிறீன்ஸ் கட்சியின் செனட் உறுப் பினர் சாரா அம்சன் யங் குற்றம் சாட்டியுள்ளார்.

இலங்கை அகதிகள் மனிதாபிமான மற்ற முறையில் நடத்தப்பட்டுள்ளனர் என்றும் அவர் தெரிவித்தார்.

கடந்த ஒக்ரோபர் மாதம் ஆஸ்திரேலியா சென்று கொண்டிருந்த வேளையில் இந்தோனேஷிய அதிகாரிகளால் பிடிக்கப்பட்ட அகதிகள் மெராக் துறைமுகத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

எனினும் படகில் இருந்து கீழிறங்கினால் தாங்கள் மீண்டும் இலங்கைக்கு அனுப்பப்படுவர் என்ற அச்சத்தில் நூற்றுக்கும் மேற்பட்ட நாள்கள் தொடர்ந்தும் கப்பலிலேயே தங்கி இருக்கின்றனர். அவர்களின் உடல்நிலை மிக மோசமான நிலையில் உள்ளது.

ஏற்கனவே வயிற்றுளைவினால் ஒருவர் உயிரிழந்த தோடு சிலர் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டும் இருந் தனர்.

இந்த நிலையில் அவர்கள் குறித்து முறையான தீர்மானமொன்றை எடுக்க வேண்டும் என நேற்று ஆர்ப்பாட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இந்த ஆர்ப்பாட்டத்தில் கிறீன்ஸ் கட்சியினரும் கலந்து கொண்டனர். (சி)

# சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் மருந்துகளுக்குத் தட்டுப்பாடு

## தனியார் கடைகளை நாடும் நோயாளர்கள்

யாழ்ப்பாணம், ஜன.19

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் மருந்துகளுக்கு தட்டுப்பாடு நிலவுவதால் நோயாளர்களை தனியார் கடைகளில் மருந்துகளைப் பெற்றுக்கொள்ளுமாறு அறிவுறுத்தப்படுவதாக நோயாளர்கள் தெரிவித்தனர்.

குறிப்பாக சிறு பிள்ளைகளுக்கான அநேக மருந்து வகைகள் கையிருப்பில் இல்லையென வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இதேவேளை தினமும் 400 இற்கு மேற்பட்ட நோயாளர்கள் வெளிநோயாளர் பிரிவில் சிகிச்சை பெற வருவதாகவும் இவர்களில் 100 இற்கு மேற்பட்ட குழந்தைகள் சிகிச்சைக்கு கொண்டு வரப்படுவதாகவும் இக் குழந்தைகளிற்கு வழங்க வேண்டிய 'பிரிட்டோன் சிறப்' கூட வைத்தியசாலையில் கையிருப்பில் இல்லை எனவும் கூறப்படுகின்றது.

வைத்தியசாலை விடுதிகளில் தங்கியிருப்போர் கூட தனியார் கடைகளில் மருந்துகள் வாங்கிப் பயன்படுத்துவதாக விடுதிகளில் தங்கி வெளியேறியவர்கள் தெரிவித்தனர்.

வைத்தியசாலைக்குரிய கடந்த வருட நான்காம் கந்தாயம், இவ் வருட முதலாம் கந்தாயம் ஆகியவற்றுக்குரிய மருந்துகள் இதுவரை வந்து சேராததால் மருந்துகளை வெளியில் வாங்குமாறு அறிவுறுத்தப்படுவதாகவும் நோயாளர்கள் தெரிவித்தனர். இதனிடையில் ஜனவரி 17ஆம் திகதி வரை 7500 இற்கு மேற்பட்டோர் வெளிநோயாளர் பிரிவில் சிகிச்சை பெற்றுள்ளதாக புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன. (ஒ-207)

# 31 ஆம் நாள் நினைவஞ்சலி

| தோற்றம் | | மறைவு |
|---|---|---|
| 20 | | 20 |
| 9 | | 12 |
| 1933 | | 2009 |



## அமிர்தலிங்கம் மாசிலாமணி

(நயினாதீவு, 5 ஆம் வட்டாரம்)

அன்பும் பண்பும் அமைதியுமே உருவான
அன்பு அண்ணாவே!
ஆழிசூழ் நயினைநகர் அம்பாள் அடிப்பாதம்
சென்று உறைந்தீரோ!
உங்கள் ஆத்மா சாந்தியடைய எல்லாம்
வல்ல இறைவனை வேண்டுகிறோம்.

35, அச்சுக்கூட லேன்,
கொக்குவில் கிழக்கு,
கொக்குவில். (94067) குடும்பத்தினர்.

# ஆத்மசாந்திப் பிரார்த்தனை

எமது ஆலயத்தின் நீண்ட காலமாக
ஆஸ்தான பாடகர், இப் பெயர்வு
காலங்களில் தளிர்த்தேயி நந்த ஆலயத்தில்
பிள்ளையார் கதை, பிள்ளையார் புராணம்,
கஜமுகன் உற்பத்திப் படலம், திருவாதவூரடிகள்
புராணம் ஆகியவற்றை அந்தக் காலத்தில்
நிறைவு செய்தவருமாகிய,

சைவத் தொண்டர்

## சுந்தரகுமார் லஷ்மிவிரதன்

அன்னார் சிவபதமெய்திய 31 ஆம்
நாளாகிய இன்று அன்னாரின் ஆத்ம
சாந்தியை பிரார்த்திக்கும் :

பரிபாலன சபையினரும், அடியார்களும்,
திருச்சிற்றம்பலம் பிள்ளையார் ஆலயம்,
நெடியகாடு,
வல்வெட்டித்துறை. (91032)

# நீங்கா நினைவலைகள்

| 65ஆம் ஆண்டு | | 25ஆம் ஆண்டு |
|---|---|---|
| லூசியா பிலிப்ஸ் | | ஜோண் பிலிப்ஸ் |
| 30.06.1902 | தோற்றம் | 01.05.1893 |
| 22.09.1945 | மறைவு | 19.01.1985 |





ஆண்டுகள் பல கடந்தாலும்
என்றும் உங்கள் நினைவுடன்...

854, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம். (94055) குடும்பத்தினர்.

# வீடு விற்பனைக்கு

நெல்லியடி - கொடிகாமம் வீதிக்கு
அண்மையில் நெல்லியடிச்
சந்தியிலிருந்து 200மீற்றர் தூரத்தில்
புதிய கல்வீடு இரண்டு பரப்பு
நிலத்துடன் விற்பனைக்குண்டு.
மேலதிக விபரங்களுக்கு :
0778507064, 0776302085
என்ற தொலைபேசி இலக்கத்துடன்
தொடர்பு கொள்ளவும்.
இ.இந்திரன். (92831)

# கண்ணீர் அஞ்சலி



எமது சக அலுவலகமான காரைநகர்
பிரதேசசபையின் பிரதம முகாமைத்துவ
உதவியாளராகக் கடமையாற்றிய

**அமரர் சுப்பிரமணியம் சிவஞானம்**

அவர்களின் திடீர் மறைவினால் துயருற்றிருக்கும்
குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத்
தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய
எல்லாம் வல்ல ஈழத்துச் சிதம்பர தில்லைக்
கூத்தனைப் பிரார்த்திக்கின்றோம்.

உதவி அரசாங்க அதிபர் பணிமனை,
காரைநகர்.

உதவி அரசாங்க அதிபர்,
உத்தியோகத்தர்கள்.

(564196)

# கொனிக்கா லாப்

## ஆள்கள் தேவை

01. புகைப்படப்பிடிப்பாளர்.
02. கிராபிக்ஸ் டிசைனர்.
03. படங்கள் பிறேம் வேலைகள்.
04. லப் வேலைகள் (பயிலுநர்கள்).

ஆகிய வேலைகளுக்கு
வேலையாள்கள் தேவை.

14, ஸ்ரீ வெங்கடேசன் வீதி,
யாழ்ப்பாணம். (C 564196)

# தென்மராட்சியில் பாம்புக்கடிக்கு இலக்கானோர் தொகை அதிகரிப்பு

யாழ்ப்பாணம் ஜன.19

தென்மராட்சிப் பிரதேசத்தில் இவ்வருடம் பாம்பினால் கடிபடுவோரின் தொகை அதிகரித்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஜனவரி மாதத்தில் கடந்த 17 ஆம் திகதி வரை 16 பேர் பாம்பினால் கடியுண்ட நிலையில் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

கடந்த 17 ஆம் திகதி இரவு கெற்பேலி மத்தியைச் சேர்ந்த பாலசிங்கம் யோகேஸ்வரன் (வயது- 33) என்பவர் பாம்பினால் கடியுண்ட நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (59-207)

# 7 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

| தோற்றம் | | மறைவு |
|---|---|---|
| 1943 | | 2003 |
| ★ | | ★ |
| 01 | | 01 |
| ★ | | ★ |
| 23 | | 16 |



## பொன்னு பூபதி

ஆண்டுகள் ஏழு ஆனதம்மா
எம் பூபதித்தாயே
உலகில் எத்தனை ஆயிரம்
உறவுகள் வந்து போனாலும்
எம் அம்மாவிற்கு ஈடு உண்டோ
ஏழு ஆண்டுகள் என்ன
ஏழாயிரம் ஆண்டுகள் சென்றாலும்
உன் நினைவுகளில் வாடும்

உரும்பிராய் வடக்கு. குடும்பத்தினர்.

# மரண அறிவித்தல்

## சின்னத்துரை சிவானந்தன்

{ஓய்வுபெற்ற தொழில்நுட்பவியலாளர், RDA. யாழ்ப்பாணம் - வீதிப் பராமரிப்பு ஒப்பந்தகாரர் (RDD)}



சாவகச்சேரி, விநாசித்தம்பி வீதி, கோயில் குடியிருப்பைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்துரை சிவானந்தன் 17.01.2010 ஞாயிற்றுக்கிழமை அகால மரணமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை சின்னத்துரை (P.L.O) -மீனாம்பிகை தம்பதியரின் அன்பு மகனும் மாணிக்கம் - முத்தாச்சி தம்பதியரின் அன்பு மருமகனும் கமலாதேவியின் (ஓய்வுபெற்ற ஆசிரியை) அன்புக் கணவரும் கஜேந்திரன், Dr. சசிகரன் (யாழ்.போதனா வைத்தியசாலை), ஸ்ரீரங்கன் (பொறியியலாளர், லண்டன்), Dr.சிவதர்சனா (யாழ். போதனா வைத்தியசாலை), சேந்தன் (பொறியியல் மாணவன், லண்டன்) ஆகியோரின் அன்புத் தந்தையும் சுதாயினி, Dr.ஜனாளனி (யாழ். போதனா வைத்தியசாலை), தர்மினி (பொறியியலாளர், லண்டன்) ஆகியோரின் அன்பு மாமனும் ஆராதனா, தருண் ஆகியோரின் பாசமிகு பேரனும் திருஞானசோதி ( கனடா), காலஞ்சென்ற சிவராசா (ஓய்வுபெற்ற இ.போ.ச. பரிசோதகர்), சிவகுமாரி, சிவதேவி (ஆசிரியை, சாவகச்சேரி இந்துக் கல்லூரி), Dr.சிவபாலன் (சாவகச்சேரி) ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (20.01.2010) புதன் கிழமை மு.ப 10 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

விநாசித்தம்பி வீதி,
கோயில் குடியிருப்பு,
சாவகச்சேரி. (94068)

தகவல்:
Dr. சசிகரன் (மகன்).

# நினைவு அஞ்சலி

| 12 ஆம் ஆண்டில் | | 09 ஆம் ஆண்டில் |
|---|---|---|





திதி : சதுர்த்தி
19.01.2010

| அமரர் சின்னப்பு வல்லிபுரம் | | அமரர் வல்லிபுரம் மாணிக்கலிங்கம் |
|---|---|---|
| தோற்றம் 02.05.1912 | | தோற்றம் 09.06.1946 |
| மறைவு 03.02.1998 | | மறைவு 28.01.2001 |

உங்களை எமக்களித்த இறைவன்
இடைநடுவில் உங்களை அழைத்த
காரணம்தான் தெரியவில்லை, எம் உயிர்
உள்ளவரை உங்கள் ஆத்ம சாந்திக்காய்
இறைவனை வேண்டி நிற்கின்றோம்.

566/3, கே.கே.எஸ்.வீதி,
யாழ்ப்பாணம். (94063) குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வன்முறைக்கும் விரோத அரசியலுக்கும் இனி இந்த நாட்டில் இடமில்லை

## குருநாகலில் ஜனாதிபதி தெரிவிப்பு



வன்முறைக்கும் விரோத அரசியலுக்கும் இனி இந்த நாட்டில் இடமில்லையென தெரிவித்த ஜனாதிபதி, பயங்கரவாதத்திலிருந்து மீட்டு ஒன்றிணைந்துள்ள நாட்டைப் பாதுகாத்து ஜனநாயகத் தையும் பாதுகாப்பது மக்களின் பொறுப்பு என ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரி வித்தார்.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் தேர்தல் பிரசாரக் கூட்டம் நேற்று முன்தினம் குருநாகல் நகரில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் நடைபெற்றது. இந் நிகழ்வில் உரையாற்றும்போதே ஜனாதிபதி இவ்வாறு தெரிவித்தார்.

தாய்நாட்டுக்கெதிரான முதலாவது ஒப்பந்தத்தை நான் நிறைவேற்று ஜனாதிபதியாகவிருந்து இல்லாதொழித்தேன். இரண்டாவது ஒப்பந்தத்தை இல்லாதொழிக்க வேண்டிய பொறுப்பு நாட்டு மக்களுடையது. அதனை எதிர்வரும் 26ஆம் திகதி மக்கள் நிறைவேற்றுவார்கள்.

மதுரங்குழிப் பகுதியில் எமது ஆதரவாளர்கள் மீது துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டதில் ஒருவர் பலியாகியுள்ளதுடன் ஐவர் படுகாயங்களுக்கு உள்ளாகியுள்ளனர். மீண்டும் வன்முறை யுகம் கட்டவிழ்க்கப்பட்டுள்ளது.

இதனை முடிவுக்குக் கொண்டுவரவும் இரகசிய ஒப்பந்தங்களுக்கு முடிவு கட்டவும் எதிர்வரும் 26ஆம் திகதி மக்கள் ஒன்றிணைய வேண்டும்.

கடந்த நான்கு வருடத்திற்கு முன்னர் இந்த நாட்டை மீட்டு ஐக்கியப்படுத்துவதற்காக மக்கள் இந்த நாட்டைப் பாரம்கொடுத்தார்கள். அதனை நான் முழுமையாக நிறைவேற்றியுள்ளேன்.

தனி நிர்வாக அதிகாரத்துடன் அடையாள அட்டையிலிருந்து சகலத்தையும் தமக்கென தனியாக வைத்திருந்த பயங்கரவாதிகளிடமிருந்து நாட்டை மீட்டுத் தற்போது ஒரு கொடியின் கீழ் அனைத்தையும் கொண்டுவர முடிந்துள்ளது.

வெளிநாடுகளுக்கு அடிபணிந்து முதுகெலும்பில்லாமல் எம் தலைவர்கள் செயற்பட்ட யுகத்திற்கும் முடிவு காணப்பட்டுள்ளது.

நாம் யுத்தத்தை மாத்திரம் முன்னெடுக்கவில்லை. நாட்டில் அபிவிருத்தியையும் மேற்கொண்டோம். அத்துடன் அரச துறையை மேம்படுத்தும் வகையில் ஆறு லட்சமாக விருந்த அரச ஊழியர்களின் எண்ணிக்கையை 12 லட்சமாக அதிகரிக்க எம்மால் முடிந்துள்ளது. நாம் இந்த நாட்டை ஆசிய பிராந் தியத்திலேயே பெறுமதிமிக்க நாடாக மாற்ற பின்புலத்தைக் கட்டியெழுப்பியுள்ளோம். வடக்குக் கிழக்கு உட்பட சகல பிரதேசங்களையும் அபிவிருத்தியில் முன்னெடுக்கும் நடவடிக்கைகள் தற்போது இடம்பெற்று வரு கின்றன.

எம்மைப் பற்றி பல அவதூறுகள், சேறு பூசுதல்கள் இடம்பெறுகின்றன. எம்முடனுள்ள விமல் வீரவன்ச, ஜோன்சன் பெர்னாண்டோ போன்றவர்களுக்கும் அச்சுறுத்தல்கள் விடுக்கப்படுகின்றன. எந்தவித சவால்களையும் ஏற்க நாம் தயார்.

பணத்திற்கு விலைபோகும் அரசியல் வாதிகள் எம்மிடமில்லை. 30 மில்லியன் ரூபாவுக்கு ஜே.வி.பி.உறுப்பினர் முஸம்மிலை விலைபேசியுள்ள விடயம் அம்பலமாகியுள்ளது- எனக் கூறினார். (சி)

# ஆயுதக் கொள்வனவுக் குற்றச்சாட்டு தம்மீது சேறுபூசும் நடவடிக்கையாம்

## அடித்து மறுக்கிறார் சரத் பொன்சேகா



கொழும்பு, ஜன. 19

இராணுவத்துக்கு ஆயுதங்களை கொள்வனவு செய்வதற்குப் பாதுகாப்பு அமைச்சே தீர்மானித்தது. அந்த கொடுக்கல் வாங்கல் தொடர்பில் தமக்கு எந்தவொரு தொடர்பும் இல்லை என ஜனாதிபதி வேட்பாளர் ஜெனரல் சரத் பொன்சேகா தெரிவித்தார்.

அக்குறானைப் பகுதியில் இடம்பெற்ற கூட்டம்ஒன்றில்கலந்து கொண்டு உரையாற்றியபோது அவர் இதனைத் தெரிவித்தார்.

ஜெனரல் சரத் பொன்சேகாவுக்கு ஆதரவு தெரிவிக்கும் வகையில் அக்குறானை, அம்பாறை மற்றும் பாததும்பற பகுதிகளில் பிரசார கூட்டங்கள் நடைபெற்றன.

அக்குறானைப் பகுதியில் நடைபெற்ற கூட்டத்தில் ஜெனரல் சரத் பொன்சேகாவுக்கு உற்சாக வரவேற்பு அளிக்கப் பட்டது.

ஜெனரல் சரத் பொன்சேகாவுக்கு ஆதரவு அளிக்கும் கட்சிப் பிரதிநிதிகளின் ஆதரவுடன் இந்தக் கூட்டம் நடைபெற்றது.

அவர் அங்கு மேலும் உரையாற்றும் போது கூறியவை வருமாறு:-

இராணுவ தளபதியாக கேள்விச் சபையில் இருந்து கொண்டு நான் தவறு இழைத்தேன் எனவும் பணம் சம்பாதித்தேன் எனவும் உண்மைக்கு புறம்பான வகையில் என் மீது சேறு பூசப்படுகிறது.

இராணுவ தளபதியாக நான் பதவி வகித்த பொழுது வருடாந்தம் 800 கோடி ரூபா மாத்திரம் ஒதுக்கப்பட்டது. அதனை கொண்டு இராணுவத்தை சிறப்புற நடத்தினேன். ஆனால் இன்று நான் 3 கோடி ரூபா பெறுமதியான ஆயுத வியாபாரத்தில் ஈடுபட்டேன் எனக் குற்றம் சாட்டப்படுகிறது.

நாட்டுக்காக அர்ப்பணிப்புடன் மரண காயங்களுக்கு உள்ளாகி நாட்டுக்காக எந்த ஒரு அபாயத்தையும் எதிர் கொள்ள தயாராக இருந்த எனக்கு நாட்டை சுரண்டுவதற்கும் ஊழல் புரிவதற்கும் எந்த அவசியமும் இல்லை.

எனது 40 வருடகால சேவையின் பின்னர் 3 அறைகளை கொண்ட வீடு ஒன்றிலேயே குடியேற முடிந்தது. அவர்கள் கூறும் குற்றச்சாட்டுக்களின்படி நான் வசதியான வீட்டில் குடியேறியிருக்க வேண்டும். இவ்வாறான சேறு பூசும் நடவடிக்கைகள் குறித்து மக்கள் ஏமாந்துவிடக்கூடாது. சுபீட்சமான அபிவிருத்தியை நோக்கிய நாட்டை ஜனவரி 26 ஆம் திகதி உருவாக்குவதற்கு நாம் திடசங்கற்பம் கொண்டு உள்ளோம். எனவே அன்னத்துக்கு வாக்களித்து என்னை வெற்றி பெறச் செய்யுங்கள் - என்றார்.

இதேவேளை அன்றைய தினம் பாததும்பற பிரதேசத்திலும், கம்பளையிலும் அவரது பிரசாரக்கூட்டங்கள் இடம்பெற்றன எனத் தெரிவிக்கப்படுகிறது. (சி)

# அரசுடன் அடிமையாக இருப்பதைவிட எதிரணியில் சுதந்திரமாக இருப்பதே மேல்

## மு.கா. தவிசாளர் தெரிவிப்பு

மட்டக்களப்பு, ஜன. 19

அரசுடன் இணைந்து அடிமையாக இருப்பதை விட எதிரியாக இருப்பதே மேல் என் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தவிசாளரும், கிழக்கு மாகாண சபை எதிர்க் கட்சித்தலைவருமான பஷீர் சேகுதாவூத் தெரிவித்தார்.

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் எதிரணியின் பொது வேட்பாளர் ஜெனரல் சரத் பொன்சேகாவை ஆதரித்து ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் சாய்ந்தமருது கடற்கரை முற்றவெளியில் பிரசார கூட்டம் ஒன்றை நடத்தியது. இக்கூட்டம் கிழக்கு மாகாண சபை உறுப்பினர் ஏ.எம்.ஜெமீல் தலைமையில் நடைபெற்றது. இதில் உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் கூறியவை வருமாறு:-

எமது நாட்டின் ஜனாதிபதி முஸ்லிம் காங்கிரஸ் கட்சியையும் அதன் தலைமைத்துவத்தையும் ஏற்றுக்கொள்ளவில்லை இதனாலேயே எமது கட்சியைப் பல கூறுகளாகப் பிரித்து முஸ்லிம் சமூகத்தின் பேரம் பேசும் சக்தியை இல்லாமலாக்கினார்.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஜனாதிபதிக்கு ஆதரவு வழங்கத் தீர்மானித்திருந்தால் ஏற்கனவே அரசில் அங்கம் வகிக்கும் எமது கட்சியை விட்டுச் சென்று ஒன்பது ஓட்டப் பானைகளைப் போல் நாமும் சேர்ந்து பத்தாவது ஓட்டப் பானையாக மாறியிருக்க வேண்டிய நிலை ஏற்பட்டிருக்கும். இந்த சரணாகதி அரசியலை நமது தலைமைத்துவம் செய்யாமல் சாணக்கியமாகச் செயற்பட்டு ஜனாதிபதித் தேர்தல் களத்தில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் போட்டிக்கு நிகரான போட்டியாளராகப் பொது வேட்பாளர் ஒருவரை எமது கட்சி நிறுத்தியுள்ளது.

எங்களை ஏமாற்றிய, கட்சிக்கு எதிராக குழி தோண்டி, எமது சமூகத்தை ஏமாற்றிய எட்டப்பர்களைத் தோற்கடிக்கும் முயற்சியில் எமது தலைமைத்துவம் செயற்பட்டது. இந்த எட்டப்பர் கூட்டத்தை அழிப்பதென்றால் மஹிந்த ராஜபக்ஷவைத் தோற்கடிப்பதன் மூலம்தான் முடியும். இதனாலேயே பொது வேட்பாளர் எனும் பெரிய குழியைத் தோண்டி அதில் எமது கட்சித் துரோகிகளைத் தள்ளியுள்ளோம். 'மக்களே மண் மூடி அரசியலிலிருந்து மூச்சடக்க வாருங்கள்.' இதற்காகவே சரத் பொன்சேகாவுக்கு வாக்களிக்குமாறு கேட்கின்றோம். (சி)

# அரசியல் தீர்வுக்கும் அபிவிருத்திக்கும் மஹிந்தவை ஆதரிக்க வேண்டும்

## புலம்பெயர் எழுத்தாளர் ராஜேஸ்வரி தெரிவிப்பு

கொழும்பு,ஜன.19

அரசியல் தீர்வையும் அபிவிருத்தியையும் அடைவதற்குத் தமிழ் மக்கள், ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவையே ஆதரிக்க வேண்டுமென்று புலம்பெயர் தமிழர் அமைப்பின் பிரதிநிதியான எழுத்தாளர் திருமதி ராஜேஸ்வரி பாலசுப்பிரமணியம் தெரிவித்துள்ளார்.

மனித உரிமைகளுக்காகப் போராடிய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, தமிழ் மக்களின் உணர்வுகளுக்கு மதிப்பளித்து ஓர் அரசியல் தீர்வினைப் பெற்றுக்கொடுப்பதுடன் அபிவிருத்திப் பணிகளையும் முன்னெடுப்பார் எனத் திருமதி பாலசுப்பிரமணியம் விடுத்துள்ள அறிக்கையொன்றில் தெரிவித்துள்ளார்.




ஐக்கிய தேசியக் கட்சியே தமிழர்களை முதன்முதலில் அகதியாக்கியது. தமிழ் மக்களுக்குத் தீர்வுகள் கிடைத்தபோது அதனைச் சீர்குலைத்து, தமிழர்களுக்கு நியாயமான தீர்வு கிடைப்பதை இனவாதத்துடன் நோக்கி வரும் ஜே.வி.பி.யும் இம்முறை கூட்டணி சேர்ந்துள்ளது. எனவே, தமிழ் மக்கள் ஜனாதிபதி மஹிந்தவையே ஆதரிக்க வேண்டும். மானமுள்ள எந்தத் தமிழனும் இதனை மறந்து செயற்பட மாட்டான்- என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (50-200)

# வடக்கில் சுயாட்சிக்கு இடமில்லை அடித்துக் கூறுகிறார் அமைச்சர் யாப்பா



கொழும்பு, ஜன. 19

எந்தவொரு காரணத்திற்காகவும் வடக்கில் சுயாட்சி நிறுவப்படமாட்டாது. நாட்டிற்கு பெற்றுக் கொடுக்கப்பட்ட சுதந்திரம் தேர்தல்களுக்காகக் காட்டிக் கொடுக்கப்பட மாட்டாது. இவ்வாறு அடித்துக் கூறுகிறார் ஊடக அமைச்சர் லக்ஷ்மன் யாப்பா அபேவர்தன.

வாக்குகளைப் பெற்றுக்கொள்வதற்காக ஜெனரல் சரத் பொன்சேகா, வடக்கிற்கு சுயாட்சி அதிகாரங்களை வழங்குவதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கு உறுதியளித்துள்ளதாக அவர் தெரிவித்தார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் துரைரட்ணசிங்கம் மற்றும் சிவசக்தி ஆனந்தன் ஆகியோரின் கூற்றுக்களின் மூலம் இந்த ரகசிய ஒப்பந்தம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாகக் குறிப்பிட்டுள்ள அவர், எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலின் பின்னர் இந்த ஒப்பந்தங்கள் தொடர்பில் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் தெரிவித்துள்ளார்.

விடுதலைப்புலிகள் இந்த நாட்டு மக்களை மீண்டும் துன்புறுத்த ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ ஒருபோதும் இடமளிக்க மாட்டார் என்று யாப்பா கூறியுள்ளார். (ஓ)

# ஏழையெனக் கூறும் பொன்சேகாவுக்கு கோடிகள் எங்கேயிருந்து வந்தன?

## அமைச்சர் ரிஷாத் பதியுதீன் கேள்வி



கொழும்பு,ஜன.19

" ஆறு பேச்சர்ஸ் காணியில் அமைந்துள்ள இரண்டறை கொண்ட வீட்டில்தான் வசிக்கிறேன் என்று ஏழ்மை பேசிய சரத் பொன்சேகாவுக்கு எங்கிருந்து பெருந் தொகைப் பணம் கிடைக்கின்றது?" -

-இவ்வாறு மீள்குடியேற்றம் மற்றும் அனர்த்த நிவாரண சேவைகள் அமைச்சர் ரிஷாத் பதியுதீன் கண்டியில் கேள்வி எழுப்பினார்.

கண்டியில் இடம்பெற்ற கூட்டமொன்றில் உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து கூறியவை வருமாறு:-

ஐக்கிய தேசிய முன்னணி நாடாளுமன்ற உறுப்பினர் முசம்மிலை மூன்று கோடி ரூபா கொடுத்து விலைக்கு வாங்க முயன்றுள்ளனர். அப்படியாயின் மயோன் முஸ்தபாவை மடக்கிப் பிடிக்க எவ்வளவு கொடுத்திருப்பார்?

சேகு இஸ்ஸதீனை தங்களுடன் சேர்த்துக் கொள்வதற்குக் கொட்டப்பட்டது எத்தனை கோடியாக விருக்கும்?

தபால்பிரதியமைச்சர் செல்லச்சாமியை விரட்டிப் பிடிக்க எத்தனை கோடி கொடுத்தார்?

சம்பந்தனின் சரணாகதிக் கூட்டுக்கு தாரைவார்த்துக் கொடுத்தது எத்தனை கோடியோ?

நசீர் அஹ்மதை நன்றி மறக்கச் செய்தமை எத்தனை கோடியோ?

இப்படிக் கோடிகோடியாகக் கொடுக்கும் சரத்பொன்சேகா தன்னை ஒரு ஏழை என்று பம்மாத்துக்காட்டுகிறார்.

இவர் ஊழலை ஒழிக்கப்போகிறார் எனக் கூறிவருகிறார். நாட்டின் நல்லாட்சி ஏற்படுத்த வேண்டும் என்றும் கூறும் இவர் செய்த வேலை "படிப்பது தேவாரம் இடிப்பது கோயில்" போன்றிருக்கின்றது.

எனவே மக்களுக்குப் பொய்கூறி வாக்குக் கேட்கும் சரத்பொன்சேகாவுக்கு 26 ஆம் திகதியுடன் கல்தாகொடுத்து வீட்டுக்கு அனுப்பி வையுங்கள்- என்றார். (சி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






**இலங்கையின் முன்னணி அபிவிருத்தி வங்கியான DFCC வங்கி, தனது புதிய கிளையை யாழ்ப்பாண நகரத்தில் திறந்து வைக்கின்றது.**

வரலாற்று ரீதியாக, இலங்கையின் முக்கிய வர்த்தக நகரங்களில் ஒன்றாக யாழ்ப்பாணம் விளங்கி வருகிறது. வெங்காயம் பயிரிடுவோர், மீனவர்கள் மற்றும் வர்த்தகர்கள் என யாழ்ப்பாணக் குடாநாட்டு மக்கள் அனைவரும் வர்த்தகத்தில் அதிக ஈடுபாடு கொண்டவர்கள். ஆயினும் பலவருடங்களாக நடைபெற்ற யுத்தத்தின் காரணமாக இப்பிராந்தியத்தின் கைத்தொழில் மற்றும் வர்த்தக நடவடிக்கைகள் தேக்கமடைந்திருந்தன. ஆனால் இப்பொழுது, 50 வருடங்களுக்கு மேல் அபிவிருத்தி வங்கித்துறையில் நிபுணத்துவம் பெற்ற DFCC வங்கி புதிய கைத்தொழில்கள் மற்றும் வர்த்தகங்களை ஆரம்பிப்பதற்கும், சேமிப்புகளுக்கும், நிலையான வைப்புகளுக்கும் சிறந்த வட்டி வீதத்தைப் பெற்றுக் கொள்ளவும், யாழ்ப்பாண பிராந்தியத்திற்கு சுபீட்சத்தைக் கொண்டு வரவும் சேவைகளை வழங்க முன் வந்துள்ளது.

உங்கள் வர்த்தக தேவைகள் மற்றும் நாளாந்த வங்கிச் சேவைகளை நம்பிக்கையுடன் நிறைவேற்றிக் கொள்ள DFCC வங்கிக்கு வாருங்கள், உங்கள் வாழ்வில் ஏற்படப் போகும் மாற்றத்தை பாருங்கள்.
கைத்தொழில்கள், விவசாயம், விலங்கு வேளாண்மை, மீன் பிடித்துறைக்குத் தேவையான சிறிய, நடுத்தர, வர்த்தக கடன்கள், குத்தகை, ஜூனியர் சேமிப்பு கணக்கு, மெகா போனஸ் சேமிப்புக் கணக்கு, நிலையான வைப்புகள், அடகு வைத்தல் மற்றும் இன்னும் பல வங்கிச் சேவைகளை துரிதமாக நிறைவேற்றிக் கொள்ள DFCC வங்கிக்கு வாருங்கள்.

DFCC வங்கி / DFCC வர்தன வங்கி, இல: 141, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 021-2221444 / 021-2221666 / 021-2221888

ஃபிச் ரேட்டிங்ஸ் லங்கா DFCC வங்கிக்கு AA(lka) தரக்குறியீட்டையும் DFCC வர்தன வங்கிக்கு AA-(lka) தரக்குறியீட்டையும் வழங்கியுள்ளது.
இது வங்கியின் மிக உயர்வான நிதிப் பலத்தையும், குறித்தநேரத்தில் நிதிக் கட்டப்பாடுகளை நிறைவேற்றும் உறுதியான தகுதியையும் எடுத்துக் காட்டுகிறது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சிறுவர் அபிவிருத்தி நிலையத்தின் அனுசரணையுடன் அவுஸ்திரேலியாவின் இலங்கை மாணவர் கல்வி நிதியம் நடத்திய சிறுவர்களின் ஒன்று கூடல், உதவி வழங்கல் நிகழ்வுகள் பொங்கல் தினத்தன்று கொக்குவில் இந்துக் கல்லூரியில் நடைபெற்றபோது எடுக்கப்பட்ட படங்கள் இவை.

யாழ்.வலய கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம், இலங்கை மாணவர் கல்வி நிதிய அவுஸ்திரேலியாவின் நிதிச் செயலாளர் லெ.முருகபூபதி, வைத்திய கலாநிதி நடேசன் ஆகியோர் மாணவர்களுக்கான உதவிகளை வழங்குவதை முதல் மூன்று படங்களிலும்

சிறுவர்கள் அபிவிருத்தி நிதியத்தின் தலைவர் சி.வி.கே.சிவஞானம் உரையாற்றுவதை நான்காவது படத்திலும் நிகழ்வில் கலந்து கொண்டோரில் ஒரு பகுதியினரை இறுதிப் படத்திலும் காணலாம்.

(படங்கள்: லக்ஸ்மன்)

# குடாநாட்டில் தொழில் முயற்சிகளை ஆரம்பிக்க 80 வெளிநாட்டு நிறுவனங்கள் விண்ணப்பம்

## 2 மாதத்தில் அவை செயற்பாடுகளை ஆரம்பிக்கும் என்கிறார் ஆளுநர்

யாழ்ப்பாணம், ஜன.19

குடாநாட்டில் தொழில் முயற்சிகளை ஆரம்பிப்பதற்கு வெளிநாடுகளைச் சேர்ந்த 80 தொழில் நிறுவனங்கள் அரசாங்கத்திடம் அனுமதி கோரியுள்ளன.

அடுத்த இரண்டு மாதங்களில் அந்த நிறுவனங்கள் தமது செயற்பாடுகளை இங்கு ஆரம்பிக்கும் என நம்புகிறேன்.

வடக்கு மாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறி இத்தகவலை வெளியிட்டார்.

திருநெல்வேலி விவசாயத் திணைக்களத்தில் இடம்பெற்ற நிகழ்வு ஒன்றில் பேசுகையில் அவர் இப்படிக் கூறினார்.

விவசாயிகளுக்கு உதவிகளை வழங்க நேற்றுமுன்தினம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இந்த நிகழ்வில் பேசுகையில் அவர் மேலும் கூறியதாவது:


ரயில்வே, போக்குவரத்து, கல்வி, கணனி ஆகிய துறைகளில் முதலீடுகளைச் செய்ய அந்த நிறுவனங்கள் முன்வந்துள்ளன. அந்த நிறுவனங்கள் அது தொடர்பாக அரசாங்கத்திடம் விண்ணப்பங்களை கையளித்துள்ளன.

அது விடயமாக அரசாங்கம் ஆராய்ந்து கொண்டிருக்கிறது. பெரும்பாலும் அடுத்த இரண்டு மாதங்களில் அந்த தொழில் முயற்சிகள் ஆரம்பமாகிவிடும் என நம்புகின்றோம்.



குடாநாட்டு அபிவிருத்திக்கு அரசாங்கம் பல்வேறு நடவடிக்கைகளை எடுத்துள்ளது. அந்த நடவடிக்கைகளின் ஓர் அங்கம்தான் வெளிநாடுகளின் தொழில் முயற்சிகளாகும்-என்றார்.

(1-111)




### வடமாகாண கலாசார, கலை விழா

யாழ்ப்பாணம், ஜன.19

'வடக்கின் வசந்தம்' வடமாகாண கலாசார கலை விழா நிகழ்வு எதிர்வரும் 20 ஆம் திகதி புதன்கிழமை மாலை 7 மணிக்கு பண்டாரநாயக்க ஞாபகார்த்த கண்காட்சி மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

(50-14)

### விளாவெளி மயானம் விரைவில் அபிவிருத்தி

பண்டத்தரிப்பு,ஜன.19

விளாவெளி இந்து மயானம் விரைவில் அபிவிருத்தி செய்யப்பட உள்ளதாக இந்து மயான அபிவிருத்திச்சபைத் தலைவர் வை.சிவபாலன் தெரிவித்தார்.

நீண்ட காலமாக மயானத்தில் எல்லைகள் வரையறை செய்து அதற்கென வேலிகள் அமைக்கப்படவில்லை. எனவே உடனடியாகத் தெற்கு பக்க மதில் அமைத்து 'கேற்' போட்டு காவலாளியை நியமிக்க உள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இந்த மயானமானது வலி.மேற்கு பிரதேச சபைக்குட்பட்ட தொட்டிலடி, சங்கானை,நிச்சாமம், சித்தங்கேணி மக்களாலும் வலி. தென்மேற்கு பிரதேசசபைக் குட்பட்ட சண்டிலிப்பாய் வடக்கு, பிரான்பற்று, பண்டத்தரிப்பு, சில்லாலை, வடலியடைப்பு மக்களாலும் பயன்படுத்தப் படுவதாகவும் அவர் தெரிவித்தார்.

சங்கானையைச் சேர்ந்த செ.கோபாலகிருஸ்ணன் 50 ஆயிரம் ரூபா பெறுமதியான கேற்றை அன்பளிப்பாக வழங்க உள்ளதாக அதற்கான வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

(50-130)

### வலி. கிழக்கில் சில பகுதிகளுக்கு மின் விநியோகம்

யாழ்ப்பாணம்,ஜன.19

வலி. கிழக்கு கோப்பாய் பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட ஊறணி, புத்தூர் வாதரவத்தை, பெரிய பொக்கணை, வீரவாணி ஆகிய பகுதிகளுக்கான கிராமிய மின்விநியோகத் திட்டம் தற்போது பூர்த்தி யடைந்துள்ளது.

அந்தப் பகுதிகளிலுள்ள வீடுகளுக்கு விரைவில் மின் வழங்க நடவடிக்கை எடுக் கப்படும் என மின்சார சபையின் வடபிராந் திய பிரதிப் பொது முகாமையாளர் எஸ். முத்துரட்ணானந்தம் தெரிவித்தார்.

(50-14)

## குடாநாட்டில் மீளக்குடியமரவுள்ள

# 100 முஸ்லிம் குடும்பங்களுக்கு வீடுகட்ட உதவிகளை வழங்குவதற்கு நடவடிக்கை

## மாநகரசபை உறுப்பினர் சுபியான் தகவல்

யாழ்ப்பாணம்,ஜன.19

யாழ்ப்பாணத்துக்கு மீளக் குடியமர்ந்துள்ள சொந்தக்காணி வைத்திருக்கின்ற நூறு முஸ்லிம் குடும்பங்களுக்கு வீடுகட்ட உதவிகள் வழங்கப்படவுள்ளன.

அரசு, அரசுசாரா அமைப்புக்களிடமும் முஸ்லிம் நாடுகளிடமும் இருந்து பெறப்படும் நிதி இத்திட்டத்துக்கு வழங்கப்படும்.

யாழ்.மாநகரசபை உறுப்பினர் மௌலவி சுபியான் இத்தகவலைத் தெரிவித்தார்.

குடாநாட்டில் மீளக்குடியமரும் முஸ்லிம் மக்கள் எதிர் நோக்கும் பிரச்சினைகள், அவர்களின் எதிர் காலத்திட்டங்கள் ஆகியன தொடர்பாக ஆராய்வதற்காக நேற்றுமுன்தினம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த கூட்டத்திலேயே இத்தகவல் தெரிவிக்கப்பட்டது.

நாவலர் வீதியில் உள்ள மக்கள் பணிமனையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

தமது காணிகளில் குடியமர சம்மதம் தெரிவித்துள்ள முஸ்லிம் மக்களின் விவரங்கள் யாழ். அரச அதிபருக்கு சமர்பிக்கப்பட்டுள்ளன.

இது தொடர்பான அனுமதி கிடைத்ததும் சம்பந்தப்பட்ட குடும்பங்களின் தலைவர்களை அழைத்துவந்து அவர்களது காணிகள் தொடர்பான ஆவணங்களைப் பரீசிலித்து வீடுகளை அமைத்துக் கொள்வதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படும். வீடுகளை அமைப்பதற்கு அரசு, அரச சார்பற்ற நிறுவனங்களுடனும் முஸ்லிம் நாடுகளுடனும் தொடர்புகொள்ளப்படும்.

பாதை மூடப்பட்ட காலத்தில் சொந்தமாக காணி இருந்தவர்களில் 10 குடும்பங்களுள் முஸ்லிம், முஸ்லிம் மைய்வாடிப் பகுதியிலும், மண்கும்பானில் 50 குடும்பங்களும் குடியமரக்கூடியதான ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன.

காணி இருந்தும் குடியிருக்க வீடின்றி வேறு வீடுகளில் குடியிருப்பவர்களுக்கு தற்காலிக வீடுகளை அமைத்துக் கொடுக்க மக்கள் பணிமனை நடவடிக்கைகளை எடுக்கவுள்ளது.

கல்வி, மின்சார வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. ஒஸ்மானியா கல்லூரி உட்பட இந்தப் பகுதியில் உள்ள பாடசாலைகளில் ஆசிரியர்களை நியமிக்கவும் மாணவர்களுக்கு மேலும் வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்க கல்வி அமைச்சு நடவடிக்கை எடுத்து வருகிறது.

மேற்கொண்டு மக்களின் தேவை குறித்து பிரச்சினைகள் இருப்பின் அது தொடர்பான தகவல்களை மக்கள் பணிமனையில் சமர்ப்பிக்கும் பட்சத்தில் உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

**முஸ்லிம் மக்கள் மீளகுடியமர்வில் ஆர்வம்**

யாழ்ப்பாணத்தில் இருந்து இடம் பெயர்ந்து சென்ற முஸ்லிம் மக்கள் மீண்டும் இங்கு குடியமரத்தயாராகின்றனர். இடம் பெயர்ந்த முஸ்லிம் மக்கள் தாங்கள் தற்போது வதியும் இடங்களை விட்டு இங்கு வரமாட்டார்கள்- எனக் கூறுவது மிகவும் தவறானதாகும். இது தொடர்பாக பலர் என்னுடன் கலந்துரையாடியுள்ளனர்.

அடுத்து வரப்போகும் இரண்டு வருடங்களில் யாழ். நகரின் அபிவிருத்தியில் அரசாங்கம் கூடுதல் கவனம் செலுத்தவுள்ளது. பல்வேறு தொழில் நிறுவனங்கள் இங்கு தொழில் நடவடிக்கைகளை முன்னெடுக்கவுள்ளன. பெரிய அளவில் வியாபார நடவடிக்கைகள் இடம்பெறும் என்பதால் முஸ்லிம் மக்கள் மீண்டும் யாழ். நகருக்கு வருவதில் ஆர்வம் காட்டுகின்றனர்-என்றார் சுபியான்.

(1-111)

# 2010ஆம் ஆண்டுக்கான இந்து சமய விரத, விழாத் தினங்கள் அறிவிப்பு

யாழ்ப்பாணம், ஜன.19

2010ஆம் ஆண்டுக்கான இந்து சமய விரத, விழாத் தினங்களை இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களம் உத்தியோகபூர்வமாக வெளியிட்டுள்ளது.

இந்த விடயம் தொடர்பாக பல்வேறு இந்து சமய அமைப்புகள், நிறுவனங்கள் என்பன திணைக்களத்துக்கு விடுத்த தொடர்ச்சியான கோரிக்கைகளுக்கு அமைய இந்து சமய அறிஞர்கள், சோதிட வல்லுநர்கள் அடங்கிய ஆலோசனைக்குழு நியமிக்கப்பட்டு இக்குழுவினர் பல தடவைகள் கலந்தாலோசித்து தீர்க்கமான தமது முடிவுகளைத் தெரிவித்துள்ளனர்.

இந்த தீர்மானங்களுக்கு அமைய 2010 ஆம் ஆண்டில் அமையும் இந்து சமய விரதங்கள், விழாக்களையும் அனைத்து ஆலயங்கள், ஆலய பரிபாலனங்கள், இந்து மக்களும் ஒரே விதமாக அனுட்டிப்பது பரிபாலனங்களிடையே குழப்பங்களைத் தவிர்த்துக்கொள்ள ஏதுவாகும் எனவும் திணைக்களம் விடுத்த செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

2010ஆம் ஆண்டுக்கான பிரதான இந்து சமய விரதங்கள், விழாக்களின் பட்டியல் தொகுப்பு வருமாறு:

**விழாக்கள்**

தைப்பொங்கல் - 14.01.2010, விகிர்தி புது வருடப்பிறப்பு - 14.04.2010, தீபாவளிப்பண்டிகை - 05.11.2010.

**விரதங்கள்**

தைப்பூசம் - 30.01.2010, மாசிமகம் - 28.02.2010, மகா சிவராத்திரி - 13.03.2010, பங்குனி உத்தரம் - 29.03.2010, சித்திரை சித்திரகுப்த விரதம் - 27.04.2010, சித்திரை பூரணை - 28.04.2010, வைகாசி விசாகம் - 27.05.2010, ஆனி உத்தரம் - 19.06.2010.

ஆடிப்பிறப்பு - 17.07.2010, ஆடி அமாவாசை - 09.08.2010, ஆடிப்பூரம் - 12.08.2010, வரலட்சுமி விரதம் - 20.08.2010, ஆவணிச் சதுர்த்தி - 11.09.2010, மகாளயபட்ச ஆரம்பம் - 24.09.2010, மகாளயபட்ச முடிவு - 07.10.2010, நவராத்திரி ஆரம்பம் - 08.10. 2010, நவராத்தி முடிவு (நவமி) - 16.10. 2010, மானம்பூ (விஜயதசமி) - 17.10.2010, கேதாரகௌரி விரத ஆரம்பம் - 17.10.2010, கேதாரகௌரி விரத முடிவு - 05.11.2010,

ஸ்கந்த ஷஷ்டி ஆரம்பம் - 06.11.2010, ஸ்கந்த ஷஷ்டி விரத முடிவு (சூரன் போர்) - 11.11.2010, சர்வாலய தீபம், குமராலய தீபம் - 21.11.2010, விஷ்ணுவாலய தீபம் - 22.11.2010, விநாயக விரத ஆரம்பம் - 22.11.2010, விநாயக விரத முடிவு (பெருங்கதை) - 11.12.2010, திருவெம்பாவை ஆரம்பம் - 13.12.2010, சுவர்க்கவாயில் ஏகாதசி - 17.12.2010, திருவெம்பாவை முடிவு (திருவாதிரை) ஆருத்ராதரிசனம் (22.12.2010).

(50-16)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலவச குருதிப் பரிசோதனை (BLOOD GLUCOSE TEST)

இடம்: 487, சிற்றி மெடிக்கல்ஸ், மருத்துவ மனைத் தெரு, யாழ்ப்பாணம்

காலம்: 20.01.2010 - 21.01.2020

நேரம்: மு.ப.9.00 - மு.ப.11.00

பயனாளிகள் அனைவரும் பங்குகொண்டு பயன்பெறுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

(94060) சிற்றி மெடிக்கல்ஸ்.


## கண்ணாடிகளுக்குள் நசியுண்டு இளைஞன் படுகாயம்

யாழ்ப்பாணம்,ஜன.19

லெறியிலிருந்து கண்ணாடி இறக்கிக் கொண்டிருந்த வேளை கண்ணாடிக்குள் நசியுண்ட நிலையில் இளைஞர் ஒருவர் மீட்கப்பட்டு யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

ஜும்மாப் பள்ளிவாசல் ஒழுங்கையில் உள்ள கடை ஒன்றில் மேற்படி லொறியிலிருந்து கண்ணாடிகள் இறக்கப்பட்டுக் கொண்டிருந்த வேளை சாந்தகுமார் (வயது 19) என்ற இளைஞனே நசியுண்டு காயமடைந்த நிலையில் மீட்கப்பட்டு யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டவராவர். (50-16)


# பிரத்தியேக வகுப்பு

## இணைந்த கணிதம் - 2012 (Combined Maths) G. C. E. (A/L)

ஆசிரியர் : திரு. சு. இலட்சுமணன்

ஆரம்பம் : 21.01.2010 வியாழக்கிழமை

நேரம் : 4.00 p.m.

இடம் : 442, காங்கேசந்துறை வீதி, யாழ்ப்பாணம்.

அநுமதிகள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளன



ஓம் ஸ்ரீவிராட் விஷ்வப் பிரமனே நமக.

# பூப்புனித நீராட்டுவிழா அழைப்பு



அபிநயா

நிகழும் மங்களகரமான விரோதி வருடம் தைமாதம் 7 ஆம் திகதி (20.01.2010) புதன்கிழமை மு.ப.10.30 மணி முதல் 11.33 மணிவரை வரும் மீன இலக்கினமும் பூரட்டாதி நட்சத்திரமும் அமிர்தசித்தயோகமும் கூடிய சுபமுகூர்த்த வேளையில் எமது திருநிறைச் செல்வி அபிநயா அவர்களுக்கு ஸ்ரீ காமாட்சியம்பாள் துணைகொண்டு எமது இல்லத்தில் பூப்புனித நீராட்டு விழா நடைபெற இருப்பதால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகைதந்து எமது செல்வியை ஆசீர்வதித்து அதனைத் தொடர்ந்து இடம்பெறும் விருந்துபசாரத்திலும்கலந்து சிறப்பிக்கும் வண்ணம் எமது உற்றார், உறவினர், அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

இதனைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளவும்.

தங்கள் நல்வரவை நாடும்:

திரு. திருமதி இ.இலட்சுமிகாந்தன் (கிளி) சகிலா குடும்பத்தினர்.

22/1, சிவப்பிரகாசம் வீதி, மதவடி லேன், வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.

(94000)



# பாராட்டி வாழ்த்துகின்றோம்



நொத்தாரிசு பரீட்சையில் சித்தியடைந்து மேல் நீதிமன்ற ஆணையாளர் கௌரவ திரு இ.த.விக்னராஜா அவர்கள் முன்னிலையில் 13.01.2010 இல் சத்தியப்பிரமாணம் செய்து கொண்ட ஓய்வுபெற்ற நிர்வாகக் கிராம அலுவலர் திரு.கனகரத்தினம் கனேசவேல் B.A., J.P. அவர்கள் காட்டுத்துறைப் பிள்ளையார் திருவருளால் பல்லாண்டு பணியாற்ற வாழ்த்துகிறோம்.

சுந்தரமூர்த்தி சுரேஷ்குமார்

ஓட்டுமடம். குடும்பத்தினர்.

(94064)



# படப்பிடிப்பாளர்கள் பதவி வெற்றிடம்



தொழில்சார் தகைமை கொண்ட படப்பிடிப்பாளர் உடன் தேவை

- படப்பிடிப்புத்துறையில் சிறந்த அனுபவம்
- டிஜிற்றல் கமராக்களைக் கையாளக்கூடிய திறமை
- கமராக்களையும் அவை சார்ந்த உபகரணங்களையும் சிறந்த முறையில் பராமரிக்கக் கூடிய திறமை
- முன் அனுபவம் உடையவர்களுக்கு முன்னுரிமை

எதிர்வரும் 25 ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்கவும்

அனுபவத்துக்கும் திறமைக்கும் ஏற்ப சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்

விண்ணப்பங்களை அனுப்பவேண்டிய முகவரி:

உதயன் [illegible]

361, கஸ்[illegible] வீதி,

யாழ்ப்பாணம்.


# ஏன் இந்த முரண்பாடு?

இந்துக்கள் தம் வாழ்வில் நிகழும் மங்கள வைபவங்கள், சிரார்த்த திதிகள், விரத நாள்கள், ஆரம்ப விழாக்கள் போன்ற இன்னோரன்ன நிகழ்வுகளுக்கு நாள்நேரம் குறிப்பதற்குப் பஞ்சாங்கங்களையே பெரிதும் நம்பியுள்ளனர்.

ஆதலால் பஞ்சாங்கம் இந்துக்களின் வாழ்வில் அவ்வருடத்திற்குரிய பஞ்சாங்கஎம் ஒன்றினை வீடுகளில் வைத்திருக்கும் மரபு அநேகமான சைவத் தமிழர்களிடையே இன்றும் நிலைத்து நிற்கிறது.

பஞ்சாங்கங்கள் பெருந்தொகையாக பிரசுரமாகி விற்பனைக்கு வருமுன், இந்து ஆலயங்களில் குருமார்களால் பஞ்சாங்க விளக்கங்கள் பொதுமக்களுக்கு அளிக்கப்பட்டன. இதையடிறெய்யியே "பஞ்சாங்கம் படித்தல்" எனும் ஓர் நிகழ்வு ஆலயங்களில் இன்றும் நிகழ்கிறது.

ஆகாய வெளியில் சஞ்சரிக்கும் கோள்களின், நட்சத்திரங்களின் இயக்கங்களைச் சரியாகக் கணித்து வாரம், திதி, நட்சத்திரம், யோகம், காரணம் என பஞ்ச அங்கங்கள் (ஐந்து உறுப்புக்கள்) ஆக்கி, அவற்றின் கால அளவுகளைத் துல்லியமாகக் குறித்துரைப்பதே பஞ்சாங்கங்களின் தலையாய கடனாகும்.

இவ்வாண்டு மகா சிவராத்திரி எத்தினத்தில் அனுஷ்டிக்கப்பட வேடும் என்பதில் இருவேறு கருத்துக்கள் முன்வைக்கப்படுகின்றன. விரத நிர்ணயங்களில் பஞ்சாங்கக் கணிப்பாளர்களிடையே முரண்பாடுகள் முன்பும் பல தடவைகளில் இருந்து வந்துள்ளன. அவை பெரும்பாலும் சில மணித்தியாலங்கள், நாளிகைகளாகவே இருந்துள்ளன.

மக்கள் மன்றம்

தைமாதம் 30 ஆம் திகதியே (12.02.2010) மகா சிவராத்திரி என வாக்கியப் பஞ்சாங்கமும், மாசி மாதம் 29 ஆம் திகதியே (13.03.2010) மகா சிவராத்திரி விரதம் எனத் திருக்கணிதப் பஞ்சாங்கமும் நிர்ணயம் செய்துள்ளன.

இந்தப் பஞ்சாங்கங்களின் கணிதர்கள் ஆகம, புராண, சுலோகங்கடிளை ஆதாரம் காட்டி தம், தம் நிர்ணயங்களே சரியானது என வாதிடுவார்கள். அது அவர்களின் பஞ்சாங்கங்களின் நம்பகத்தன்மைக்கு இன்றியமையாதது.

இவர்கள் இப்படி முரண்பட, சாதாரணமாக விரதம் அனுஷ்டிக்கும் ஒருவர் மாசி மாதம் அமாவாசைக்கு முதல் நாள் அதாவது கிருஷ்ண பக்ஷ சதுர்த்தசியே (இரவு 11-01 இடைப்பட்ட நேரத்தில் சதுர்த்தி இருக்க வேண்டும் இதுவே லிங்கோர்ப்பவ காலம்) சிவராத்திரி விரமம் அனுஷ்டிக்கும் நாள் எனத் தெரிந்து வைத்துள்ளார்.

இது இவர்கள் தொன்றுதொட்டு தம் மூதாதையர்கள் மூலமாக அறிந்து கொண்டது. விரதங்கள் பொதுவாக கிழமைகள், திதிகள், நட்சத்திரங்களில் அனுஷ்டிக்கப்படுபவை. திதி என்பது சூரியனில் இருந்து பன்னிரண்டு பாகை வீதம் சந்திரன் விலகிச் செல்லும் அளவைக் குறிக்கும். கிருஷ்ண பட்ஷ பிரதமையில் இருந்து அமாவாசை வரை திதிகள் முப்பது உள்ளன. (15+15 பூர்வபக்கம்+அமரபக்கம்).

பதின்மூன்று பாகை இருபது கலை வீதம், மேஷ இராசித் தொடக்கத்தில் இருந்து சந்திரன் விலகிச் செல்லும் வகையில் இருபத்தேழு காலப்பகுதிகளைக் குறிப்பது நட்சத்திரங்கள். இவை அஸ்வினி தொடக்கம் ரேவதி வரை இருபத்தேழு ஆகும்.

திதியோ அன்றி நட்சத்திரமோ சாதாரணமாக ஒரே நாளில் அமைவதில்லை. பெரும்பாலும் இரண்டு நாள்களின் பகுதிகளாகவே அமைகின்றன. விரதத்திற்குரிய திதி, நட்சத்திரங்கள் பகலிலா அல்லது அரவிலா நிகழ வேண்டும். எந்த விரதங்கள் எவ்வெத் திகதிகளில் அமைய வேண்டும். அவற்றிற்குரிய நேர அளவுகள் என்பனவற்றை எல்லாம் சரியாகக் கணித்து, விரதம் அனுஷ்டிப்பவர்களுக்கு இறிவிப்பதில் பிரதான பங்கு வகிப்பவை பஞ்சாங்கங்களே.

விரதங்கள் அனுஷ்டிக்கப்பட வேண்டிய திதிகள், நட்சத்திரங்கள் எவை என்பது பற்றி ஆகமங்கள் எடுத்துக் கூறுகின்றன. பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்பாகவே இந்து மதத்தின் முனிவர்களும், ஞானிகளும், கோள்களின் நட்சத்திரங்களின் சஞ்சாரம் பற்றியும், அசைவுகள் பற்றியும் துல்லியமாகக் கணித்து எமக்கு அறியத் தந்துள்ளனர்.

இவற்றை எல்லாம் எம்மிடமிருந்து அறிந்து செய்ற மேலைத் தேசத்தவர்கள் இன்று வானத்தையே தம் வசப்படுத்த முனைகிறார்கள்.

மிகப்பெரிய சிந்தனையாளர்களாக விஞ்ஞானிகளாகத் தம்மை வெளிப்படுத்திக் கொள்கின்றனர். நாமோ ஒரு விரதம் அனுஷ்டிக்கப்பட வேண்டிய தினத்தை, நேரத்தைச் சரியாகக் கணிப்துரைப்பதிர் தடுமாறுகிறோம், முரண்படுகிறோம்.

நம் நாட்டில் சிவராத்திரி தினமானது அரச விடுமுறையாகப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. பஞ்சாங்கங்களின் சிவராத்தி தின முரண்பாடு, இவ் அரச விடுமுறையின் நிமிர்த்தம் பொதுமக்களிடையேயும், பாடசாலை மாணவர் இடையேயும் ஓர் மனச் சஞ்சலத்தைத் தோற்றுவித்துள்ளது.

அதுமட்டுமல்ல, வாக்கியப் பஞ்சாங்கத்தினைப் பின்பற்றி நாள்காட்டிகளை அச்சிட்டு வெளியிடுவோரும்கூட, அரச பிரகடனப்படுத்தியிருக்கும் விடுமுறை தினத்தன்று எதற்காக அரச எனக்குறித்துக் காட்ட முடியாதவர்களாகியுள்ளனர்.

விரதம் அனுஷ்டிக்கப்படுபவர்கள் பராபக்தியில் திளைத்து "பதிமுது நிலை"யை அண்மித்தவர்கள் அல்ல. "கண்கள் இரண்டும் அவன்கழல் கண்டு கழிப்புறாமல் சும்மா இருக்க" அவர்கள் சாதாரண மனித உணர்வுகளுக்கு உட்பட்டவர்களே. இப்படியான முரண்பாடுகள் அவர்களின் மனங்களை வேதனையிலும் சஞ்சலத்திலும் ஆழ்த்துவது தவிர்க்க முடியாததே.

ஆகமங்களை இந்துக்கள் மிக உன்னதமான இடத்தில் வைத்துப் போற்றுகின்றனர். அவை "மன்னு மாமலை மகேந்திரமதனில்" எம் முழுமுதற் பரம்பொருளான சிவபெருமானால் அருளப் பெற்றவை.

சோதிடம் என்பது துல்லியமான சரியான கணிப்புடன் தொடர்புடையது. இவ் விரண்டு விடங்களிலும் எம் பஞ்சாங்க கணிதர்களது திறமையில் நாம் சந்தேகம் கொள் ளவில்லை.

எது சரியானது என்பது அவர்களுக்கும், இத்துறைகளில் பாண்டித்தியமுள்ளவர்களுக்குமே தெரியும். வேதாகம விற்பன்னர்கள், சோதிட சிகாமணிகள், வைச சமய சபைகள், இந்து மாமன்றங்கள், சமயப் பிரசாரங்கள், பஞ்சாங்க கணிப்பாளர்கள், சைவ ஆதீனங்கள் அனைவரும் ஒன்றிணைந்து இனிவரும் காலங்களில் என்றாலும் விரதங்களின் கால வேளையை முரண்பாடற்ற விதத்தில் ஒரு மனதான நிர்ணயம் செய்யுங்கள். அதுவே இன்றைய உங்களின் முக்கியமான பணியாகட்டும்.

இனிவரும் ஆண்டுகளில் இதற்கு ஓர் முடிவு கிடைக்கும் எனும் நம்பிக்கையுடன்.


எமது அயலில் உள்ள ஆலயத்திலோ அன்றி, நாம் யாத்திரை செய்ய உத்தேசித்திருக்கும் ஆலயத்திலோ, எத்தினத்தில் சிவராத்திரி விரதம் அனுஷ்டிக்கப்படுகிறதோ, [illegible] சிவராத்திரி விரதத்தினை அனுஷ்டிப்போம்.

[illegible]ளும் கோள்களும் நல்லவையே. அவற்றால் நமக்குத் தீங்கில்லை.

நயினை மு.நா.நடராசா.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# காற்றே நீ ஏன் ஏமாற்றினாய்?



"பட்டம் விடுவோம் பட்டம் விடுவோம் பாலா ஓடிவா
பாடிப்பாடிப் பட்டம் விடுவோம் பாலா ஓடி வா"

இது சிறுவயதிலிருந்தே நமக்குள் ஊறிப்போன ஒரு பாடல். சிறுவர்களுக்கு மட்டுமல்லாது பெரியவர்களுக்கும் பிடித்தமான விளையாட்டுகளில் ஒன்றாகப் பட்டம் விடுதல் மாறியிருக் கிறது. அதிலும் யாழ்ப்பாணத்தில் குறிப்பாக வடமராட்சியில் பட்டம் விடுதல் என்பது எல்லோரிடமும் தொற்றுவியாதிபோல பரவியிருக்கின்ற ஒரு பழக்கம். இதில் போட்டிகளும் உண்டு. மாரிகாலத்தை அண்டி வருகின்ற காற்று மேலெழும் பருவத்தில் வடமராட்சி வான்பரப்பு எங்கும் கொக்கு, பிராந்து , எட்டுமூலை, பாம்பு படலம் என நீக்கமற பட்டங்கள் விதவிதமாக ஆடியசைந்தபடி பறந்து கொண்டிருக்கும். அவற்றில் அநேகமானவை 'நொய்ங்ங்' என்ற ரீங்கார ஒலியை எழுப்பும் 'விண்'ணைக் கொண்டிருக்கும். இரவுபகலாக இந்த விண்கூவும் ஒலி எல்லோருக்கும் கேட்டுக் கொண்டேயிருக்கும். ஆர்வக் கோளாறாலும் தம்முடைய பட்டங்கள் மீது பிறருடைய கவனத்தை ஈர்ப்பதற்காகவும் மின்சார விளக்குகளைக்கூட பட்டங்களில் பொருத்தி வானவீதியை வர்ண ஒளி கொண்டு அழகு பார்ப்போரும் உண்டு. ஆயினும் கடந்த சில வருடங்களாக நாட்டில் உண்டான அசாதாரண சூழ்நிலை பட்டங்களைப் பறக்க விடுவதிலும் தாக்கத்தை உண்டுபண்ணியது. ஊரடங்குச் சட்டத்தின் காரணமாக பகல்நேரத்தோடேயே பட்டங்களும் வலிக்கப்பட வேண்டிய தாயிற்று. அதி உயரமான பட்டங்களையும், விண்கூவும் பட்டங்களையும் ஏற்று வதற்குக்கூட பாதுகாப்பு நடைமுறைகள் தடைபோட்டன.

ஆனாலும் மீண்டும் இயல்புநிலை ஏற்படத் தொடங்கியிருப்பதால் இந்த வருடம் வடமராட்சி பட்டம் விடும் சீசன் களைகட்டும் என்று எதிர்பார்க்கப்பட்டது. எனினும் இயற்கையின் வஞ்சிப்பு பட்டங்கள் மீது தொடரவே செய்தது. வஞ்சமில்லாமல் வழமையைவிடவும் நீண்ட நாள்களாக மாரிமழை வாரிப் பொழிந்தது. இதனால் காற்றுவீசும் காலத்தின் அளவு குறைவடைந்தது. வழமையாக மாரிகாலத்தில் தொடங்கி தைப்பொங்கலோடு பட்டம் விடும் சீசன் வடமராட்சியில் நிறைவுபெற்றுவிடும். எனவே விட்டதைப் பிடித்துவிட வேண்டுமென்ற எண்ணத்தில் மழை பெய்யாது விட்டிருந்த காலப்பகுதியில் ஒருசிலர் பட்டங்களை ஏற்றத் தொடங்கினாலும் முன்னைய காலங்களைப்போல அவ்வளவாக இம்முறை களைகட்டவில்லை.

இந்தக் குறையைத் தீர்ப்பதற்காக பட்டம்விடும் சீசனின் இறுதிநாளன்று - தைப்பொங்கலன்று - 40 அடி நீளமான நான்கைந்து இராட்சத பட்டங்களைப் பறக்கவிடுவதற்காக இளைஞர்கள் வல்லை வெளியில் இறங்கினார்கள். பட்டங்களின் பிரமாண்டம் பார்ப்போரின் கண்களைக் குத்த, வல்லைவெளி வீதியால் பயணிப்போரெல்லாம் பட்டங்கள் ஏற்றப்படும் இடங்களில் குவியத் தொடங்கினர். இதுதவிர இராட்சதப் பட்டங்கள் ஏற்றப்படப்போகின்ற செய்தியறிந்து ஏராளமான இளைஞர், யுவதிகளும், வயதான பட்டப் பிரியர்களும்கூட வல்லைப் பக்கமாக நகரத் தொடங்கினர். ஆனாலும் காலையிலிருந்தே இந்தப் பட்டங்கள் மீது காற்று கருணை காட்டாமல் எங்கேயோ ஒளிந்துகொண்டது. சிறுஅளவிலான பட்டங்கள் மட்டுமே ஓரளவுக்கு வானேறி அசைந்தாடின. எனவே விண்கலம் ஒன்றை விண்ணுக்குச் செலுத் துவதுபோன்ற ஏற்பாடுகளுடன் இராட்சதப் பட்டங்களைப் பறக்கவிட முயற் சித்த இளைஞர்களுக்கு ஏமாற்றம் மட்டுமே பரிசாகக் கிடைத்தது.

40 அடி நீளமான பிரமாண்டப் பட்டத்தை ஏற்றுவதற்கான பூர்வாங்க வேலைகள் முடிவடைந்ததும் வெடிகளைக் கொளுத்திவிட்டு நீண்ட நைலோன் கயிற்றை இழுத்துக்கொண்டு இளைஞர்கள் ஓடுவார்கள். ஆனால் இவர்களின் இந்தப் பகீரதப் பிரயத்தனத்துக்குச் சற்றேனும் இசைந்து கொடுக்காமல் மல்லாந்து கீழே விழுவதுதான் அன்றைக்கு முழுவதும் இந்தப் பட்டங்களின் பொழுது போக்காக இருந்தது. இதனால் பட்டங்களை ஏற்றவந்த இளைஞர்கள் மட்டு மல்லாது பார்க்க வந்தவர்களும் ஏமாற்றத்தைச் சுமந்தபடி வீடு செல்வதைத் தவிர வேறு வழியேதும் இருக்கவில்லை. காற்று ஏமாற்றியதால் அடுத்த நாள்காலை வல்லை வெளி வயல்களில் உள்ள தண்ணீரில் மிதந்து கொண்டிருந்தன கைவிடப் பட்ட இராட்சதப் பட்டங்கள். இதைப் பார்த்தவர்களுக்கு 'இந்தப் பட்டங்களை ஏற்ற விடாமல் காற்றே நீ ஏன் ஏமாற்றினாய்?' என்பதே எல்லோரினதும் கேள்வியாக இருந்தது.



★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★ ★★★★★★★★★★★★★

# சமூகப் பணியிலும் விளையாட்டுத் துறையிலும் மிளிரும் அல்வாய் மனோகரா சனசமூக நிலையம்

இலங்கையின் விளையாட்டுதுறையில் வடமராட்சி மண்ணுக்கு உயர்ந்த இடம் உண்டு. அத்தகைய விளையாட்டு ஆற்றலை வெளிக்கொணரும் முக்கிய பணிகளைச் சனசமூக நிலையங்களும் ஆற்றி வருகின்றன. சனசமூக நிலையங்கள் தனித்து விளையாட்டுதுறையினை மட்டும் நோக்காது கிராம அபிவிருத்தியின் அங்கமாகவும் செயற்பட்டு வருகின்றன. அந்த வகையில் அல்வாய் மனோகரா சனசமூக நிலையம் குறிப்பிடத்தக்கது. அல்வாய்க் கிராமத்தில் அமைந்துள்ள இச்சனசமூக நிலையமும் அல்வாயின் விளையாட்டு சமூக அபிவிருத்தியை நோக்காகக் கொண்டு இயங்கி வருகின்றது.இச் சனசமூக நிலையம் 1927 ஆம் ஆண்டு அல்வாய்க் கிராம மக்களால் ஸ்தாபிக்கப்பட்டது. அக்கால கட்டடத்தில் ஒரு புனரமைக்கப்படாத சிறிய கட்டடம் ஒன்றில் அமைக்கப்பட்டிருந்தது. பின்னர் 2004 ஆம் ஆண்டு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களான கஜேந்திரகுமார் பொன்னம்பலம், மாவை சேனாதிராஜா ஆகியோரின் நிதியுதவியுடன் புனரமைக்கப்பட்டு 18.01.2004 அன்று வைபவரீதியாகத் திறந்துவைக்கப்பட்டது.

விளையாட்டுத்துறையில் இதன் சாதனைப் பயணம் குறிப்பிடத்தக்கது. அந்தவகையில் ஆண், பெண் இருபாலருமாக 75 விளையாட்டு வீர, வீராங்கனைகள் இதில் அங்கம் வகித்துச் செயற்பட்டு வருகின்றனர். உதைபந்து, கிரிக்கெட், வலைப்பந்து, எல்லே என பல்வேறு அணிகள் இயங்கி வருகின்றன. இச்சனசமூக நிலையத்தின் வெற்றிப்பயணத்தில் சுமார் 98 கேடயங்களை வீரர்கள் தமதாக்கி உள்ளனர். இதில் 40 முதலாம் இடங்களையும் 50 இரண்டாம் இடங்களையும் 8 மூன்றாம் இடங்களையும் பெற்றுள்ளனர்.1990ஆம் ஆண்டிற்கு பிற்பட்ட காலப்பகுதியில் இதன் சாதனைப் பயணத்திலே குறிப்பிடத்தக்க வெற்றிகள் பல உண்டு. 1991 ஆம் ஆண்டு நடந்த உதைபந்தாட்டப் போட்டியில் முதலாமிடம் பெற்றுள்ளனர். 2004 ஆம் ஆண்டு பிரதேச செயலகம் நடத்திய எல்லே போட்டியில் முதலாமிடம் பெற்றுள்ளனர். 2003ஆம் ஆண்டு பிரதேச செயலகம் நடத்திய உதைபந்தாட்டப் போட்டியில் முதலாமிடம் பெற்றுள்ளனர்.2004 ஆம் ஆண்டு பிரதேச செயலகம் நடத்திய மென்பந்து துடுப்பாட்டப் போட்டியில் முதலாமிடம் பெற்றுள்ளனர். இவ்வாறு நீண்டு செல்லும் பட்டியலை உடைய பாரிய வெற்றிகளைப் பெற்ற இக்கழகம் தன் வெற்றிப் பாதையில் தொடர்ந்தும் முன்னேறி வருகின்றது.

இச்சனசமூக நிலையத்தின் அபிவிருத்தியிலே பங்கெடுத்தவர்கள் பலர் உள்ளனர். இவ்வகையில் முன்னாள் இந்து கலாசார அலுவல்கள் அமைச்சராக இருந்த தி.மகேஸ்வரனால் மைதானம் அபிவிருத்தி செய்யப்பட்டுப் புனரமைக்கப்பட்டது. இச்சனசமூக நிலையத்திற்கான நூல்கள் அன்பளிப்பினைத் தமிழ்த் தேசியக் கூட்ட மைப்பு நாடாளுமன்ற உறுப் பினர் கி.சிவனேசன் வழங் (...)




தொகுப்பு:
வட நம்பி,ஹரிஸ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா

### மேடம்



லாபகரமான பணவரவுகளைப் பெறலாம். உத்தியோகத்தர்கள் மேலதிகாரிகளின் பாராட்டுக்களைப் பெறுவர். அடகு வைத்த பொருள்களை மீட்கலாம். அரசியல்வாதிகளுக்கு செல்வாக்கு கூடும். சில வேலைகளைத் தாமதமாகத்தொடக்கினால், சரியான நேரத்திற்கு முடிப்பீர்கள். வளம் பெறும் நாள்.

### இடபம்




தம்பதியர் இடையே அன்னியோன்னியம் அதிகரிக்கும். உங்களின் வேலை ஒன்றை சக ஊழியர்கள் மூலம் முடிப்பீர்கள். கடன் நிலுவைகளைக், கட்டண நிலுவைகளைச் செலுத்துவீர்கள். வெளியூர்களில் இருக்கும் ஒருவர் சொல்லும் தகவலால் சந்தோஷம் அடைவீர்கள். பெண்கள் விரும்பிய சில பொருள்களை வாங்குவர்.

### மிதுனம்



அண்டை அயலார் மத்தியில் மதிப்பு, கௌரவம் மேம்படும். பலர் பங்கேற்கும் நிகழ்ச்சி ஒன்றில் நீங்களும் கலந்து கொள்ளலாம். முன்பின் பார்த்திராத ஒருவருக்காக வெளியிடங்களில் காத்திருக்கலாம். ஆலய வழிபாடுகளில் நாட்டம் செல்லும். மருத்துவச் செலவுகளுக்கு ஆட்படலாம். கனவுத் தொல்லையுண்டு.

### கடகம்



சில தவறுகளைச் செய்து விட்டு குடும்பப் பெரியவர்களின் அதிருப்திக்கு ஆட்படலாம். விரும்பத்தகாத சில சம்பவங்கள் நடக்கலாம். சபலங்களால் பொருள் இழப்புகளுக்கு ஆளாகலாம். உங்களிடம் உதவி பெற்ற சிலரே உதாசீனம் செய்து பேசுவர். வீண் பழிகளைத் தவிர்க்க மற்றவர்கள் விவகாரங்களில் தலையிட வேண்டாம்.

### சிங்கம்



தொழில், வியாபார ரீதியான பணவரவுகளைப் பெறலாம். மாணவர்கள் ஆசிரியர்களின் கண்டிப்பிற்கு ஆளாகுவர். பெண்கள் குடும்ப விடயங்களில் விட்டுக் கொடுத்து செல்ல வேண்டும். பிள்ளைகள் வழியில் சுபச் செலவுகளைச் சந்திக்கலாம். கணவன் மனைவி இடையே ஏற்பட்ட மனஸ்தாபம் தீர்விற்கு வரும்.

### கன்னி



பெரிய அளவில் கவலைப்பட்ட ஒரு விடயம் சுமூகமான முடிவுக்கு வரும். பொலிஸ் தொடர்பான பணிபுரிவோர் கூடுதல் வருமானம் பெறலாம். வழக்கு விவகாரங்களில் சாதகமான அணுகுமுறை காணப்படும். நீண்ட நாள்களாக உங்களுடன் பேசாத ஒருவர் திடீரென பேசலாம். வாகனயோகம் கிட்டும்.

### துலாம்



பிடிவாதமான செயற்பாடுகளால் குடும்ப உறுப்பினர்க்ளின் அதிருப்திக்கு ஆளாகலாம். அரசு தொடர்பான காரியங்கள் இழுபறிக்குப் பின்னர் முடிவுக்கு வரும். மற்றவர்களுக்கு தாராளமாக செலவு செய்வீர்கள். சிறிய வேலை ஒன்றுக்கு பெரிய அளவில் அலட்டிக் கொள்வீர்கள். இஷ்ட தெய்வ வழிபாடுகளை மேற்கொள்வீர்கள்.

### விருச்சிகம்



தொழில் ரீதியான செல்வாக்கு அதிகரிக்கும். கடன் நிலுவைகளைக் கண்டிப்புடன் கேட்டு வாங்குவீர்கள். தேடிவரும் சிலருக்காக உதவிகள் செய்யலாம். பெரிய ஆதாயத்தை எதிர்பார்த்து செய்த வேலை ஒன்றில் எதுவும் கிடைக்காமல் போகலாம். நீண்ட தூர பயணங்கள் செல்லப் போட்ட திட்டம் நிறைவேறும்.

### தனுசு



புதிய முயற்சிகளில் வெற்றி பெறும் நாள். பெண்கள் பிறந்த வீட்டின் உதவிகளைப் பெற்று மகிழ்ச்சி அடைவர். இரண்டு நாள்களாக வராமல் இருந்த பணவரவு ஒன்று இன்று கைக்குக் கிடைக்கும். நண்பர்களை நம்பி ஒப்படைத்த வேலைகள் நல்ல விதமாக முடியும். ஊக்கம், உற்சாகமாக செயல்படுவீர்கள்.

### மகரம்



எதிர்பாராத செலவுகளைச் சந்திக்கலாம். சக ஊழியர்கள் உதவிக்கரமாக இருப்பர். குடும்ப உறுப்பினர்கள் உங்களை புரிந்து கொள்ளாமல் நடந்து எரிச்சல் உண்டாக்கலாம். அரசியல்வாதிகள் வீண் பேச்சுக்களைத் தவிர்க்க வேண்டும். மாற்று மதத்தினர் உதவிக்கரமாக இருப்பர். சிலரிடம் கடன் வாங்கலாம்.

### கும்பம்



செல்வாக்கும், சொல்வாக்கும் அதிகரிக்கும் நாள். காலை நேரத்தில் சந்தோஷமான செய்திகளை தொலைபேசி வழியில் கேட்கலாம். நண்பர்கள் வழியில் எதிர்பாராத உதவிகள் கிடைக்கலாம். நாளை சந்திக்க நினைத்த ஒருவரை இன்றே சந்திக்கலாம். தந்தை தொடர்பான விடயங்களில் பட்டும் படாமல் நடந்து கொள்ளவும்.

### மீனம்



உடல் நலம் பற்றிய கவலைகள் உண்டாகலாம். திட்டமிட்ட சில வேலைகளில் தடை, தாமதங்கள் ஏற்படலாம். விவசாயிகள் ஒன்றுக்கு பல முறை அலைய நேரிடலாம். தாயார் தொடர்பான விஷயங்களில் பட்டும் படாமல் நடந்து கொள்ளவும். கூட்டுத் தொழில் புரிவோர் கவனமாக செயல்பட வேண்டும். வீண் பயம் உண்டாகும்.


## எமது உள்ளத்தில் உறைந்துள்ள அன்புத் தெய்வத்தின்

# எட்டாம் ஆண்டு நிறைவு நினைவு அஞ்சலி!





மலர்வு: 14.04.1947

உதிர்வு: 17.01.2002

திதி: 19.01.2010

அன்புத் தெய்வமாய் அவனியிலே வலம் வந்தீர்!
என்றும் எங்களுடன் இணைந்தே வாழ்ந்திருந்தீர்
துன்பம் எம்மை வாட்டத் தூரதேசம் போனீரோ?
இன்று உமை நினைத்து இதய அஞ்சலி செய்கின்றோம்

குடும்பத்தின் ஒளிவிளக்காய் ஒளிவீசிப் பிரகாசித்தீர்!
குடும்பமே இன்று தவியாய்த் தவிக்கின்றதையா
ஆண்டுகள் எட்டும் ஆகியே விட்டாலும்
ஈண்டு உமது உருவம் நெஞ்சை விட்டகலாது....!

ஓம் சாந்தி!!

மண்கும்பான் உயர்குடித் தோன்றல்

**அமரர்**

**ஐயம்பிள்ளை நடராசா**

(உரிமையாளர்- மைதிலி நகைமாடம்)

**என்றும் நினைவுடன் வாழும்:**

**யாழ்.மைதிலி ஜுவலர்ஸ்**

79Z, செட்டியார் தெரு,
கொழும்பு-11, தொ.பே: 0112396239.


**மைதிலி நகைமாடம்**

89V,கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே: 021 222 7902


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கூட்டமைப்பின் தீர்மானத்தின் பின்னர் மாறிவரும் உள்ளூர், மேற்குலகப் போக்கு

- அபிஷேகா -





பெரும்பான்மைத் தமிழ் மக்களின் விருப்பத்திற்கமைவாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வரும் ஜனாதிபதித் தேர்தலில் ஆட்சி மாற்றத்திற்கான ஆதரவை தமிழ் பேசும் மக்களிடம் கோருவதற்கு முடிவெடுத்திருந்தது. இம்முடிவைத் தொடர்ந்து தேர்தல் களத்தில் ஏற்படக்கூடிய பாதிப்பை எதிர்கொள்ளக் கூடிய வகையில் ராஜபக்ஷ அரசு வாக்குறுதிகள் - அன்றாடப் பிரச்சினைகளிற்கான அதிரடித் தீர்வுகள்- என பல வழிகளில் தமது செய்ற்பாடுகளை வேகப்படுத்தியது. இது தமிழ் மக்களின் அரசியல் பலமான வாக்குப் பலத்தின் பெறுமதியை தெளிவாக வெளிப்படுத்தி நிற்கின்றது. அதேவேளை இலங்கையில் ஆட்சி மாற்றத்தை மேற்குலகமும் விரும்புகின்றது என்பதை குறிப்புணர்த்தும் சில செயற்பாடுகளை அவர்கள் முடுக்கிவிட்டிருப்பதன் மூலம் புரியக்கூடியதாக உள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முடிவால் கிடைக்காமல் போகும், அல்லது எதிராகப் போகும் தமிழ் மக்களின் வாக்குச் சரிவைச் சரிப்படுத்த வேண்டிய கட்டாய நிலையில் ராஜபக்ஷ உள்ளார். இதனை எதிர்கொள்ள ராஜபக்ஷவிற்கு இருப்பது இரண்டு வழிகளே: ஒன்று சிங்களப் பேரினவாதத்தை உசுப்பிவிடுதல், இரண்டு தமிழ் மக்களின் வாக்குகளைக் கவரக்கூடிய வாக்குறுதிகளை வழங்கி விரைவாக நடைமுறைப்படுத்துதல்.

### கொட்டப்படும் வாக்குறுதி

உயர்பாதுகாப்பு வலயத்தின் சில பகுதிகளில் மக்கள் மீளக்குடியேறுவதற்கான அனுமதி, யாழ்ப்பாணத்திற்கான இருபத்தி நான்கு மணிநேரப்பயண அனுமதி, புனர்வாழ்வு அளிக்கப்பட்டு வரும் போராளிகளில் ஆயிரம் பேரை விடுதலை செய்தல் போன்றன தமிழ் மக்களின் வாக்குகளைப் பெற ராஜபக்ஷவினால் வழங்கப்பட்ட அண்மைய வாக் குறுதிகள் ஆகும்.

இந்த வாக்குறுதிகள் அனைத்தும் ஜனாதிபதித் தேர்தலில்பொது வேட்பாளர் ஒருவருக்கு ஆதரவளித்தல், தேர்தலை புறக்கணித்தல், ராஜபக்ஷவை ஆதரித்தல் போன்ற முடிவுகளை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எடுக்காததினால் கிடைத்த (எதிர்வினை அரசியல் அடைவு) பிரதிபலன்களாகவே கருதமுடியும். அத்துடன், இத்தீர்மானம் தமிழ் மக்களின் வாக்குகள் மீதான அரசியல் தீர்மானத்தின் வலிமையைத் தமிழ் மக்களுக்கு மீண்டும் தெளிவாக்கியிருப்பதுடன், சிங்கள அரசியல் தலைமைகளுக்கு தமிழ் மக்களின் வாக்கு வலிமையை நிச்சயம் புரியவைத்திருக்கும்.

இத்தேர்தல் ஜனாதிபதி ராஜபக்ஷ அவர்களுக்கு கடுமையான நெருக்கடியைக் கொடுத்துள்ளது என்பது அண்மையில் வழங்கப்பட்ட மன உளைச்சலுக்கான சிகிச்சை சுட்டி நிற்கின்றது. அரசன் அன்று கொல்வான் தெய்வம் நின்று கொல்லும் என்பதைப்போல வெற்றி மமதையில் தமிழ் மக்களை அநியாயமாகக் கொன்று குவித்து கோரத் தாண்டவம் ஆடிய ராஜபக்ஷவை காலம் தான் தண்டிக்கத் தொடங்கியுள்ளது. என்றாலும் அத்தண்டனை நியாயமான முறையில் கிடைப் பதற்கு தமிழ் மக்களின் ஒருங்கிணைந்த செயற்பாடு மிகவும் அவசியம்.

### மேற்குலகத்தின் போக்கு

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஜனாதிபதித் தேர்தல் தொடர்பான முடிவைத் தொடர்ந்து அரசியல் களத்தில் ஏற்பட்ட மாற்றங்களால், மனித உரிமைகள் தொடர்பான குற்றச்சாட்டுக்கள் முன்னுரிமைப் படுத்தப்பட்டு அதற்கு செயல் வடிவம் கொடுக்கும் செயற்பாடுகள் மீள ஆரம்பிக் கப்பட்டுள்ளன. குறிப்பாக நெதர்லாந்து, அயர்லாந்து, பிரான்ஸ் போன்ற நாடுகள் போர்க்குற்ற விசாரணை தொடர்பில் அக்கறை காட்டத் தொடங்கியுள்ளன.

பிரித்தானியாவின் சனல் - 04 தொலைக் காட்சி வெளியிட்ட காணொளிக் காட்சி உண்மையானது என சர்வதேச நிபுணர் குழுவைக் கொண்டு பரிசீலித்து உறுதிப் படுத்திய ஐ.நாவின் நீதிக்குப் புறம்பான படுகொலைகள் தொடர்பான அதிகாரி பேராசிரியர் பிலிப் அல்ஸ்ரனின் அறிக்கை ராஜபக்ஷவின் அரசை நெருக்கடிக்குள் தள்ளும் என்பதால் அந்த அறிக்கை வெளிவராமல் தடுக்க இலங்கை அரசு பாரிய பகீரதப் பிரயத் தனம் மேற்கொண்டபோதும் அம்முயற்சிகள் தோல்வியில் முடிந்தன. இது ஜனாதிபதி ராஜபக்ஷவுக்கு மேலும் நெருக்கடியைத் தோற்றுவித்துள்ளது.

மற்றும் ஜி.எஸ்.பி - பிளஸ் வரிச்சலுகை நீக்கம் தொடர்பில் பிரித்தானியா உறுதியாக இருப்பதுடன், பிரான்ஸ் போர்க்குற்ற விசாரணைகளை மேற்கொள்வதற்கு ஏதுவாக தனி நீதிமன்றம் அமைக்க முடிவெடுத்துள்ளது. மேற்குறிப்பட்ட நகர்வுகளை வைத்து ஒப்பு நோக்கும்போது தமிழ் மக்கள் வரும் ஜனாதிப தித் தேர்தலில் எடுக்க வேண்டிய நிலைப்பாடு தொடர்பான தெளிவைப் பெறலாம் எனத் தோன்றுகின்றது. ஏனெனில் ஜனாதிபதித் தேர்தல் நெருங்கிவரும் இத்தருணத்தில் சர்வதேச ரீதியாக குறிப்புணர்த்தப்படும் இந் நகர்வுகளிலிருந்து மேற்குலகமும் ஆட்சி மாற்றத்தை விரும்புகின்றது என்பது வெளிப் படையாகின்றது. அந்த ஆட்சி மாற்றம் எமக் குச் சாதகமாகப் பயன்படத்தப்பட வேண்டும்.

### படாதபாடுபடும் ராஜபக்ஷ

தனது வெற்றி வாய்ப்பை உறுதிப்படுத்த உள்ள இரண்டு வழிகளில் ஒன்றான தமிழ் மக்களுக்கு மேலதிக சலுகைகளை வழங்குதல் தொடர்பில், யாழ் விஜயத்தை மேற்கொள்ள முன் ஒரு பரீட்சார்த்த முயற்சியை மேற்கொள்ளத் தீர்மானித்தார். அதில் குறிப் பாக யாழ். குடாநாட்டில் உள்ள உயர்பாது காப்பு வலயங்களை அகற்றும் அறிவிப்பை துரையப்பா விளையாட்டரங்கில் நடைபெறும் பொதுக்கூட்டத்தில் வைத்து பகிரங்கமாக அறிவிப்பார் என ராஜபக்ஷ தரப்பால் தெரிவிக்கப்பட்டிருந்தது. அத்துடன் யாழ்ப்பாணத்திற்கான 24 மணிநேர போக்குவரத்துக்கு பாதையைத் திறந்து விட்டார். மற்றும் 745 முன்னாள் விடுதலைப்புலிப் போராளிகளை விடுதலை செய்தார். (விடுதலை செய்யப்பட்ட முன்னாள் போராளிகள் அனைவரும் அவர்க ளின் பெற்றோரிடம் ஒப்படைக்கப்பட்டு மீண் டும் தடுப்பு முகாம்களிலேயே அடைக் கப்பட்டுள்ளார்கள் என்பது தற்போதைய நிலவரம்)

அதன்பின் யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்த ராஜபக்ஷவுக்கு எதிர்பார்த்த அளவிற்கு யாழ். மக்கள் வரவேற்பு கொடுக்காமல் எதிர்ப்பைக் காட்டியதை உணர்ந்தார். இதனால் யாழ் துரையப்பா மைதானத்தில் நடைபெற்ற ஜனாதிபதி தேர்தல் பிரச்சார கூட்டத்தில் தமிழ் மக்களைக் கவரும் பல தேர்தல் வாக்குறுதிகளை வெளியிடுவார் என எதிர்பார்க்கப்பட்ட நிலையில், முக்கிய வாக்குறுதிகள் எதனையும் வழங்காது, சிறு சிறு தேர்தல் வாக்குறுதிகளை மட்டுமே வழங்கிவிட்டுச் சென்றார் ராஜபக்ஷ. ஏனெனில் தமிழ் மக்களுக்கு என்ன வாக்குறுதி வழங்கினாலும் தனது கட்சிக்கு வாக்குகள் கிடைக்காது என்ற அவநம்பிக்கையில் ஏற்கனவே குறிப்பிட்ட முக்கிய வாக்குறுதிகளையும் வழங்குவதை தவிர்த்துவிட்டார். மேலும் தமிழ் மக்களுக்கு பெரியளவில் வாக்குறுதிகளை வழங்கவில்லை எனச் சிங்கள மக்களிற்கு தெரியப்படுத்தி, சிங்களப் பெரும்பான்மையினத்தின் பேரினவாதத்தை தூண்டி தனது வெற்றியை உறுதிப்படுத்த ராஜபக்ஷ தீர்மானித்தே இவ்வாறு செயற்பட்டார் என கருதத் தோன்றுகின்றது.

பண்டாரநாயக்கா நினைவு மண்டபத்தில் வெளியிடப்பட்ட ஜனாதிபதியின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவால் முன்வைக்கப்பட்டு ராஜபக்ஷவால் ஏற்றுக்கொள்ளப்பட்ட தாக கூறப்பட்ட கோரிக்கைகளில் எதுவுமே ராஜபக்ஷவின் தேர்தல் விஞ்ஞாபனமான மஹிந்த சிந்தனை-02 இல் உள்ளடக்கப்படவில்லை. ஆனால், அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தமிழ் மக்களின் அடிப்படைப் பிரச்சினைகளுடன் உயர்பாதுகாப்பு வலய மீள்குடியேற்றம் உட்பட தாம் முன்வைத்த கோரிக்கைகளை ராஜபக்ஷ ஏற்றுக்கொண்டுள்ளார் எனவே அவருக்கு ஒரு சந்தர்ப்பம் வழங்க வேண்டும் எனக்கூறி பிரச்சாரம் செய்து வருகின்றார்.

ஜனாதிபதி தேர்தல் விஞ்ஞாபன வெளியீட்டு உரையில் பயங்கரவாதத்திற்குத் தொடர்ச்சியாக ஆதரவு தெரிவித்து வரும் சில அமைப்புக்கள் மீண்டுமொரு ஈழப்போராட்டத்திற்கு வழி அமைத்துக் கொடுக்க முயற்சி செய்கின்றன என மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்தார். எனவே தமிழ் மக்களின் வாக்குகள் தனக்கு கிடைக்காது என்ற நிலையில் மீண்டும் ஈழப்போராட்டம் வலுப்பெறும் என்ற கருத்தை விதைத்து சிங்கள மக்களிடம் அச்சத்தையும் பேரினவாத சிந்தனையையும் தூண்டி தேர்தலை எதிர்கொள்ள முயற்சிக்கின்றார்.

ஏனெனில் ஏற்கனவே கிழக்கில் மக்கள் விடுதலைப்படை என்ற ஒரு அமைப்பை கருத்தியல் அடிப்படையில் தோற்றுவித்து தனது அரசியல் நகர்விற்கு சாதகமாகப் பயன்படுத்த முற்பட்டார். ஆனால் இந்தியா பஸில் ராஜபக்ஷவை அழைத்து எச்சரித்ததைத் தொடர்ந்து அக்குறுக்கு வழியைக் கிடப்பில் போட்டு விட்டு, மீண்டும் அக்கருத்தை வேறு வசனநடைக்குள்ளால் சொல்ல முற்படுகின்றார். தமிழ் மக்களைக் கவரு தல் என்ற வழி சாத்தியமாகாத சந்தர்ப் பத்தில், பேரினவாதத்தை தூண்டி வாக்குப் பெறுவதில் தீவிர கவனம் செலுத்தப்படுவதானது ராஜபக்ஷவின் அரசியல் வங்குரோத்து தன்மையையே வெளிப்படுத்தி நிற்கின்றது.

அத்துடன் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் செயலாளர் நாயகமும் அமைச்சருமான மைத்திரிபால சிறிசேன கண்டியில் நடைபெற்ற செய்தியாளர் மாநாடு ஒன்றில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஜனாதிபதியிடம் முன்வைத்த பத்து அம்சக் கோரிக்கைகளை ஜனாதிபதி ஏற்க மறுத்து விட்டார். அவற்றை ஏற்பது நாட்டைக் காட்டிக் கொடுப்பதற்கு சமம் என்று கருதியே ஜனாதிபதி அவற்றை நிராகரித்தார். தமிழ்த் தேசியக் கூட்டமைப் பின் கோரிக்கை கள் அர சியல் நடவடிக்கை ஊடாக ஈழத்தை அடைவ தற்கான நோக்கத்தைக் கொண்டவை.





முப்பது வருடங்களாக பல்லாயிரம் உயிர் களை இழந்து போராடி மீட்ட தாய்நாட்டின் சுதந்திரத்தை அடகு வைத்துத் துரோகி ஆவதற்கு ஜனாதிபதி விரும்பவில்லை. சரத் பொன்சேகா தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கோரிக்கைகளை ஏற்றது நாட்டைக் காட்டிக் கொடுக்கும் வேலை என சிங்களப் பேரினவாதத்தை உசுப்பியுள்ளார். இக்க ருத்துருவாக்க மானது ஜனாதிபதி ராஜபக்ஷ, சிங்கள போரினவாதத்தை மீண்டும் உசுப் பேற்றி, உணர்ச்சிவசப்படுத்தி, சிங்கள மக்களின் அடிப்படைப் பிரச்சினைகளை மறைத்து ஆட்சியில் அமர முயலும் உத்தியாகும்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உட்பட சர்வதேச நாடுகளும், பல மனித உரிமை அமைப்புக்களும் காரணமின்றி கைது செய்யப்பட்டவர்களின் விடுதலை, மக்களின் சுதந்திர நடமாட் டம், மீள்குடியேற்றம், உயர்பாதுகாப்பு வலய நீக்கம் உட்பட தமிழ் மக்களின் தீர்க்கப்படக்கூடிய பல அடிப்படைப் பிரச்சினைகளை தீர்க்குமாறு கோரிக்கைகளை முன்வைத்தன. கோரிக் கைகள் நிராகரிக்கப்பட்ட நிலையில் சர்வதேச நாடுகள் அரசியல், பொருளா தார ரீதியாக பல அழுத்தங்களைப் பிரயோகிக்கத் தொடங்கின.

அண்மைக்காலம் வரை எதற்கும் மசிந்து போகாமல் செயற்பட்ட ராஜபக்ஷ அரசு ஜனாதிபதித் தேர்தல் அறிவிக்கப்பட்டபின் குறிப்பட்ட அகதிகளை மீள்குடியேற்றியதாகக் காட்டியது. அத்துடன் குறிப்பட்ட சில முகாம்களைச் சேர்ந்தவர்களை சுதந்திரமாக நடமாட அனுமதித்தல், யாழ்ப்பாண போக்குவரத்து தடையை குறிப்பிட்டளவு நேரம் நீக்குதல் போன்ற சலுகைகளை வழங்கி தமிழ் மக்களின் வாக்குகளை கவரும் செயற்பாடுகளை முன்னெடுத்தது.

மேலும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தீர்மானத்திற்குப் பின்னால் மாற்றமடைந்த உள்ளூர் மற்றும் சர்வதேச அரசியல் நிலைப்பாடுகளை வெல்வதற்கு தமிழ் மக்களின் ஆதரவு தேவை என உணர்ந்துள்ளதால், மேலும் பல சலுகைகளை வழங்கி தமிழ் மக்களின் வாக்குகளை பெற கடும்பிரயத்தனத்தை மேற்கொள்கின்றது. அதில் கைது செய்யப்பட்ட முன்னாள் போராளிகளின் விடுதலை முதன்மையானதாக அறிவிக்கப்பட்டது. ஆனால் நீண்டகாலமாக சந்தேகத்தின் பேரில் தடுத்து வைத்திருப்பவர்களை

(14 ஆம் பக்கம் பார்க்க....)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

**தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை - 2009**

யா / கோப்பாய் நாவலர் தமிழ் வித்தியாலயம்



சி. யமில்ராஜ் 160 புள்ளி



வி. துவாரகன் 160 புள்ளி



வெ. தனுஜா 155 புள்ளி



ஆ. தேனுஜன் 150 புள்ளி



பா. சிபோறா 148 புள்ளி



யோ. ஹரிசங்கர் 146 புள்ளி



ஞா. மதுஷா 145 புள்ளி



வ. அனோஜன் 143 புள்ளி

யா / கோப்பாய் நாவலர் தமிழ் வித்தியாலயத்தில் இன்று இடம்பெறும் பரிசளிப்பு விழாவில் கௌரவம் பெறும் புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த 8 மாணவர்களையும் வாழ்த்துவதோடு, 100 புள்ளிகளுக்கு மேல் பெற்றுச் சாதனை படைத்த மற்றும் 23 மாணவர்களையும் பாராட்டுகின்றோம்.

19.01.2010

பாடசாலை அபிவிருத்திச் சங்கம்
யா / கோப்பாய் நாவலர் தமிழ் வித்தியாலயம்

## திருமலை POSH Beauty Parlour நடத்தும் ஒருநாள் பயிற்சிப் பட்டறை

உள்ளடக்கம்:

| | |
|---|---|
| 1.Straightening | 2.Facials |
| 3.Waxing | 4.Hair colouring |
| 5.Haircut | 6.Eyebraw shaping |

மற்றும் அழகுநிலைய முகாமைத்துவம், பராமரிப்பு சம்பந்தமான விளக்கங்களும் வழங்கப்படும். அனுமதிக் கட்டணம் 2000/=

குறிப்பு: பழைய மாணவர்களுக்கான வகுப்புக்கள் ஆரம்பிக்கப்பட இருக்கின்றன.

இடம்: திருமறைக்கலாமன்றம், கலைத்தூது மணிமண்டபம், இல.328, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.

காலம்: 31.01.2010 ஞாயிற்றுக்கிழமை

நேரம் : 9.00 am - 5.30 pm

பதிவுகளுக்கு: திருமறைக்கலாமன்றம், 021 222 2393

மேலதிக விபரங்களுக்கு: 0773053242/ 026 2224524

(93999)

## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு 11 ★ 07 ★ 1950



இறப்பு 10 ★ 02 ★ 2008

**அமரர் அரியரத்தினம் பிரபாகரன்**

திதி-சதுர்த்தி 19.01.2010

அன்புத் தெய்வமே நீங்கள் இந்த மண்ணை
விட்டுச் சென்று ஈராண்டுகள் சென்றதப்பா!
நித்தம் புலம்புகின்றோம் உங்கள் திருமுகத்தைக் காணாமல் அப்பா!

விமான நிலைய வீதி,
பத்தமேனி,
அச்சுவேலி. (93938)

என்றும் உங்கள் பிரிவால் துயருறும்:
குடும்பத்தினர்.

## உள்ளம் நெகிழ்ந்த அஞ்சலிகள்



எமது நண்பியும்
சக வைத்தியருமான செல்வி
சிவதர்சனா சிவானந்தன்
அவர்களின் அன்புத் தந்தை

**சின்னத்துரை சிவானந்தன்**

அவர்கள் 17.01.2010 அன்று அகால மரணமடைந்ததையிட்டு அவரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக் கொள்வதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**26 ஆம் அணி வைத்திய நண்பர்கள்**

(93998)

## கூட்டமைப்பின் தீர்மானத்தின்.......

(13 ஆம் பக்கத் தொடர்ச்சி.....)

விடுதலை செய்வதைப் பற்றி சிந்திக்காமல், மக்கள் அபிமானத் தைப் பெற்ற விடுதலைப் புலிப் போராளிகளை விடுதலை செய்வதனூடாக தமிழ் மக்களின் மனங்களை கவர்ந்து, உச்சக்கட்ட வாக்கு வேட்டையை மேற்கொள்ளலாம் என்பதே இச்சலுகையின் பின்னாலுள்ள நோக்கம் என்பது தெளிவாகப் புலப்படுகின்றது.

தமிழ் மக்களின் சில அடிப்படைப் பிரச்சினைகளை தீர்ப்பது தொடர்பில் சரத் பொன்சேகா வாக்குறுதிகள் வழங்கியபோது அதை விமர்சித்த ராஜபக்ஷவின் அரசைச் சார்ந்தவர்கள் தற்போது பல்டி அடித்து தாமே முன்னின்று அவற்றைச் செய்யத் தொடங்கியுள்ளனர். சிலவேளை சரத் பொன்சேகா தமிழ் மக்களுக்குச் செய்வதாகக் கூறிய சில சலுகைகளைக்கூட ராஜபக்ஷ தேர்தலுக்கு முன்செய்து முடித்தாலும் ஆச்சரியப்படுவதற்கு இல்லை!.

ஆனால் தேர்தல் கால கரிசனைகள் நீண்ட ஆயுள் கொண்டவை அல்ல. தூர நோக்கில், தமிழ் மக்கள் இலங்கையில் தனித்துவமான அரசியல் உரிமைகளுடன் வாழவேண்டும் என்பதை நிலைநிறுத்த தமிழ் மக்களின் பலமாக இருக்கும் வாக்குகளை சரியாகப் பயன்படுத்த வேண்டும். இது மிகப்பெரிய மனிதக்கொலையை நடத்திய இலங்கையின் அதிகார பீடத்தை சர்வதேச மனித உரிமை நீதிமன் றின் குற்றவாளிக் கூண்டில் ஏற்ற வேண்டும். இச்சந்தர்ப்பத்தை தவறவிட்டால் இப்போதைக்கு தமிழ் மக்களை யாராலும் காப்பாற்ற முடியாது.

எனவே இத்தேர்தலில் ராஜபக்ஷவை தோல்வியடைய வைப்பதனூடாக தமிழ் மக்கள் சலுகைகளுக்கு சோரம் போனவர்கள் அல்லர் என்பதை வெளிப்படுத்துவதுடன் தமிழ் மக்களுக்கு ஏற்பட்ட அழிவை வெளிக் கொணர்வதற்கான சந்தர்ப்பத்தை மேற்கு லகத்திற்கும் வழங்கவதற்கு ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்த ஒன்றிணைந்து செயற்ப டுவதைப்பற்றி சிந்திக்க வேண்டும். குறிப்பாக, தமிழ் மக்கள் இந்தமுறை முழுமையாக பங்கு கொண்டு அவலத்தையும், அழிவையும், அவமானத்தையும் தந்த ராஜபக்ஷவை ஆட்சியிலிருந்து அப்புறப்படுத்த தமது வாக்குகளைப் பயன்படுத்த வேண்டும். இது எல்லோருக்கும் பாடமாக அமையட்டும்.

தமிழ்ப் புத்தாண்டு பிறந்துள்ள நிலையிலும் இன்னும் பல்லாயிரக்கணக்கான தமிழ் மக்கள் அகதிகளாக முகாம்களுக்குள் வழியற்று, கையேந்தி, இழிநிலையில் வாழ்ந்து கொண்டு இருக்கின்றார்கள். தமிழ் மக்கள் இப்புதிய ஆண்டில் தமக்கான அரசியல் பாதையை சரியாக தெரிவு செய்வதே அவர்களின் அவல வாழ்வை விடிவு காலமாக்கும். புதிய ஆண்டு அவல வாழ்வின் தொடர்ச்சியாக இருந்தாலும் தமிழ் மக்கள் தமது அரசியல் செயற்பாட்டினூடாக அவல வாழ்க்கையிலிருந்து சிறிது சிறிதாக விடுபட்டு வாழ்வதற்கான ஏதுநிலைகள் எம்முன் தெளிவாக உள்ளது.

தமிழ் மக்களின் அரசியல் தலைமைகள் தமிழ் மக்களை சரியான வழியில் நகர்த்தி இப்புதிய தமிழ் புத்தாண்டிலாவது நிம்மதியான, அவலமவற்ற, கையேந்தும் நிலையற்ற சமூகமாக, பொருளாதார மேம்பாட்டோடும் அரசியல் உரிமைகளோடும் ஈழத் தமிழ்ச் சமூகம் வாழ தமிழ்த் தேசியத் தலைமைகளும், தாயகமக்களும், புலம்பெயர் தமிழ்ச் சமூகமும் ஓரணியில் நின்று செயற்பட வேண்டும்.

நன்றி: 'தமிழ்வின்'

## கடை வாடகைக்கு

யாழ். முனீஸ்வரன் வீதியில் அமைந்துள்ள 3 கடைகள் (29'x14') வாடகைக்கு விடப்படும்.

(93992) தொடர்பு: T.P. 0770855654

## வீடு விற்பனைக்கு

இராச வீதி, சிறுப்பிட்டி மேற்கு நீர்வேலியில் (நிலாவரைச் சந்தியில் இருந்து 150m) 5 பரப்புக் காணியுடன் கூடிய வீடு உடன் விற்பனைக்குண்டு.

தொடர்பு: 021 222 2429

(93994)

## சுவசெத Suwasetha சுவசெத லொத்தர்

உத்தியோகபூர்வ முடிவுகள்

சீட்டிழுப்பு இலக்கம் 350

சீட்டிழுப்பு திகதி: 17.01.2010

வெற்றி எழுத்து: T வெற்றி இலக்கங்கள்: 23 32 50 57 போனஸ் இலக்கம் 29

| | கூட்டு | பரிசுத்தொகை | வெற்றிப் பெற்ற தொகை |
|---|---|---|---|
| சுப்பர் பரிசு | ஆங்கில எழுத்து ஒன்றுடன் 4 இலக்கங்களும் பொருந்தினால் | ரூ. 12,231,958.50 | - |
| 1 பரிசு | 4 இலக்கங்கள் மாத்திரம் பொருந்தினால் | ரூ. 2,000,000.00 | - |
| 2 பரிசு | 3 இலக்கங்களுடன் போனஸ் இலக்கமும் பொருந்தினால் | ரூ. 50,000.00 | 02 |
| 3 பரிசு | 3 இலக்கங்கள் மாத்திரம் பொருந்தினால் | ரூ. 1,000.00 | 84 |
| 4 பரிசு | 2 இலக்கங்களுடன் போனஸ் இலக்கமும் பொருந்தினால் | ரூ. 500.00 | 160 |
| 5 பரிசு | 2 இலக்கம் மாத்திரம் பொருந்தினால் | ரூ. 40.00 | 4609 |
| 6 பரிசு | 1 இலக்கத்துடன் போனஸ் இலக்கமும் பொருந்தினால் | ரூ. 40.00 | 3069 |
| 7 பரிசு | 1 இலக்கம் மாத்திரம் பொருந்தினால் | ரூ. 20.00 | 58138 |

இந்த முறை வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத் தொகை ரூ. 1,733,880.00

**அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 12,525,646.50**

வெற்றி பெறும் டிக்கட்டுகள் சீட்டிழுப்புத் திகதியிலிருந்து 6 மாதங்கள் மட்டுமே செல்லுபடியாகும். ஐந்து இலட்சம் அல்லது அதற்குக்கூடிய தொகைக்கான பரிசு அரசாங்க வரிச்சட்ட திட்டங்களுக்கு உட்பட்டது. பரிசைப் பெறுவதற்கு தேசிய அடையாள அட்டை கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

சீட்டிழுப்புகளின் முன்னோடி
தேசிய லொத்தர் சபை
234/2, காலி வீதி, கொழும்பு 03. தொலைபேசி அவசர : 2470662, 2470663
தேவைக்கு: 2473360, 2433631 இணையத்தளம்: www.nlb.lk

அடுத்த சீட்டிழுப்பில் இருபது இலட்சம் ரூபாய் முதற் பரிசையும் வேறு பல பரிசுகளையும் வெல்லுங்கள்.

## கண்ணீர் அஞ்சலி



எமது ப.நோ.கூ.சங்கத்தின் தலைவர்

**அமரர் சுப்பிரமணியம் சிவஞானம்**

[பிரதம எழுதுநர்-காரைநகர் பிரதேசசபை]

அவர்களின் திடீர் மறைவுச் செய்தி கேட்டு மிகவும் துயர் அடைகின்றோம். அவரின் பிரிவால் துயருற்றிக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல ஈழத்துச் சிதம்பர சௌந்தராம்பிகை சமேத சுந்தரேஸ்வரப் பெருமானைப் பிரார்த்திக்கின்றோம். சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

ப.நோ.கூ. சங்கம்,
காரைநகர். (சி/564187) பணிப்பாளர்கள், அங்கத்தவர்கள், பணியாளர்கள்.

## மரண அறிவித்தல்கள்

### யோகநாதன் கிருஸ்ணா



அரியாலையைப் பிறப்பிடமாகவும், பிரான்ஸை தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட யோகநாதன் கிருஸ்ணா (தயா) (07.01.2010) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற யோகநாதன் -யோகம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற வேலாயுதம்- கருணையம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் மாலினியின் அன்புக் கணவரும் சுதர்சனின் பாசமிகு தந்தையும் குணராசா, காலஞ்சென்ற மல்லிகா மற்றும் சறோஜினி தேவி, ரஞ்சினிதேவி, மாலினிதேவி (பிரான்ஸ்), தவமணிதேவி காலஞ்சென்ற தவராசா ஆகியோரின் அன்புச் சகோதரனும், ஈஸ்வரி, ராசதுரை, மகேந்திரன், ரகுநாதன் (பிரான்ஸ்), மகாலிங்கம் ஆகியோரின் மைத்துனரும் ராஜன், பகிரதன், பிரதீபன், பாமினி, கமலரூபன், தனுஷன் ஆகியோரின் அன்பு மாமனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (19.01.2010) செவ்வாய்க் கிழமை மு.ப 10.00 மணியிலிருந்து 11.30 மணிவரை Lnstitut Medico legal de Paris, 2 Place Mazas 75012 Paris (Mo-5 lual de rapee) எனும் முகவரியில் வைக்கப்பட்டு, கிரியைகள் நடைபெற்று பின்னர் மதியம் 1.00 மணிமுதல் 3.00 மணி வரை Cremetorium du Pere Lachaise 71 Rue des Rondeaux 75020 Paris (Mo-3 Gambetta) எனும் முகவரியில் பார்வைக்கு வைக்கப்பட்டு தகனம் செய்யப்படும்.இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

134, புங்கங்குள வீதி,
அரியாலை, யாழ்ப்பாணம். (சி/564186)

தகவல்:
தாய், சகோதரர்கள்.

### செல்லத்துரை இராசலிங்கம் (பத்தர்)



நாச்சிமார் கோயிலடியைப் பிறப்பிடமாகவும், குளப்பிட்டி லேன், கொக்குவில் கிழக்கு, கொக்குவிலை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லத்துரை இராசலிங்கம் (பத்தர்) 17.01.2010 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லத்துரை-பொன்னம்மா தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான சிங்காரம்- முத்தம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் விமலாதேவியின் அன்புக் கணவரும் இராசதுரை, காலஞ்சென்றவர்களான திருநாவுக்கரசு, ருக்குமணிதேவி மற்றும் கைலாசதுரை ஆகியோரின் அன்புச் சகோதரனும், மாலாதேவி, றஞ்சினிதேவி, உதயகுமார் (விமலா கோல்ட் கவுஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும் தேவராஜா, கலைமதி (ஆசிரியை, பண்டத்தரிப்பு இந்துக்கல்லூரி) ஆகியோரின் மாமனும் வெண்ணிலவன், சதுர்திகா, தேவஹரி ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.01.2010) செவ்வாய்க்கிழமை பி.ப. 2மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கொக்குவில் இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

குளப்பிட்டி லேன்,
கொக்குவில் கிழக்கு, கொக்குவில். (93997)

தகவல்:
இ.உதயகுமார் (மகன்).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கரவெட்டிப் பிரதேச செயலகத்தில் அண்மையில் இடம்பெற்ற விதாதா வள நிலைய அடிக்கல் நாட்டும் வைபவத்தின்போது எடுக்கப்பட்ட படங்கள் இவை.விருந்தினர்கள் அழைத்து வரப்படுவதை முதற்படத்திலும் திருமதி திஸ்ஸ விதாரண மங்கள விளக்கேற்றுவதை இரண்டாவது படத்திலும், விஞ்ஞான தொழில்நுட்ப அமைச்சர் பேராசிரியர் திஸ்ஸ விதாரண விதாதா வள நிலைய அடிக்கல் நாட்டுவதை இறுதிப்படத்திலும் காணலாம். (படங்கள்: சுந்தா)

# ஜனாதிபதித் தேர்தலுக்கான பிரசாரங்கள் இம்முறை இணையத்தளங்களில் தீவிரம்

## மொறட்டுவ பல்கலை விரிவுரையாளர் தெரிவிப்பு

கொழும்பு, ஜன. 19

கடந்த காலங்களைப் போன்றல்லாது இம்முறை ஜனாதிபதித் தேர்தலில் இணையத்தின் ஊடான தேர்தல் பிரசார நடவடிக்கைகள் தீவிரமடைந்துள்ளன என மொறட்டுவ பல் கலைக் கழகத்தின் கணினி, விஞ்ஞான பீட சிரேஷ்ட விரிவுரையாளர் டாக்டர் சந்தனகமகே தெரிவித்துள்ளார்.

டிஜிட்டல் ஆயுதங்களைக் கொண்டு சைபர் வீதியில் ஒருவருக்கு ஒருவர் சேறுபூசும் நடவடிக்கைகள் இம்முறை தீவிரமாக முடுக்கி விட்டுள்ளன என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இணையத் தளங்களை ஹெக் செய்தல், போலியான தகவல்களை வெளியிடல், மின் அஞ்சல் மோசடி என முறையற்ற தேர்தல் பிரசார நடவடிக்கைகள் பல பரிமாணங்களில் இம்முறை இடம்பெற்று வருகின்றன எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

கடந்த கால தேர்தல்களின்போது தமது பிரசாரத்தை வலியுறுத்தும் வகையிலான மின் அஞ்சல்கள் மட்டுமே இணையத்தில் வலம் வந்தன. தற்போது இணைய தொழில்நுட்பம் முழுமையாகப் பயன்படுத்தப்பட்டு சேறுபூசும் பிரசாரங்களைத் தீவிரப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

இலங்கையில் அநேகமான இணைய மற்றும் வலை அமைப்புக்கள் ஏதாவதொரு ஒரு பக்கச் சார்பானதாக காணப்படுகின்றன.

2007 ஆம் ஆண்டு இலங்கையில் அறிமுகப்படுத்தப்பட்ட கணனிக் குற்றச்செயல் சட்டம் முழுமையாக அமுல்படுத்தப்பட வேண்டுமென அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, எதிர்க்கட்சிகளுக்கு அவதூறு ஏற்படுத்தும் நோக்கில் அரசு பல கோடி ரூபாக்களை இணையத்தில் செலவிடுகின்றது என்று ஜே.வி.பியின் நாடாளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.

இணையத்தளங்கள் ஹெக் செய்யப்படுதல் போலியான மின் அஞ்சல்கள் அனுப்பி வைக்கப்படுவதால் உள்ளிட்ட பல்வேறு வழிகளில் எதிர்க்கட்சிகள் மீது அழுத்தம் பிரயோகிக்கப்படுகிறது.

இணையத்தளங்களில் வெளியாகும் செய்திகள் மற்றும் தகவல்கள் தொடர்பில் எதிர்கட்சி ஆதரவாளர்கள் விழிப்புடன் இருக்க வேண்டுமென அவர் கோரிக்கை விடுத்துள்ளார். (சி)

## கிரிக்கெட் போட்டி

யாழ்ப்பாணம், ஜன.19

சென்.ஜோன்ஸ் கல்லூரிக்கும், மானிப்பாய் இந்துக்கல்லூரிக்கும் இடையிலான 19 வயதுப் பிரிவினருக்கான கிரிக்கெட் போட்டி இன்றும் நாளையும் சென்.ஜோன்ஸ் கல்லூரி மைதானத்தில் இடம்பெறும். (50-23)

## கால்கோள்விழா

- கோப்பாய், ஜன.19

கோப்பாய் நாவலர் தமிழ் வித்தியாலய தரம் 01 மாணவர்களை வரவேற்கும் கால் கோள்விழா நாளை புதன்கிழமை காலை 9 மணிக்கு பாடசாலை அதிபர் திருமதி சாந்தி வாகீசன் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்விற்குப் பிரதம விருந்தினராக கோப்பாய் ஆசிரிய பயிற்சிக் கலாசாலை விரிவுரையாளர் ச.லலீசன் கலந்துகொள்வார். (50-72)

# படையினரின் தபால் மூல வாக்களிப்பை திட்டமிட்டுக் குழப்புவதற்கு முயற்சியா?

## விண்ணப்பங்கள் உரிய நேரத்தில் கிடைக்கவில்லையாம்

கொழும்பு, ஜன. 19

பாதுகாப்புப் படையைச் சேர்ந்த பெரும்பாலானவர்கள் தபால் மூலம் வாக்களிப்பதற்காகச் சமர்ப்பித்த விண்ணப்பங்கள் தேர்தல் ஆணையகத்துக்கு அனுப்பப்படாமை காரணமாக வாக்களிப்பதற்கான அவர்களின் உரிமை பறிபோயுள்ளது எனச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

மேலும் இதற்குக் காரணமானவர்கள் தேர்தல் தினத்தன்றும் வாக்களிப்பைக் குழப்ப முயலக்கூடும் எனவும் அச்சம் வெளியிடப்பட்டுள்ளது.

இது தொடர்பாக மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:-

பாதுகாப்புப் படையினரின் முகாம்கள் மற்றும் பொலிஸ் நிலையங்களிலிருந்து விண்ணப்பித்த பலரின் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டுள்ளன எனத் தேர்தல் கண்காணிப்பாளர்கள் தெரிவிக்கின்றனர்.

விண்ணப்பங்கள் குறிப்பிட்ட கால எல்லைக்குள் கிடைக்காமையினாலேயே அவை நிராகரிக்கப்பட்டன எனத் தேர்தல் திணைக்களப் பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

எனினும் தேர்தல் நடவடிக்கைகளுக்கான பிரதிப் பொலிஸ் மா அதிபர் காமினி நவரட்ண இதனை நிராகரித்தார். தன்னால் இதற்குப் பொறுப்பேற்க முடியாது என அவர் குறிப்பிட்டார்.

உகன விமானப் படை முகாமிலிருந்து சமர்ப்பிக்கப்பட்ட 811 விண்ணப்பங்களில் 400 விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டுள்ளன. இதேபோன்று, பக்கியால, தெய்யத்த கண்டிய, அம்பாறை பொலிஸ் பிரிவு போன்றவற்றிலிருந்து அனுப்பப்பட்ட விண்ணப்பங்களும் நிராகரிக்கப்பட்டுள்ளன.

இதேவேளை, இதன் காரணமாகப் பாதிக்கப்பட்ட படையினரும், தேர்தல் கண்காணிப்பாளர்களும் இது குறித்துத் தேர்தல் ஆணையாளர் அலுவலகத்தின் கவனத்துக்குக் கொண்டுவந்துள்ளனர்.

தபால் மூலம் வாக்களிப்பதற்கான விண்ணப்பங்களை சமர்ப்பிக்க வேண்டிய திகதி டிசெம்பர் 18 உடன் முடிவடைந்தது.

எனினும், குறிப்பிட்ட சில நிறுவனங்களுக்குத் தாம் சமர்ப்பித்த விண்ணப்பங்கள் திருப்பி அனுப்பப்படவில்லை எனத் தேர்தல் ஆணையகம் குறிப்பிட்டுள்ளது.

தபால்மூல வாக்களிப்புத் தினத்தன்று வாக்களிக்க முடியாமல் போனவர்கள் ஜனவரி 26 ஆம் திகதி வாக்களிக்கலாம் என்றும் தேர்தல் ஆணையகம் குறிப்பிட்டுள்ளது.

எனினும், பாதுகாப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள படையினரால் அன்று வாக்களிக்க முடியாத நிலையே காணப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (சி)

# நாமல் - புலிப்பிரமுகர் எமில்காந்தன் இரகசியப் பேச்சை வெளிப்படுத்துக

## அநுரகுமார எம்.பி. கோரிக்கை

கொழும்பு, ஜன. 18

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் மகன் நாமல் ராஜபக்ஷ மற்றும் புலிகளின் முக்கியஸ்தர் எமில்காந்தன் ஆகியோருக்கிடையில் அண்மையில் லண்டனில் இடம்பெற்ற இரகசியப் பேச்சின் விவரங்களை நாட்டு மக்களுக்கு வெளியிடுமாறு ஜெனரல் சரத் பொன்சேகாவின் ஊடகப் பேச்சாளரும் ஜே.வி.பியின் நாடாளுமன்றக் குழுத் தலைவருமான அநுரகுமார திஸாநாயக்க நேற்று அரசிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

சரத் பொன்சேகாவின் கொழும்பில் உள்ள அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றிய அவர் இது தொடர்பாக மேலும் கூறியவை வருமாறு:-

'நீலப் படையணி' மற்றும் 'இளைஞர்களுக் கான நாளை' அமைப்புகளின் தலைவரும் ஜனாதிபதியின்மகனுமான நாமல் ராஜபக்ஷ புலிகளின் முக்கியஸ்தர் எமில்காந்தனுடன் சேர்ந்து லண்டனில் வைத்து எடுத்துக் கொண்ட புகைப்படம் ஒன்று எம்மிடம் சிக்கியது. அதை நாம் வெளிப்படுத்தினோம்.

நாமலுக்கும் எமிலுக்குமிடையில் லண்ட னில் வைத்து இரகசியப் பேச்சு இடம்பெற் றுள்ளமை தெளிவாகின்றது. இந்தப் பேச்சின் விவரங்களை அரசு இந்நாட்டு மக்களுக்கு வெளிப்படுத்த வேண் டும்.

தம்மைத் தேசப்பற்றாளர்கள் என்று கூறிக் கொள்ளும் மஹிந்த ராஜபக்ஷவின் குடும்பம் புலிகளுடன் சேர்ந்து தேசத் துரோக செயற் பாடுகளில் ஈடுபட்டு வருகின்றமை மெல்ல மெல்ல நாட்டுக்குத் தெரியவருகின்றது.

கே.பி. மற்றும் எமில்காந்தன் போன்ற புலிகளின் முக்கியஸ்தர்களைத் தம்வசம் வைத்துக்கொண்டு புலிகளின் சொத்துகளை மஹிந்த குடும்பம் அனுபவிக்கின்றது.

நாமலின் 'இளைஞர்களுக்கான நாளை' என்ற அமைப்பின் செயற்பாடுகளுக்குத் தின மும் லட்சக்கணக்கில் பணம் செலவிடப்படு கின்றது. நாமலுக்கு எங்கிருந்து இந்தப் பெருந்தொகைப்பணம் கிடைக்கின்றது?

எமது வேட்பாளர் சரத் பொன்சேகா வெற் றியை நோக்கிப் பயணித்துக்கொண்டிருப்ப தால் அரசு பயந்துபோயுள்ளது. பொன்சேகா வின் வெற்றியைத் தடுப்பதற் காகப் பொய்ப் பிரசாரங்களில் அரசு ஈடு பட்டு வருகின்றது.

சரத் பொன்சேகாவுக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு மிடையில் இரகசிய ஒப்பந் தம் ஒன்று செய்துகொள்ளப்பட்டுள்ளது என்று அரசு கூறிவருகின்றது.

இருதரப்பினருக்குமிடையில் அவ்வாறான ஒப்பந்தம் எதுவும் செய்துகொள்ளப்படவில்லை என்று நாம் உறுதியாகக் கூறுகின்றோம். தமிழ்த் தேசியக் கூட்டமைப் பும் ஒப்பந்தம் இல்லை என்றே கூறுகின்றது. அரசுக்கு இவ்வாறான பொய்ப்பிரசாரங் களைத் தவிர வேறு வழியில்லை-என்றார். (சி)

# துப்பாக்கி வெடித்து சிப்பாய் படுகாயம்

யாழ்ப்பாணம், ஜன.19

துப்பாக்கி தவறுதலாக வெடித்ததன் காரணமாகக் கடமையில் ஈடுபட்டிருந்த இராணுவச் சிப்பாய் படுகாயமடைந்த சம்பவம் நேற்றுக் காலை நெல்லியடியில் இடம்பெற்றது.

நெல்லியடி-யாழ்.வீதியில் 'இந்திரா கபே'க்கு அண்மையில் கடமையில் ஈடுபட்டிருந்த ஏச்.எம்.குமரா (வயது-18) என்ற சிப்பாயே இந்தச் சம்பவத்தில் படுகாயமடைந்தவராவார்.

அவர் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு அவசர சிகிச்சை வழங்கப்பட்டதன் பின்னர் இராணுவ அம்புலன்ஸ் வாகனம் மூலம் காங்கேசன்துறை இராணுவ வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சை பெற்று வருகிறார். (50-70)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வறுமைக்கோட்டின் கீழ் வாழும் மக்களுக்கு இலங்கை வங்கி கடனுதவி

தென்மராட்சி பிரதேசத்தில் வாழும் வறுமைக்கோட்டின் கீழ் உள்ள குடும்பங்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கு சாவகச்சேரி இலங்கை வங்கிக் கிளையினர் கடன்களை வழங்கி வருகின்றனர்.

வறுமைக்கோட்டின் கீழ் உள்ள குடும்பங்களைக் கொண்ட குழுக்கள் மூலம் இக்கடன்கள் வழங்கப்படுகின்றது.

இலங்கை மத்திய வங்கியின் அலுவலர் ஸ்ரீ பத்மநாதன், இலங்கை வங்கியின் அபிவிருத்தி வங்கிப்பிரிவு அலுவலர் திரேசா ஆகியோர் கைதடி, நாவற்குழி, கச்சாய், சாவகச்சேரி, வரணி, மிருசுவில் ஆகிய பகுதிகளில் அங்குரார்ப்பணம் செய்யப்பட்ட குழுக்களின் பிரதி நிதிகளுடனான கருத்தரங்குகளை அண்மையில் கைதடி, சாவகச்சேரி, ஆகிய இடங்களில் நடத்தினர். அங்குரார்ப்பணம் செய்யப்பட்ட குழுக்களின் பெயரில் வங்கிக் கணக்குகள் திறக்கப்பட்டு அந்தக் கணக்குகள் ஊடாக கடன்கள் வழங் கப்படுவதாக இலங்கை வங்கி சாவகச்சேரி கிளை முகாமையாளர் ச.சந்திரகுமார் தெரிவித்தார்.

(50-207)

உ
சிவமயம்

## திருவிசைப்பா திருப்பல்லாண்டு திருமுறை நூல் வெளியீட்டுவிழா



பன்னாலை, தெல்லிப்பழை

**கந்தையா திருநாவுக்கரசு JP**
(இளைப்பாறிய அதிபர்)
**சிவபாக்கியம்** தம்பதிகளின் இல்லறப் பொன் விழா குறித்து நடைபெறும் சிறப்பு வைபவம்

**காலம்:** நாளை (20.01.2010) புதன்கிழமை பி.ப 3 மணி
**இடம்:** தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தான "அன்னபூரணி மண்டபம்"

**தலைவர்:** செஞ்சொற்செல்வர் திரு.ஆறு.திருமுருகன் அவர்கள் (தலைவர், ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம், தெல்லிப்பழை)

### நிகழ்ச்சிகள்

- திருமுறை வழிபாடு
- வரவேற்புரை : திரு.சு.ஏழூர்நாயகம் அவர்கள் (உபபொருளாளர், ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்)
- ஆசியுரைகள் : மகாராஜ ஸ்ரீ சு.து.ஷண்முகநாதக் குருக்கள் (ஆதீன கர்த்தா, மாவை ஆதீனம்)
  இராஜராச ஸ்ரீ கு.நகுலேஸ்வரக் குருக்கள் (ஆதீனகர்த்தா, நகுலேஸ்வரர் ஆலயம், கீரிமலை)
  சிவஸ்ரீ வா.அகிலேஸ்வரக் குருக்கள் (பிரதமகுரு, ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்)
- வாழ்த்துரை : திருமதி சிவமலர் அனந்தசயனன் அவர்கள் (அதிபர், மகாஜனக் கல்லூரி, தெல்லிப்பழை)
- தலைமையுரை :
- வெளியீட்டுரை : பேராசிரியர் சி.சிவலிங்கராஜா அவர்கள் (தலைவர், தமிழ்த்துறை, யாழ்.பல்கலைக்கழகம்)
- முதற்பிரதி பெறுபவர் : திரு.ச.ஆறுமுகநாதன் அவர்கள் (தொழிலதிபர்)
- திருவிசைப்பா திருப்பல்லாண்டு இசை அரங்கு: "துர்க்காபுரம் மகளிர் இல்ல மாணவிகள்"
- நன்றியுரை : திரு. செந்தில்குமரன் அவர்கள் (குடும்ப உறுப்பினர்)

அனைவரையும் சிறப்பு வைபவத்தில் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

சுபம்

திரு.திருமதி க.திருநாவுக்கரசு குடும்பம், பன்னாலை, தெல்லிப்பழை.  (94054)  துர்க்காதேவி தேவஸ்தானம், தெல்லிப்பழை

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



இத்தாவில், பளையை சொந்த இடமாகவும் பச்சிலைப்பள்ளி ப.நோ.கூ. சங்க முன்னாள் இயக்குனர் சபை உறுப்பினரும், இத்தாவில் சரஸ்வதி சனசமூக நிலையம், கிராம அபிவிருத்திச் சங்கம் என்பவற்றின் செயலாளரும், யா/ மட்டுவில் சந்திரமௌலீச வித்தியாலய உப அதிபரும் ஆகிய

**திரு.கணபதிப்பிள்ளை - சண்முகதாஸ்,** அவர்கள்
(SLPS-2-II, SLTS 2-I
B.A.,PGDE, SPC. MATHS TRAIND

இலங்கை அதிபர் சேவை வகுப்பு 2- தரம் II க்கு நியமனம் கிடைத்தமையையிட்டு அவரைப்பாராட்டி வாழ்த்துவதோடு மேலும் பல பதவியுயர்வுகளைப் பெற்று பிறந்த மண்ணுக்கு பெருமை சேர்க்க வேண்டும் எனவும் அவரும் அவர் தம் குடும்பமும் சீரும் சிறப்புடனும் பல்லாண்டு காலம்வாழ எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

இத்தாவில், பளை  (93993)  தலைவரும்,இத்தாவில் மக்களும் சரஸ்வதி சனசமூக நிலையம்.

## மரண அறிவித்தல்

### *பொன்னுத்துரை சிவசுப்பிரமணியம்*



காரைநகர் பலகாட்டைப் பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணம்,கந்தர்மடம்,அரசடிறோட்டை வதிவிடமாகவும் கொண்ட பொன்னுத்துரை சிவசுப்பிர மணியம் நேற்று (18.01.2010) திங்கட்கிழமை காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னுத்துரை-வியாகம்மா தம்பதியரின் அன்பு மகனும், வேலுப்பிள்ளை காலஞ்சென்ற சின்னம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், தவமலரின் அன்புக் கண வரும், பகீரதன், அஞ்சலா ஆகியோரின் அருமைத் தந்தையும், சிவஞானம், காலஞ்சென்றவர்களான சிவபுண்ணியம், சரஸ்வதிதேவி மற்றும் சரோஜினிதேவி, சிவபாதம், சத்தியதேவி, சகுந்தலாதேவி, சாரதாதேவி, சாவித்திரிதேவி ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.01.2010) செவ்வாய்க்கிழமை மு.ப 10 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கோம்பையன் மணல் இந்து மயானத்திற்கு தகனக்கிரியைக்காக எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

290, கந்தர்மடம், அரசடி றோட், யாழ்ப்பாணம்.  (94057)  தகவல்: மனைவி, பிள்ளைகள்.

## பாலன் மில்

தேங்காய் எண்ணெய், நல்லெண்ணெய் ஆலை. கொப்பறா, எள், இலுப்பைப் பருப்பு (விதை கோது உடைத்து) சூரியகாந்தி விதை போன்றவற்றை 3 கிலோ முதல் 3000 கிலோ வரை தனித்தனி இயந்திரத்தில் அரைத்து எண்ணெய்யாக உடன் ஊற்றித்தரப்படும். நாடவேண்டிய ஒரே இடம்.

பாலன் மில்
T.P-0213212624  மாவடிச்சந்தி, வட்டுக்கோட்டை.

## வீடு வளவு விற்பனைக்கு

சுண்டிக்குளி, விதானையார் வீதியில் 1 ½ பரப்புக் காணியுடன் கூடிய வீடும், யாழ்ப்பாணம், 3 ஆம் குறுக்குத் தெருவில் 2¼ பரப்புக்காணியுடன் கூடிய வீடும் விற்பனைக்குண்டு.

தொடர்பு: 0776146434  (93991)

## வேலைக்கு ஆள்கள் தேவை

1) சாரதி: ( AD சாரதி அனுமதிப் பத்திரம் விரும்பத்தக்கது)
2) சரணப்படுத்தல் உதவியாளர்கள்
3) பொதி செய்பவோர் (5 பேர்)

உடன் நேரில் இன்று வரவும்

தேனு களஞ்சியம்
இல.29, நவீன சந்தை உட்புறம்
திருநெல்வேலி
021 222 6013
காலை 9 - மாலை 4 மணி வரை

(94082)

## தென்மராட்சியில் ஓய்வூதியம் பெறுவோர் சங்கக்கூட்டம்.

யாழ்ப்பாணம் ஜன,19

தென்மராட்சி இளைப்பாற்று வேதனம் பெறுவோர் நலன்புரிச்சங்கத்தின் 19ஆவது ஆண்டுப் பொதுக்கூட்டம் நாளை மறுதினம் வியாழக்கிழமை காலை 9.30 மணிக்கு சங்கத்தானையில் உள்ள சங்க அலுவலகத்தில் நடை பெறும்.

சங்கத்தலைவர் செ.சுப்பிரமணியம் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்விற்கு முதன்மை விருந்தினராக வடக்கு, கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் முன்னாள் கல்விப்பணிப்பாளர் சி.கமலநாதனும் கௌரவ விருந்தினராக யாழ் மாவட்ட ஓய்வூதியர் சங்க சமாசத் தலைவர் சீ.வீ.கே.சிவஞானமும் கலந்து கொள்வார்.

இந் நிகழ்வில் அனுபவதீபம் என்னும் காலாண்டுச் சஞ்சிகை வெளியீடும் நிகழ்வும் இடம் பெறும். (50-207)

## வடமராட்சி கிழக்கு பனை,தென்னைசங்கம் மீண்டும் ஆரம்பம்

யாழ்ப்பாணம்.ஜன.19

வடமாட்சி கிழக்கு பனை, தென்னை அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கம் மீண்டும் ஆரம்பிக்கப்படவுள்ளது.

எதிர்வரும் 22ஆம் திகதி குடத்தனையில் சங்க அலுவலகம் ஆரம்பிக்கப்படவுள் ளதாக சங்க பொதுமுகாமையாளர் கா.மணியம் தெரிவித்தார்.

வடமராட்சி கிழக்கு மருதங்கேணியில் இயங்கிய சங்க அலுவலகம் கடந்த 2006 இல் சேருவில் பகுதியில் இயங்கி இடம் பெயர்ந்து வன்னிப் பகுதியில் இயங்கியதாகவும், சங்க நிர்வாகத்தினர், அங்கத்தவர்கள் யாழ். மாவட்டத்தில் மீளக்குடியேறியுள்ளதால் மீண்டும் இயங்க ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார். (50-207)

## விளையாட்டுப்போட்டிக்கு விண்ணப்பிக்கலாம்

யாழ்ப்பாணம், ஜன.19

தென்மராட்சி பிரதேச விளையாட்டுக் கழகங்களுக்கிடையிலான விளையாட்டுப் போட்டிகள் தொடர்பான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்படிவத்தினை பிரதேச செயலக விளையாட்டு உத்தியோகத்தாரிடம் நாளை புதன் கிழமை தொடக்கம் பெற்றுக்கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

பிரதேசத்தில் புதிதாக ஆரம்பிக்கப்பட்ட விளையாட்டுக் கழகங்கள் போட்டிகளில் கலந்து கொள்வதற்கு விளையாட்டு உத்தியோகத்தருடன் தொடர்பு கொண்டு பதிவு செய்யுமாறும் அறிவிக்கப்பட்டுள்ளது. (50-207)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 27 - 09 - 1955  உதிர்வு 19 - 01 - 2009



### அமரர் இதயகுமார் கலாசோதி

(முன்னாள் ஆசிரியை - கைதடி நுணாவில் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை, கொழும்பு மகவத்தை வித்தியாலய)

அல்லும் பகலுமாய் பள்ளியில் உழைத்து;
கண்ணெனப்போற்றி பாடம் புகட்டி;
கல்விப்பயிரை காலத்தே ஊட்டி
பண்புக்கினிய பாசம்; பார்த்தவர் மகிழும் புன்னகை;
குலவிளக்காய் ஒளிர்ந்து திறன்பல சேர்த்திட்டு
நொடியில் பறந்து வெறுங்கூடாய் ஆனதேன்?

வரைவிலா துயரில் வாடும் கணவன், பிள்ளைகள், மருமகன்

## 37ஆம் நாள் நினைவலைகள்



அமரர்
**கந்தையா- கிருஷ்ணசாமி**
(ஓய்வு பெற்ற ஆசிரியர்)

மண்ணில் 06.01.1930  விண்ணில் 12.12.2009

வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து
அன்புடனே அறிவுரைகள் பல சொல்லி
அவனியிலே உயர்ந்து வாழ வழிகாட்டிய
என்னன்பு அப்பாவே!
உங்கள் உடல் அழிந்தாலும்
உயிராய் நிலைத்திருப்பீர் எம்
நெஞ்சமெல்லாம்
பிரார்த்திக்கின்றோம் - இறைவனை
உங்கள் ஆத்ம சாந்திக்கு

5ம் வட்டாரம்,நயினாதீவு.  உங்கள் நினைவுடன் மகன், மருமகன்,பேர்த்தி.

(94051)

## மரண அறிவித்தல்கள்

### *கந்தன் சிவகுமார் (நேரியாஸ்)*

(தேவஊழியன் எக்காளத்தொனி பூரண சுவிஷேச சபை புன்னாலைக் கட்டுவன்)



யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் கட்டுடையை வசிப்பிடமாகவும் கொண்ட திரு.கந்தன் சிவகுமார் (நேரியாஸ்)நேற்று (18.01.2010) திங்கட்கிழமை கர்த்தருக்குள் நித்திரையடைந்துவிட்டார்.

"நல்ல போராட்டத்தைப் போராடினேன் ஓட்டத்தை முடித்தேன் விசுவாசத்தைக் காத்துக்கொண்டேன்" (11 திமோ 4:7) அன்னார் காலஞ்சென்ற கந்தன் சீதபிள்ளை தம்பதியரின் பாசமுள்ள மகனும், அடைக்கலம் சின்னம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் செல்வராணியின் (ரூத்) அன்புக்கணவரும், எப்றஜிம் (மெமோறியல் கல்லூரி, மானிப்பாய்), மேசியா(மெமோறியல் கல்லூரி, மானிப்பாய்), மோசே (சைவப் பிரகாச வித்தியாசாலை, கட்டுடை), ஆகியோரின் அன்புத் தந்தையும், கமலாவதி, குணரட்ணம்( அரசினர் வைத்தியசாலை ஊர்காவற்றுறை), பாஸ்கரன் ஆகியோரின் அன்புச் சகோதரனும், நாகராசா, இராசமணி, தேவபாலன், யேசுபாலன், யேசுராசா, பாக்கியம், புஸ்பராணி, லதா, ஆகியோரின் மைத்துனரும் ஆவார். அன்னாரின் நல்லடக்க ஆராதனை (19.01.2010) இன்று அன்னாரின் இல்லத்தில் பி.ப 1.30 மணியளவில் நடைபெற்று பூதவுடல் மானிப்பாய் பிப்பிலி சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் விசுவாசிகள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கெள்கிறோம்.

அரசடி வீதி, கட்டுடை,மானிப்பாய்.  (94053)  தகவல்: சுந்தரம் (முத்தர்)

### Dr. *சபாபதிப்பிள்ளை கோபாலகிருஷ்ணன்*
(Retired RMP)



நுணாவில் மேற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சபாபதிப்பிள்ளை கோபாலகிருஷ்ணன் நேற்று (18.01.2010) திங்கட்கிழமை அதிகாலை காலமானார்.

அன்னார் சபாபதிப்பிள்ளை -நாகம்மா தம்பதிகளின் அன்பு மகனும், சிவகுரு-அன்னமுத்து தம்பதிகளின் மருமகனும், அமரர் நகுலேஸ்வரி யின் (இலங்கை காப்புறுதி கூட்டுத்தாபனம்) அன்புக் கணவரும், சுதர்சனின் (கனடா) அன்புத்தந்தையும், ஜோயின் மாமனும், அமரர்களான நடராஜா, அன்னலட்சுமி, புவனேஸ்வரி, கோமளேஸ்வரி மற்றும் கரவெட்டியில் வசிக்கும் சறோஜினிதேவி ஆகியோரின் அன்புச் சகோதரனும், அமரர் தயானந்தன் மற்றும் கிருஷ்ணவேணியின் அன்பு மைத்துனரும், லக்ஷ்மன், ரமணன், கோகிலன் ஆகியோரின் பெரிய தகப்பனும், சுஜித்தாவின் மாமனும் கபிஷாவின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.01.2010) செவ்வாய்க் கிழமை மு.ப11மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக குச்சப் பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

" பிருந்தாவனம்", நுணாவில் சந்தி,சாவகச்சேரி.  தகவல், சிவராசா லக்ஷ்மன்.

(94065)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




16.03.1987

* 1985 ஆம் ஆண்டில் விமானப்படையினர் ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த வேளை நாவாந் துறைக் கடலில் வீழ்ந்த ஹெலிகொப்டர் இளைஞர் கள் குழுவொன்றினால் மீட்டெடுப்பு.
* யாழ் குடாநாட்டின் மீதான எரிபொருள் தடையைத் தளர்த்தி விநியோகத்தை மேற்கொள்வது தொடர் பாக விளக்கம் பெற்றுக்கொள்ள யாழ்.செயலக உயரதி காரியொருவரை அரசு கொழும்புக்கு அழைப்பு.
* தமிழர் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணப்ப டுவதற்கு, முதலில் வடக்கு கிழக்கு மாகாணங்களில் சட்டம், ஒழுங்கு நிலை நாட்டப்படவேண்டும் என ஜனாதிபதி ஜே.ஆர். தெரிவிப்பு.

17.03.1987

* இந்தியாவின் எச்சரிக்கைச் செய்தியே, சிறப்புத் தூதர் தினேஷ்சிங் மூலம் இலங்கைக்கு வழங்கப்பட்டது என கொழும்பு இராஜதந்திர வட்டாரங்கள் தெரிவிப்பு.
* யாழ்ப்பாணம் மீது இறுதித் தாக்குதல் ஒன்றைத் தொடுக்க இலங்கை அரசு ஆயுதப்படையினரை மீண்டும் தயார் செய்து வருவதாக 'இந்து' நாளிதழ் ஆரூடம்.

18.03.1987

* வடக்கு கிழக்கு இணைப்புத் திட்டம் முஸ்லிம்களைச் சிறுபான்மையோராக்கும் என்பதால் அதனை முஸ்லிம்கள் ஆதரிக்கக் கூடாது என போக்குவரத்து அமைச்சர் எம்.எச். முகம்மது தெரிவிப்பு.
* யாழ் .அபிவிருத்திச் சபைக்காக ஒதுக்கப்பட்ட நிதி வழங்கப்படாமையால், எரிபொருளை அடுத்து குடாநாட்டின் மீது அரசு நிதித்தடையை விதித்துள் ளதா? எனச் சந்தேகம் தெரிவிப்பு.

19.03.1987

* இந்தியா தீவிரவாதிகளுக்கு ஆயுதம் வழங்கி ஊக்கமளிப்பதன் மூலம் இலங்கை விடயத்தில் தலையிடுகிறது என சுதந்திரக் கட்சித் தலைவி சிறிமாவோ விமர்சிப்பு.
* பொருளாதாரத் தடை காரணமாகப் பாதிக்கப் பட்டுள்ள இலங்கை வடபகுதி மக்களுக்கு இந்தியா நேரடியாக நிவாரண உதவி வழங்கும் திட்டத்தில் எதுவித மாற்றமும் இல்லை என இந்திய வெளியுறவு இணை அமைச்சர் தெரிவிப்பு.
* இலங்கை இனப்பிரச்சினைத் தீர்வு தொடர்பான இறுதிக் கட்டப் பேச்சுகளைப் புதுடில்லியில் நடத் தவும், இது குறித்த ஆலோசனைகளில் ஜி.பார்த்த சாரதிக்கு இந்திய அரசு முக்கியத்துவம் வழங்கிச் செயற்படுவதாகவும் இந்திய அரசியல் வட்டாரங்கள் தகவல்.
* இலங்கை அரசை வழிக்குக் கொண்டு வரும் ஒரு ராஜதந்திர நடவடிக்கையாக சுமார் ஒரு லட்சம் இந்தியப் படையினரை இந்திய அரசு தென் பிராந் தியத்தில் உஷார் நிலையில் வைத்துள்ளது.
* குடாநாடு மீதான எரிபொருள் தடை மற்றும் இராணுவ நடவடிக்கை என்பவற்றை இலங்கை அரசு நீக்கினால் மட்டுமே பேச்சுக்களை ஆரம்பிக்க இயலும் என இந்தியா, இலங்கைக்கு அறிவிப்பு.
* பேச்சுக்களை நடத்த முன்வருமாறு தமிழீழ விடுதலைப்புலிகளை அவர்களது வெளிநாட்டு, உள்நாட்டு நண்பர்கள் தூண்ட வேண்டுமென தேசிய பாதுகாப்பு அமைச்சர் வேண்டுகோள்.

21.03.1987

* காலம் பிந்திய இந்த நேரத்தில் கூட எம்மை அங்கீகரிக்கும்படிதான் இந்திய அரசைக் கோருகின் றோம் என பாக்கு நீரிணை ஊடாக இந்தியாவுக்குச் செல்லும் ஈரோஸ் பிரமுகர் பாலகுமார் 'சற்றர் டே ரிவியூ' வார இதழுக்குப் பேட்டி.
* பாக்கு நீரிணையின் இந்தியக் கரையோரக் காவல் கப்பல்களும், கடற்படைப் பிரிவுகளும் உஷார் நிலையில் வைப்பு.
* அரசியல் தீர்வொன்றைக் காணுமாறு இலங்கை அரசை இந்திய மத்திய அரசு நிர்ப்பந்திக்க வேண்டு மென தமிழ் நாடு நிதியமைச்சர் தமிழ்நாடு சட்ட சபையில் தெரிவிப்பு.

22.03.1987

* யாழ். குடாநாட்டின் மீதான அரசின் எரிபொருள் தடையை ஆட்சேபித்து யாழ். நகரில் ஆர்ப்பாட்ட ஊர்வலம்.
* இலங்கைத் தமிழருக்கு ஆதரவாக, இந்தியா இலங்கை மீது படை எடுக்கக்கூடுமென இலங்கை அரசு அஞ்சுவதாக 'வெரித்தாஸ்' வானொலி தெரி விப்பு.
* தமிழீழ விடுதலைப்புலிகளது அரசியல் கருத்துக்கள் எவை எனத் தெளிவாகத் தெரியவில்லை எனவும், அவர்களுடன் தொடர்பு கொள்ள இயலாதுள் ளதாகவும் அமெரிக்க ராஜாங்க உதவி அமைச்சர், அமெரிக்க காங்கிரஸின் ஆசிய, பசுபிக் விவகாரத் துணைக் குழுவிடம் தெரிவிப்பு.

23.03.1987

* யாழ் .பண்ணை பொலிஸ் விடுதிமீது விடுதலைப் புலிகள் மேற்கொண்ட தாக்குதலில் இராணுவத்தி னர் பலர் உயிரிழப்பு; பல இராணுவத்தினர் புலிகளால் சிறைப்பிடிப்பு.
* எமது தற்காப்பு யுத்தம் தற்போது தாக்குதல் யுத்தமாக மாறியுள்ளதாக விடுதலைப்புலிகளின் யாழ். மாவட்டத் தளபதி கிட்டு தெரிவிப்பு.
* யாழ்.கோட்டை முகாமிலிருந்து மேற்கொள்ளப் பட்ட ஷெல் தாக்குதல்கள் மற்றும் ஹெலி, பொம்பர் தாக்குதல்களால் பொது மக்கள் இருவர் உயிரிழப்பு; ஐம்பதுக்கும் அதிகமானோர் படுகாயம்.

24.03.1987

* யாழ். பண்ணை பொலிஸ் நிலையம் மீதான தமது தாக்குதலின்போது தம்மால் சிறைபிடிக்கப்பட்ட எட்டு யுத்தக்கைதிகளை விடுவிக்க வேண்டுமானால், அரசு தடுப்புக்காவலில் வைத்துள்ள புலிகள் இயக்கப் போராளிகள், ஆதரவாளர்கள், உதவியாளர் களான 25 பேரை விடுவிக்க வேண்டுமென விடுதலைப்புலிகள் நிபந்தனை விதிப்பு.
* சேருவில தேர்தல் தொகுதியிலுள்ள சேருநுவர கிராமத்தில் இனந்தெரியாதோர் மேற்கொண்ட தாக்குதலில் 26 சிங்களவர்கள் கொலை. இவர்க ளில் பெரும்பாலோர் ஊர்காவல் படையினராவர்.
* அரசைக் கவிழ்க்கச் சதிசெய்ததாக சிங்களவர், தமிழர், முஸ்லீம்கள் உட்பட்ட 23 பேர் மீது தொடரப் பட்ட வழக்கின் விசாரணையின் போது எட்டு எதிரிகள் குற்றப் பத்திரிகையை ஏற்க மறுப்பு.

25.03.1987

* இனப்பிரச்சினை தொடர்பான 1986 டிசெம்பர் 19 ஆம் திகதிய யோசனைகளை அடிப்படையாக வைத்துப் பேச்சுவார்த்தையை மீண்டும் ஆரம்பிக்க இலங்கை அரசு சம்மதித்து இருப்பதாக இந்தியப் பிரதமர் ராஜீவ்காந்தி தெரிவிப்பு.
* ஈழப் போராட்டத்தை இந்திய அரசு அங்கீகரிக்க வேண்டுமென வலியுறுத்தி ஈழவர் முன்னணியால் ஏற்பாடு செய்யப்பட்ட ஆர்ப்பாட்டப் பேரணி யாழ்.நகரில் இடம்பெற்றது.
* இந்தியா விண்ணில் ஏவிய ஏ.எஸ்.எல்.வி. செய்ம தியும், றொக்கெட்டும் கடலில் வீழ்ந்து அமிழ்ந்தன.

26.03.1987

* பண்ணை பொலிஸ் நிலையத் தாக்குதலின்போது சிறைப்பிடிக்கப்பட்ட எட்டு இராணுவ வீரர்கள் விடுதலைப்புலிகளால் பொது மக்களின் பார்வைக்கு உட்படுத்தப்பட்டனர்.
* மட்டக்களப்பு, பழுகாமத்தில் விடுதலைப்புலிகளின் கண்ணிவெடித் தாக்குதலில் சிக்கி 15 அரச படை யினர் பலி.
* இன்னமும் நான்கோ, ஐந்தோ மாதங்களில் சுதந்திரக்கட்சி ஆட்சியைக் கைப்பற்றும் என சுதந்திரக்கட்சித் தலைவி சிறிமாவோ தெரிவிப்பு.

27.03.1987

* பலாலியில் விடுதலைப்புலிகளுக்கும் அரச படையினருக்கும் இடையில் கடும் மோதல்: 10 படையினர் பலி; 5 பொது மக்கள் உயிரிழப்பு.
* தமிழ்ப்போராளிகளுக்கு எதிரான சகல இராணுவ நடவடிக்கைகளையும் நிறுத்துமாறு கோரும் இந்திய அரசின் முடிவை இந்தியத் தூதுவர் ஜனாதி பதி ஜே.ஆரிடம் தெரிவிப்பு.
* பண்ணை பொலிஸ் நிலையம் மீதான விடுதலைப் புலிகளின் தாக்குதலையடுத்து வடக்கு கிழக்குப் பகுதிகளிலுள்ள படை முகாம்களை அரசு உஷார் நிலையில் வைத்துள்ளது.

28.03.1987

* காங்கேசன்துறை, ஊறணியில் விடுதலைப் புலிகளின் கண்ணிவெடித் தாக்குதலில் சிக்கி 12 படையினர் மரணம்.
* தமிழக முதல்வர் எம்.ஜீ.ஆர், தமிழீழ விடுதலைப்புலி களின் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் உட்பட பல தமிழர் அமைப்புப் பிரதிநிதிகளை அழைத்துப் பேச்சு.
* தமிழ்ப்போராளிகளுக்கு எதிரான இராணுவ நடவடிக்கைகளுக்காக இலங்கை அரசு, பாகிஸ்தா னிடமிருந்து இரண்டரைக் கோடி ரூபாய் பெறுமதி யுடைய ஆயுதங்கள் கொள்வனவு.

29.03.1987

* அரசபடையினர் யாழ். நகர் மீது வான்,கடல், தரை மார்க்கங்களில் நடத்திய மும்முனைத் தாக்குதல் களில் எட்டுப்பொதுமக்கள் உயிரிழப்பு; பலர் படுகாயம்.
* பலாலி இராணுவ முகாமிலிருந்து மேற்கொள்ளப் பட்ட ஷெல் தாக்குதல்களால் மாவிட்டபுரம் கந்த சுவாமி ஆலயம் கடும் தேசம்.
* இன்னும் இரண்டு மாதங்களுக்குள் ஜனாதிபதி ஜே.ஆர் புதுடில்லிக்குச் சென்று இந்தியப் பிரதம ருடன் இனப்பிரச்சினைத் தீர்வுக்கான ஒப்பந்த மொன்றினை மேற்கொள்வார் என கொழும்பு அரசியல் வட்டாரங்கள் தெரிவிப்பு.

30.03.1987

* யாழ் .கோட்டை இராணுவ முகாமிலிருந்து யாழ். ஆஸ்பத்திரி மீது மேற்கொள்ளப்பட்ட ஷெல் தாக்கு தல்களால் நோயாளர்கள் எட்டுப்பேரும், ஊழியர் ஒருவரும் உயிரிழப்பு.
* "இனி என்ன அச்சானியார், செத்த அப்பாவி நோயாளிகளை பயங்கரவாதிகள் பட்டியலில் சேர்த்திடுவார் என்று சொல்லுங்கோ" - இது முச்சந்தி முரளியின் விமர்சனம்.
* "வடக்கு கிழக்குக்கு வருமாறு என்னை எவராவது அழைத்தால் நான் அப்பகுதிகளுக்கு விஜயம் செய்வேன்" என ஜனாதிபதி ஜே.ஆர். தெரிவிப்பு.

31.03.1987

* யாழ் .ஆஸ்பத்திரி மீது படையினர் மேற்கொண்ட தாக்குதல்கள் கோட்டை முகாமிலிருந்து திட்ட மிட்டே நடத்தப்பட்டதாக யாழ்.போதனா வைத்தி யசாலைப் பணிப்பாளர் தெரிவிப்பு.
* வெலிக்கடைச் சிறைச்சாலையில் நீண்ட காலமாகத் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் தமிழ்க் கைதிகள் தம்மீது விசாரணை நடத்துமாறு அல்லது விடு தலை செய்யுமாறு வற்புறுத்தி உண்ணாவிரதப் போராட்டம் ஆரம்பிப்பு.
* யாழ்.ஆஸ்பத்திரி மீதான படையினரின் ஷெல் தாக்குதலில் உயிரிழந்தோரின் மரண விசார ணையை நடத்திய யாழ்.நீதிவான் அவை கொலை எனத் தீர்ப்பளித்து [illegible] படுவது தடுக்கப்படவேண்டும் எனவும் கருத்துத் தெரிவிப்பு.

# உயர்தரப் பரீட்சையில் உயர் பெறுபேறுகளைப் பெற்று கல்வித்துறையில் புகழ் சேர்த்த மாணவர்கள்

2009ஆம் ஆண்டு நடைபெற்ற ஜி.சீ.ஈ உயர்தரப்பரீட்சைப் பெறு பேறுகள் அண்மையில் வெளியாகின. இதில் சிறந்த பெறுபேறுகளைப் பெற்று கல்வித்துறையில் சாதனைபுரிந்த மாணவர்களின் அனுபவங் களையும் அவர்களது கருத்துக்களையும் உதயன் தொடர்ச்சியாக வெளிப் படுத்தி வருகின்றான். அதில் ஒரு பகுதி இங்கு பிரசுரமாகின்றது.



## கண்மணி குபேந்திரன்

**உடுப்பிட்டி அ.மி.கல்லூரி**

**வர்த்தகப்பிரிவு - 2ஏபி மாவட்ட நிலை:28**

நான் இப்பெறுபேற்றைப் பெற்றதையிட்டு எனது பெற்றோர் மிகவும் மகிழ்ச்சியடைந்தனர். அதுவே எனது சந்தோசமாகும். எனது கற்றலுக்கு எனது பெற்றோர், சகோதரர்கள் சிறந்த ஊக்குவிப்பு வழங்கினார்கள்.

நான் படிக்கும் காலங்களில் குருபக்தி, இறைபக்தி, முயற்சி ஆகிய மூன்று முக்கிய விடயங்களைச் சிறப்பாகக் கடைப்பிடித்தேன். இவை எனது கற்றலுக்குப் பெரிதும் உதவியாக இருந்தன.

தற்போது கல்விகற்கும் மாணவர்களுக்கு நான் கூறவிரும்புவது - படிக்கும் நேரங்களைத் தெரிவு செய்யும்போது உங்களுக்கு மிகவும் விருப்பமான நேரங்களைத் தெரிவுசெய்து அந்நேரங்களை வழமையாக்கிக் கொள்ளுங்கள். அந்நேரங்களைச் சிறப்பாகப் பயன்படுத்திப் படிக்கும்போது படிக்கும் விடயங்கள் மனதில் நன்றாகப் பதிகின்றன.

மேலும் எனது கற்றலுக்கு உறுதுணையாக இருந்த பெற்றோர், சகோதரர்கள், , நண்பர்கள், பாடசாலை ஆசிரியர்கள், தனியார் கல்வி நிலையஆசிரியர்கள் அனை வருக்கும் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



## ரசானி பரமநாதன்

**உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி**

**கலைப்பிரிவு - 2ஏசி**

நான் எனது ஆரம்பக்கல்வியை வல்வெட்டி விநாயகர் வித்தியாலத்திலும், இடைநிலைக் கல்வியை வல்வெட்டி இந்துத் தமிழ்க்கலவன் பாடசாலையிலும், உயர்தரக்கல்வியை உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரியிலும் கற்றேன்.

உயர்தரத்தில் கலைப்பிரிவில் தமிழ், இந்துநாகரிகம், பொருளியல் ஆகிய பாடங்களைத் தெரிவு செய்து இப்பெறுபேற்றினைப் பெறுவ தற்கு உறுதுணையாக இருந்த அனைத்து உள்ளங்களுக்கும் எனது மனப்பூர்வமான நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

குறிப்பாக எனக்கு மிகுந்த அக்கறையுடன் கல்வியினைப் போதித்த அதிபர், ஆசிரியர்கள் மற்றும் எனது பெற்றோர், நண்பர்கள், உறவினர்களுக்கும் இந்நேரத் தில் எனது நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.



## தனுசியா சோமகுலசேகரம்

**மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை**

**கலைப்பிரிவு - 2ஏபி**

நான் ஆரம்பக்கல்வியை துன்னாலை காசிநாதர் வித்தியா லயத்திலும் தரம் 6 இலிருந்து மெதடிஸ்த பெண்கள் உயர் தரப் பாடசாலையிலும் கல்வியைத் தொடர்ந்தேன். உயர் தரத்தில் கலைப்பிரிவில் தமிழ், அளவையியல், நாடகமும் அரங்கியலும் ஆகிய 3 பாடங்களையும் தெரிவு செய்து சிறந்த பெறுபேறு பெற வேண்டும் என்ற நோக்குடன் விடாமுயற்சியுடன் கற்றேன். விடா முயற்சியும் இறைவனின் நல்லாசியுமே எனது வெற்றிக்குக் காரணம்.

**சந்திப்பு: மூர்த்தி, சுஜந்தா**

எனது பெறுபேற்றுக்குக் காரணமாக இருந்த பாடசாலையின் அதிபர், எனக்கு கற்பித்த ஆசிரியர்கள், தனியார் கல்வி நிலைய ஆசிரியர்கள் நன்றிக்குரியவர்கள் ஆவார்கள். நான் இரவு நேரங்களில் அதிகம் படிப்பதால் அம்மாவிற்கும், பல் கலைக்கழகம் செல்வேன் என்று என்மீது நம்பிக்கை வைத்து ஊக்குவித்த எனது தந்தை, சகோதரர்களுக்கும், நண்பிகளுக்கும் நன்றிகூறக் கடமைப்பட்டுள்ளேன். எதிர்காலத்தில் சிறந்ததொரு ஆசிரியராக சமூகத்திற்குப் பணியாற்ற விரும்பு கின்றேன். எந்தவொரு மாணவனும் தன்னம்பிக்கையுடனும், கடவுள் பக்தியுடனும் முயற்சி செய்தால் நிச்சயம் வெற்றி பெறமுடியும்.



## கல்யாணகுமாரி சர்வலோகநாதன்

**உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி**

**கலைப்பிரிவு - 3ஏ**

நான் தரம் ஒன்றிலிருந்து பதினொன்று வரை கம்பர்மலை வித்தியாலயத்தில் கற்றேன். உயர்தரக் கல்வியைக் கற்பதற் காக உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரியைத் தேர்வு செய்தேன். உயர்தரத்தில் கலைப்பிரிவினைத் தேர்வு செய்து மூன்று பாடங்களிலும் அதிவிசேட சித்தியினைப் பெற்ற மைக்காக பெரு மகிழ்வடைகின்றேன். இப்பெறுபேற்றினைப் பெறுவதற்கு அடித்தளமாக இருந்த இரு கல்லூரிச் சமூகத்தினருக்கும், உயர்தரத்தில் கற்பித்த ஆசிரியர்களுக்கும், தனியார்கல்வி நிலைய ஆசிரியர்களுக்கும், என் பெற்றோருக் கும், சகோதரர்களுக்கும் மற்றும் உறுதுணையாக அமைந்த உறவுகளுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன். என் கல்விப்பயணம் இனிதாக முன்னேற் றப்பாதையில் தொடரவேண்டும் என்று இறைவனை வணங்குகின்றேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ...ஸ்பத்திரிகளில் இலைக்கஞ்சி வழங்குவது நிறுத்தப்பட்டது

வடமராட்சி,ஜன.19

யாழ்.குடாநாட்டில் அரசினர் ஆயுள்வேத வைத்தியசாலைகளில் இலைக்கஞ்சி வழங்குவது நிறுத்தப்பட்டுள்ளது.

வடக்கு மாகாண சபையால் யாழ்.குடாநாட்டில் ஏற்படுத்தப்பட்ட கிராமிய ஆயுள்வேத வைத்தியசாலை, மத்திய மருந்தக வைத்தியசாலைகளில் சிகிச்சைபெறவரும் அனைத்து நோயாளர்களுக்கும் வாரத்தில் ஒருநாள் இலைக்கஞ்சி கடந்த வருடம் முழுவதும் வழங்கப்பட்டு வந்தது. இலைக்கஞ்சியைத் தொடர்ந்து வழங்குவதற்கு இவ்வருடத்திற்குரிய நிதியை மாகாண ஆயுள்வேத வைத்தியத் திணைக்களம் வழங்காமையினால் இலைக்கஞ்சி வழங்கப்படுவது நிறுத்தப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (50-236)




## தென்மராட்சியில் டெங்கு விழிப்புணர்வு நடவடிக்கை

சாவகச்சேரி,ஜன.19

தென்மராட்சியில் டெங்குநோய் தொடர்பாக மக்கள் மத்தியில் விழிப்புணர்வை ஊட்டும் நடவடிக்கைகளைச் சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை ஏனைய அரச திணைக்களங்களுடன் இணைந்து செயற்பட்டு வருகிறது.

ஒவ்வொரு சுகாதாரப் பரிசோதகர்கள் பிரிவிலும் டெங்கு ஒழிப்பு தொடர்பாக சுகாதாரப் பரிசோதகர்கள் மற்றும் சுகாதாரத் தொண்டர்கள் இணைந்து வீடுவீடாகச் சென்று டெங்கு ஒழிப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

வீடுகளில் குப்பைகள் மற்றும் நீர் தேங்கும் பொருள்கள், பற்றைகளை இல்லாது ஒழிக்க நடவடிக்கை எடுக்கும்படி அறிவுறுத்தி வருகின்றனர்.

வரணிப் பிரதேசத்தில் சுகாதாரப் பரிசோதகர்எஸ்.சுரேஸ் சாவகச்சேரிப் பிரதேச சபையின் அனுசரணையுடன் டெங்கு ஒழிப்புத் தொடர்பான பிரசாரத்தை ஒலி பெருக்கிமூலம் வீதிகளில் மேற்கொண்டனர். அத்துடன் டெங்கு ஒழிப்பு தொடர்பான பிரசுரங்களையும் விநியோகித்தனர். (50-131)


TELESONIC | SUNDA | FIVE STAR | RICH STAR | MID SUMMER

| | | |
|---|---|---|
| Table Fans | Mixer Grinder | DVD, TV |
| Stand Fan's | Gas Cookers | Blender's |
| Celling Fan's | Ceramic Ware | LED Torches |
| Wall Fan's | Enamelware | Iron's, |
| Exuast Fan's | Rice Cookers | Airports Toasters |
| Orbit Fan's | Oven's | Pressure Lantern |

(And MIMI Brand Vacuum Flasks 8 Models)

........many more items......

Reasonable & Affordable Price | For wholesale & Retail

IZZY ENTERPRISE (PVT) LTD

155/7 Prince Street
colombo - 11

Tel: 0777 814 116
0777 814 117

FORESIGHT



### வீடு/காணி விற்பனைக்கு

நீர்வேலி வடக்கு, பரலோக மாதா தேவாலயத்திற்கும் காளி கோயிலுக்கும் இடையில் பருத்தித்துறைவீதி மற்றும் புன்னாலைக்கட்டுவன் வீதிகளுக்கு மிக அருகாமையில் கிணறு, மலசலகூட வசதிகளுடனான 3 பரப்புக் காணியிலுள்ள வீடு விற்பனைக்கு உண்டு.

தொடர்பு: 0213211363, 0714625636



நீங்கள் பீனிசம், பீனிச வாய்வு இளநரை, தலையிடி, தலைப்பாரம், மூக்கினால் இரத்தம் வடிதல், காதடைப்பு, கண்மங்கல் என்பவற்றால் அவதிப்படுகிறீர்களா?

இதோ பாவியுங்கள்

கண்ணுக்குக் குளிர்ச்சியும் முகத்திற்கு அழகும் உண்டாக்கி கூந்தலை நீளமாகவும் கறுப்பாகவும் அழகாகவும் வளரச் செய்யும் சித்த ஆயுர்வேத முறைப்படி தயாரிக்கப்பட்ட

### சித்தாரா பொன்னாங்காணி தைலம்

பொன்னாங்காணித் தைலம் வாங்கும்போது வர்ணமூடியுடன் சித்தாரா டிஸ்பென்ஸரி வைத்திய முத்திரை குறியீடு உள்ளதா என பொதி செய்யப்பட்ட பெட்டியைத் திறந்து சரிபார்த்து வாங்குங்கள்

*Manufactured By:*
Sithara Products
*Puttalam, Road, Chilaw.*
*(Reg.No: 6382)AR/PR/No.228*

யாழ்.மாவட்ட ஏக விநியோகஸ்தர்
சிவா நறுமணப்பூங்கா
இல.288,ஆஸ்பத்திரிவீதி, யாழ்ப்பாணம்,
தொ.பே: 021 222 2567


### ஈராண்டு நினைவஞ்சலி



அமரர்
இராசப்பு அல்பிரட்
அருமைநாயகம்

மலர்வு
04★02★1944
உதிர்வு
19★01★2008

ஈராண்டு காலமாக அப்பா
என்று அழைக்காமல் எங்கள்
உதடுகள் பிறருடன் பேசமறுக்கின்றன
அப்பா வாழ்க்கையை
அன்பால் சொல்லித்தந்திரே
நீங்கள் இல்லாமல் எங்கள்
உள்ளங்கள் தவிக்கின்றன
அப்பா மீண்டும் வாரீர்
எங்கள் வாழ்க்கைப் பயணத்தில்
இணைய மறுபிறப்பாய்

'மேரி இல்லம்',
கரவெட்டி வடக்கு,
வதிரி.

என்றும் உன் நினைவில்
குடும்பத்தினர்,
மனைவி, பிள்ளைகள்.

(91028)

### 31 ஆம் நாள் நினைவஞ்சலி



அமரர்
கார்த்திகேசு
விநாயகமூர்த்தி


தோற்றம்
20★09★1920
மறைவு
20★12★2009

தமிழனுக்குரிய மிடுக்குடன் பாசத்தந்தையாய் தடம்பதித்தீர்!
தரணியுள்ளோர் தலைவிதியினை தேர்ந்தே சோதிடக் கலையால் நிர்ணயித்தீர்!
பண்பாய் பக்குவமாய் எம்மை வழி நடத்தினீர்!
பத்திரமான வாழ்வுதனை எமக்காய் அமைத்துத் தந்தீர்!
எமக்காய் வாழ்ந்தீர் எமக்காய் உழைத்தீர்!
எமனவன் பாசக்கயிற்றினால் நின்னைப் பிரிந்தான் - ஆயினும்
எம்மாயுள் உள்ளவரை நின்நினைவுடனே வாழ்ந்திடுவோம் எப்போதும்!

கடந்த 20.12.2009 அன்று சிவபதமடைந்த எமது குலவிளக்கு அமரர் கார்த்திகேசு விநாயகமூர்த்தி அவரது மரணச் சடங்கில் கலந்து கொண்டோருக்கும், அனுதாபச் செய்திகளை அனுப்பியோருக்கும், பல வழிகளிலும் உதவி புரிந்தோருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

கடந்த 20.12.2009 அன்று சிவபதம் அடைந்த எங்கள் குலவிளக்கின் வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் இன்று (19.01.2010) செவ்வாய்க்கிழமை எமது இல்லத்தில் நடைபெறவிருப்பதால் அத்தருணம் தாங்கள் அனைவரும் வருகைதந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

வட்டு மேற்கு,
வட்டுக்கோட்டை. (93918) குடும்பத்தினர்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடைசிப் போட்டியிலும் பாக். தோல்வி; தொடரை வழித்துத் துடைத்தது ஆஸி!



ஹோபார்ட், ஜன.19

ஹோபார்ட்டில் நடைபெற்ற ஆஸ்திரேலியா-பாகிஸ்தான் அணிகளுக்கிடையிலான 3ஆவது மற்றும் இறுதி டெஸ்ட் போட்டியின் 5ஆம் நாளான நேற்று பாகிஸ்தான் அணி, 231 ஓட்டங்களால் ஆஸ்திரேலியாவிடம் தோல்வியடைந்தது. இதன்மூலம் ஆஸ்திரேலியாவிடம் தொடர்ந்து 12ஆவது டெஸ்ட் போட்டியைத் தோற்றதோடு, 4ஆவது முறையாக தொடரை 0 - 3 என்ற கணக்கிலும் இழந்துள்ளது.

ஆஸ்திரேலியா- பாகிஸ்தான் அணிகளுக்கிடையில் மூன்று போட்டிகளைக் கொண்ட டெஸ்ட் தொடர் ஆஸ்திரேலியாவில் நடைபெற்றுவந்தது.

முதல் இரண்டு போட்டிகளையும் ஆஸ்திரேலியா வெல்ல, தொடரும் அவ்வணி வசம் சென்றது.

இந்நிலையில் மூன்றாவது மற்றும் கடைசி டெஸ்ட் நடைபெற்றது.

இந்த டெஸ்டில் ஆஸ்திரேலியா தனது முதல் இன்னிங்ஸிற்காக 519 ஓட்டங்களையும், பாகிஸ்தான் அணி 301 ஓட்டங்களைப் பெற்றன.

பின்னர் தனது இன்னிங்ஸை ஆடிய ஆஸி., 4 விக்கெட்டுகள் இழப்புக்கு 219 ஓட்டங்களைப் பெற்றவேளை ஆட்டத்தை இடைநிறுத்தியது.

தொடர்ந்து 437 ஓட்டங்கள் பின்தங்கிய நிலையில் தனது இரண்டாவது இன்னிங்ஸைத் தொடர்ந்த பாகிஸ்தான் அணி, நேற்று முன்தினம் ஆட்ட நேரமுடிவ்னபோது 4 விக்கெட்டுகள் இழப்புக்கு 103 ஓட்டங்களைப் பெற்றுத் தடுமாற்றத்துடன் காணப்பட்டது.

மன்சூர் (23), சொய்ப் மாலிக் (18) ஆகியோர் களத்தில் இருந்தனர்.

பின்னர் தனது இன்னிங்ஸைத் தொடர்ந்த பாகிஸ்தான் அணியின் விக்கெட்டுகள் வீழ்ந்தவண்ணம் இருந்தன.

இதனால் நேற்று ஆட்டம் தொடங்கி பாதிநேரம் முடியுமுன்னரே பாகிஸ்தான் அணி ஆட்டமிழந்தது. அவ்வணி வெறும் 206 ஓட்டங்களை மட்டுமே பெற்றது. இதனால் 231 ஓட்டங்கள் வித்தியாசத்தில் தோல்வியும் அடைந்தது.

பாகிஸ்தானின் துடுப்பாட்டத்தில், முந்தைய நாள் ஆட்டத்தின்போது களத்தில் இருந்த செய்ப் மாலிக் மேலதிகமாக ஓர் ஓட்டத்தைச் சேர்த்து 19 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார்.

ஏனைய வீரர்களான அஹ்மட் (5), உமர் குல் (0), மொஹமட் ஆஸிப் (0) டனிஸ் கனேரியா (1) ஆகியோர் தடுமாறி ஆட்டமிழந்தனர்.

சிறப்பாக ஆடிய மன்சூர் மட்டும் ஆகக்கூடுதலாக77 ஓட்டங்களைப்பெற்றுக்கொடுத்தார். கடைசிவரை ஆட்ட மிழக்காது மொஹமட் ஆமீர் 30 ஓட்டங்களுடன் களத்தில் இருந்தார்.

ஆஸ்திரேலிய அணி சார்பாக பந்துவீச்சில், இரண்டாவது இன்னிங்ஸின்போது, சிடில், கௌரிச் ஆகியோர் தலா 3 விக்கெட்டுகளையும், வோட்ஷன் 2 விக்கெட்டுகளையும், போலிஞ்சர், ஜோன்சன் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டும் கைப்பற்றினர்.

ஆட்டநாயகனாக பொண்டிங்கும், தொடரின் நாயகனாக வோட்ஷனும் தெரிவுசெய்யப்பட்டனர். ஏற்கனவே 2-0 என்ற கணக்கில் முன் னிலை வகித்தது மட்டுமன்றி தொடரையும்தன்வசப்படுத்திக்கொண்ட ஆஸி., இந்தப் போட்டியிலும் வெற்றிகொண்டதன் மூலம் 3 போட்டிகளைக் கொண்ட இந்தத் தொடரை பாகிஸ்தானுக்கு எந்தவொரு வெற்றியையும் கொடுக்காது - முற்றாகவே வழித்துத் துடைத்துள்ளது. இதன் மூலம் இத்தொடரில் 3-0 என்ற கணக்கில் பெரு வெற்றிபெற்றது.

# டினாரா சபீனா, கிம் கிளிஸ்டர்ஸ் அடுத்த சுற்றுக்கு முன்னேற்றம்

## ஷரபோவா அதிர்ச்சித் தோல்வி!

மெல்பேர்ண், ஜன.19

ஆஸ்திரேலிய ஓபன் டென்னிஸ் தொடரின் முதல் சுற்று ஆட்டத்திலேயே ரஷ்யாவின் மரியா ஷரபோவா அதிர்ச்சித் தோல்வியடைந்தார்.

டென்னிஸ் கிராண்ட்ஸ்லாம் பட்டங்களில் ஒன்றான ஆஸ்திரேலிய ஓபன் டென்னிஸ் போட்டித் தொடர் நேற்று மெல்பேர்ண் நகரில் ஆரம்பமாகியது.

இதில் நேற்று நடைபெற்ற ஆண்கள் ஒற்றையர் போட்டியின் முதல் போட்டியில் சிலி வீரரான கான்சலஸ் - பெல்ஜியம் வீரரான ஆலிவர் ஆகியோர் மோதினர். இதில் கான்சலஸ் 6-3, 6-4, 3-6, 6-1 என்ற செற் கணக்கில் வெற்றி பெற்றார்.

மற்றொரு போட்டியில் குரோஷ்ய வீரரான இவான் லுஜிபிக் ஆஸ்திரேலிய வீரரான குப்ளர் ஆகியோர் மோதினர். இதில் இவான் லுஜிபிக் 6-1, 6-2, 6-2 என்ற நேர் செற் கணக்கில் வெற்றி பெற்றார். மற்றொரு போட்டியில் ஜேர்மனி வீரரான புனோரியன் மேயர் வெற்றி பெற்றார்.

இதேவேளை நடைபெற்ற பெண்கள் ஒற்றையர் ஆட்டங்களின், முதல் போட்டியில் உலகின் முன்னணி வீராங்கனைகளில் ஒருவரான ரஷ்யாவின் மரியா ஷரபோவா சக நாட்டு வீராங்கனையான மரியா கிரி லன்கோவுடன் மோதினார்.

இதில் ஷரபோவா 6-7 (4-7), 6-3, 4-6 என்ற செற் கணக்கில் அதிர்ச்சித் தோல்வியடைந்தார். 2008ஆம் ஆண்டு ஆஸ்திரேலிய ஓபன் சம்பியன் பட்டத்தைப் பெற்ற ஷரபோவா, இந்தப் போட்டியில் முதல் சுற்றிலேயே தரவரிசை இல்லாத வீராங்கனையிடம் தோல்வியடைந்து வெளியேறியமையானது ஆச்சரியத்தைக் கொடுத்தது.

இதேவேளை நடைபெற்ற மற்றொரு போட்டியில் உலகின் 2ஆம் நிலை வீராங்கனையான டினாரா சபீனா (ரஷ்யா) சுலோவேக்கியா வீராங்கனையான ராப்ரிகோலை 6-4, 6-4 என்ற நேர் செற் கணக்கில் வீழ்த்தினார்.

15ஆம் தரவரிசையில் உள்ள பெல்ஜியம் வீராங்கனை கிம் கிளீஸ்டர்ஸ், கனடா வீராங்கனையான டெட்ரோல்டை 6- 0, 6- 4 என்ற கணக்கில் ஊதித்தள்ளினார்.

மகளிர் சுற்று மற்ற ஆட்டங்களில் சீனாவின் ஜீ செங், உக்ரைனின் பொண்டாரென்கோ ஆகியோரும் அடுத்த சுற்றுக்கு முன்னேறினர். (சி)

# இந்தியாவை 243 ஓட்டங்களுக்குள் கட்டுப்படுத்தியது பங்களாதேஷ்!

சிட்டகொங், ஜன.19

டெஸ்டில் சிறிய அணி என்று ஷேவாக்கினால் வர்ணிக்கப்பட்ட பங்களாதேஷ் அணி, முதல் டெஸ்டின் முதல் இன்னிங்ஸிற்காக, 243 ஓட்டங்களுக்குள் கட்டுப்படுத்தியது.

இந்திய கிரிக்கெட் அணி பங்களாதேஷூக்குச் சுற்றுப்பயணம் மேற்கொண்டு 2 டெஸ்ட் போட்டிகளில் விளையாடிவருகிறது. இரு அணிகளுக்கிடையிலான முதலாவது டெஸ்ட் போட்டி சிட்டகாங்கில் நேற்று முன்தினம் தொடங்கியது.

பனி மற்றும் ஈரப்பதம் காரணமாக ஆட்டம் தொடங்குவதில் தாமதம் ஏற்பட்டது. சுமார் 90 நிமிடங்கள் தாமதமாகவே ஆட்டம் ஆரம்பமானது.

நாணயச் சுழற்சியில் வென்ற பங்களாதேஷ் அணி, முதலில் இந்திய அணியைத் துடுப்பெடுத்தாடப் பணித்தது.

அதன்படி ஆரம்ப வீரர்களாக கௌதம் கம்பீர், ஷேவாக் ஆகியோர் களமிறங்கினர். கம்பீர் நிதானமாக ஆட மறுமுனையில் ஷேவாக் அடித்து ஆடினார்.

அதிரடியாக ஆடிய ஷேவாக் 50 ஓட்டங்களை எட்டினார். டெஸ்டில் அவர் அடித்த 20ஆவது அரைச் சதம் இதுவாகும்.

பின்னர் சிறப்பாகச் செயற்பட்ட பங்களாதேஷ் வீரர்களான சஹாதத் உசைன், ஷகீப் அல்-ஹசன் ஆகியோர் தமது பந்து வீச்சால் இந்திய அணியின் விக் கெட்டுகளை வேகமாகச் சரிந்தனர்.

இந்திய அணி 79 ஓட் டங்களைப் பெற்றபோது ஆரம்ப ஜோடி பிரிந்தது. ஷேவாக் 52 ஓட்டங் களுடன் ஆட்டமிழந்தார். அடுத்த ஓவரில் கம்பீரும் (23) நடையைக் கட்டினார். அடுத்து டிராவிட் 'போல்ட்' ஆனார்.

பின்னர் வந்த வி.வி. லக்ஷ்மண் 7 ஓட்டங்களுடனும், யுவராஜ் சிங் 12 ஓட்டங்களுடனும், தினேஷ் கார்த்திக் ஓட்டம் எதுவும் எடுக்காமலும் ஆட்டமிழந்தனர். ஒரு புறம் விக்கெட்டுகள் வீழ்ந்தாலும் மறு முனையில் டெண்டுல்கர் தனது அனுபவ ஆட்டத்தை வெளிப்படுத்தினார். பின்வரிசை யில் அவ ருடன் இணைந்த அமித்மிஸ்ரா 14 ஓட்டங்களுடனும், சஹீர்கான் 11 ஓட்டங்களுடனும் ஆட்டமிழந்தனர்.



இந்திய அணி 63 ஓவர்களில் 8 விக்கெட்டுகள் இழப்புக்கு 213 ஓட்டங்களை எடுத்த நிலையில் போதிய வெளிச்சம் இல்லாதமையால் முதல் நாள் ஆட்டம் முடிவுக்குவந்தது.

டெண்டுல்கர் 76 ஓட்டங்களுடனும், இஷாந்த் ஷர்மா ஓர் ஓட்டத்துடனும் ஆட்டமிழக்காமல் களத்தில் இருந்தனர்.

நேற்று தனது இன்னிங்ஸைத் தொடர்ந்த இந்திய அணி, சச்சின் சதம் கடந்த நிலையில் 243 ஓட்டங்களைப் பெற்று ஆட்டமிழந்தது. இஷாந்த் சர்மா, சிறிசாந்த் ஆகியோர் தலா ஓர் ஓட்டத் துடன் ஆட்டமிழந்தனர்.

பங்களாதேஷ் அணி சார்பாக பந்துவீச்சில் சஹாதத் உசைன், ஷகீப் அல்-ஹசன் ஆகியோர் தலா 5 விக்கெட்டுகளை அள்ளிச் சென்றனர்.

பின்னர் தனது இன்னிங்ஸிற்காகக் களமிறங்கிய பங்களாதேஷ் அணி, நேற்றைய மதிய நேர உணவு நேர இடைவேளை யின்போது 4 ஓவர்களை எதிர்கொண்டு விக்கெட் இழப்பின்றி 21 ஓட்டங்களைப் பெற்றிருந்தது.

இன்று ஆட்டத்தின் மூன்றாம் நாள் ஆகும். (சி)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# டெங்கு கட்டுப்பாட்டுக்கு ஒத்துழைக்காவிடின் 6மோத சிறைத்தண்டனை; ரூ. 50ஆயிரம் தண்டம்

## குடாநாட்டு மக்களில் சிலர் அக்கறை காட்டாததால் சட்ட நடவடிக்கை

யாழ்ப்பாணம், ஜன.19

குடாநாட்டில் டெங்கு நோயைக் கட்டுப்படுத்த பொதுமக்கள் ஒத்துழைப்பு வழங்கத்தவறியுள்ளதால் நுளம்புத்தடுப்புச் சட்டத்தை சுகாதார அமைச்சு அறிமுகப்படுத்தியுள்ளது.

இந்தச் சட்டத்தை நடைமுறைப்படுத்துவது தொடர்பாக அறிமுகப்பயிற்சி பொது சுகாதார பரிசோதகர்களுக்கு நேற்று வழங்கப்பட்டுள்ளது. அவர்கள் அந்தப் பணியை உடனடியாக முன்னெடுப்பார்கள்.

இந்தச் சட்டத்தின் கீழ் 50ஆயிரம் ரூபா வரையான தண்டமும், 6மோத கால சிறைத் தண்டனையும் வழங்க முடியும்.

யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர். ஆ.கேதீஸ்வரன் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

யாழ்.மாவட்டத்தில் டெங்கு நோயின் தாக்கம் தொடர்ந்து இருந்து வருகின்றது. டிசெம்பர், ஜனவரி மாதங்களில் 15நோயாளர்கள் இந் நோயினால் இறந்துள்ளார்கள்.

யாழ்.மாவட்டம் முழுவதும் டெங்கு நோய் கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. டெங்கு நோயைப்பரப்பும் நுளம்புகள் உற்பத்தியாகும் இடங்களை சுத்திகரிப்பு பணி மூலம் அகற்றுவதே முக்கியமான வினைத்திறன் மிக்க தடுப்பு நடவடிக்கை. இப்பணி ஒவ்வொரு வீடுகளிலும், நிறுவனங்களிலும், பொது இடங்களிலும் மேற்கொள்ளப்பட வேண்டும்.

பெரும்பாலானோர் இப் பணியில் ஈடுபட்டிருப்பதை நாம் அவதானிக்க முடிகிறது. ஆனால் ஒரு சிலர் இதற்கு ஒத்துழைப்பு வழங்காது தொடர்ந்து டெங்கு நோய் பரம்பலுக்கு உறுதுணையாக இருந்து வருகின்றனர். ஒரு குறிக்கப்பட்ட பிரதேசத்தில் பெரும்பாலானோர் தமது வீட்டு வளவுகளை, நிறுவனங்களை, பொது இடங்களை துப்புரவு செய்தாலும் ஓரிருவர் இப் பணியை செய்யாவிடின் அப்பிரதேசத்தில் நுளம்புகளின் பெருக்கத்தை கட்டுப்படுத்த முடியாது. டெங்கு நோய் பரம்பலை தடுக்க முடியாது. ஒரு சிலர் செய்யும் தவறுகளால் தொடர்ந்து உயிரிழப்புகள் ஏற்படுவதை நாம் அனுமதிக்க முடியாது.


கடந்த ஆண்டில் இலங்கையின் சரித்திரத்தில் முன்னொருபோதும் இல்லாத அளவுக்கு டெங்கு நோயின் தாக்கம் ஏற்பட்டது. 33ஆயிரத்துக்கும் அதிகமான நோயாளர்கள் டெங்கு நோயுடன் இனங்காணப்பட்டனர். இலங்கையின் பல பகுதிகளிலும் டெங்கு நோயைக் கட்டுப்படுத்த பொது மக்கள் ஒத்துழைப்பு வழங்க தவறியதனால் சுகாதார அமைச்சு நுளம்பு பெருக்க தடுப்புச் சட்டத்தை அறிமுகப்படுத்தியது.

இச் சட்டத்தின் உதவியுடனேயே பல மாவட்டங்களில் டெங்கு நோய் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டது. யாழ் மாவட்டத்திலும் இந்நோயை கட்டுப்படுத்த இச் சட்டத்தை நடைமுறைப்படுத்த நாம் நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளோம்.

சுகாதார அமைச்சின் அறிவுறுத்தலின் பிரகாரம் கொழும்பில் இருந்து வருகை தந்த உயர் மட்டக்குழுவினர் யாழ்.மாவட்டத்தில் உள்ள சகல பொது சுகாதார பரிசோதகர்களுக்கும் இச் சட்டத்தை நடைமுறைப்படுத்துவது சம்பந்தமாக அறிமுகப்பயிற்சியை வழங்கியுள்ளனர்.

11ஆம் இலக்க நுளம்பு பெருக்க தடுப்புச் சட்டத்தின் பிரகாரம் நுளம்பு பெருகும் இடங்களை கொண்டிருக்கும் வீட்டுக்காரருக்கு அல்லது நிறுவனத் தலைவருக்கு அவற்றை நிவர்த்திசெய்ய அறிவுரையும் கால அவகாசமும் வழங்கப்படும். இக் காலப்பகுதிக்குள் இனங்காணப்பட்ட குறைபாடுகள் நிவர்த்தி செய்யப்படாவிடின் சட்ட நடவடிக்கை முன்னெடுக்கப்படும்.

இச் சட்டத்தின் கீழ் 50,000 ரூபா வரையான தண்டமும் 6மோத கால சிறைத்தண்டனையும் வழங்கப்படலாம். டெங்கு கட்டுப்பாட்டு நடவடிக்கைகளுக்கு ஒத்துழைப்பு வழங்காதவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கைகளை உடனடியாக முன்னெடுக்குமாறு சகல பொது சுகாதார பரிசோதகர்களுக்கும் பணிப்புரை வழங்கப்பட்டுள்ளது-என்றுள்ளது. (ஒ-1)



நல்லை திருஞான சம்பந்தர் ஆதீனத்தில் பிரதி வெள்ளிக்கிழமை தோறும் மாலை நான்கு மணிக்கு இடம்பெற்றுவரும் தொடர் கருத்தரங்கு நிகழ்வில், ' நாவலர் காட்டிய சைவ வாழ்வியல்' எனும் விடயத் தலைப்பில் சிவத்தமிழ் வித்தகர் சிவமகாலிங்கம் உரை நிகழ்த்துதையும் அருகில் சு.பரமநாதன், பேராசிரியர் சி.க.சிற்றம்பலம், மகாதேவாக்குருக்கள் ஆகியோர் அமர்ந்திருப்பதையும் முதல் படத்திலும் கருத்தரங்கில் கலந்துகொண்டோரில் ஒரு பகுதியினரையும் படங்களில் காணலாம். *(படங்கள்: உமா)*

# மாலை கட்டுதல், கோலம் போடுதல் போட்டிகள்

யாழ்ப்பாணம், ஜன.19

தென்மராட்சி கல்வி வலயப்பாடசாலைகளில் தரம் 10, 11 ஆகிய வகுப்பு மாணவர்களுக்கான மாலை கட்டுதல், கோலம் போடுதல் ஆகிய வலய மட்டப் போட்டிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இந்த வகுப்பு மாணவர்களுக்கிடையே பாடசாலை மட்டப் போட்டிகளை நடத்தி எதிர்வரும் 25ஆம் திகதிக்கு முன்னர் மாணவர்களின் பெயர் விவரங்களை அனுப்பி வைக்குமாறு வலயக்கல்விப் பணிப்பாளர் கு.பிறேமகாந்தன் பாடசாலைகளின் அதிபர்களுக்கு அறிவித்துள்ளார்.

தரம் 11இல் கற்கும் சைவ சமய பாட மாணவர்களின் எண்ணிக்கை, தரம் 12, 13இல் கற்கும் இந்து நாகரிகம், இந்து சமயம் ஆகிய பாட மாணவர்களின் எண்ணிக்கை ஆகிய விவரங்களையும் அனுப்பி வைக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-207)

# முஸம்மலின் ஆதரவைப்பெற சரத் லஞ்சம் கொடுத்தார் என்ற குற்றச்சாட்டுக்கு நஷ்டஈடு கோருகிறார் ரவி

கொழும்பு, ஜன. 19

தேசிய சுதந்திர முன்னணியின் எம்.பி. முஹம்மட் முஸம்மலின் ஆதரவைப் பெறுவதற்காக அவருக்கு ஜெனரல் சரத் பொன்சேகா மூன்று கோடி ரூபா லஞ்சம் கொடுத்தார் என்று தெரிவிக்கப்படும் குற்றச்சாட்டுடன் ஐக்கிய தேசியக் கட்சி எம்.பி. ரவி கருணாநாயக்கவைத் தொடர்புபடுத்தியமைக்காக ஐ.ரி.என்., ரூபவாஹினி, லேக் ஹவுஸ் ஊடக நிறுவன அதிகாரிகள், எம்.பிக்களான விமல் வீரவன்ஸ மற்றும் முஸம்மில் ஆகியோரிடம் தலா நூறு கோடி ரூபா நஷ்டஈடு கோரி ரவி கருணாநாயக்க கடிதங்களை அனுப்பியுள்ளார்.

இக்குற்றச்சாட்டுடன் மேலும் தொடர்புபடுத்தப்பட்ட எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க, மங்கள சமரவீர மற்றும் மலிக் சமரவிக்ரம ஆகியோரும் தனித்தனியாக நஷ்டஈடு கோருவர் என்று ரவி கருணாநாயக்க கூறினார்.

எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றிய ரவி கருணாநாயக்க இது தொடர்பாக மேலும் கூறியவை வருமாறு:-

எமது பொது வேட்பாளர் சரத் பொன்சேகாவை ஆதரிப்பதற்காக விமல் வீர வன்ஸ அணியைச் சேர்ந்த முஸம்மில் எம்.பி. பொன்சேகாவின் அலுவலகத்திற்கு வந்தார். வந்த வேகத்திலேயே திரும்பிப் போனார்.

சற்று நேரம் கழித்து விமல் வீரவன்ஸவுடன் சேர்ந்து முஸம்மில் ஊடகவியலாளர் சந்திப்பொன்றை நடத்தினார். அவரைப் பொன்சேகாவின் பக்கம் இழுப்பதற்காக பொன்சேகா தரப்பு மூன்று கோடி ரூபா பணத்தை அவருக்கு லஞ்சமாகக் கொடுத்தது என்றார்.

### ஏனையோரையும் தொடர்புபடுத்தி குற்றச்சாட்டு

10 வாக்குகள் கூட இல்லாத ஒருவருக்கு மூன்று கோடி ரூபாவைக் கொடுக்க முடியுமா? அதுமாத்திரமின்றி இந்தக் கொடுக்கல் வாங்கலுடன் மங்கள சமரவீர, ரணில் விக்கிரமசிங்க, மலிக் சமரவிக்ரம ஆகியோரையும் என்னையும் தொடர்புடுத்தி முஸம்மிலும், விமலும் குற்றச்சாட்டுகளை முன்வைத்தனர்.

லஞ்சம் கொடுக்கப்பட்டது உண்மையென்றால் முஸம்மில் லஞ்ச, ஊழல் ஆணைக்குழுவிலும் முறைப்பாடு செய்திருக்க வேண்டும். அனைத்தையும் ஆணைக்குழுவிடம் ஒப்படைத்திருக்க வேண்டும். அவ்வாறு செய்யாது அவர் சி.ஐ.டியிடம் முறைப்பாடு செய்துள்ளார்.

இந்த நடவடிக்கையுடன் என்னைத் தொடர்புபடுத்தி விமலும், முஸம்மிலும் கூறியமை மாத்திரமின்றி ஐ.ரி.என்., ரூபவாஹினி, லேக்ஹவுஸ் ஆகிய ஊடக நிறுவனங்களிலும் என்னைத் தொடர்புபடுத்தி செய்திகள் வெளியிடப்பட்டன.

இதன் காரணமாக மேற்படி ஊடக நிறுவனங்களின் அதிகாரிகளிடமும், விமல் வீரவன்ஸ மற்றும் முஸம்மிலிடமும் தலா 100 கோடி ரூபா நஷ்டஈடு கோரி அவர்களுக்குக் கடிதங்களை அனுப்பியுள்ளேன்.

அதேபோல் இந்தப் பொய்க்குற்றச்சாட்டுத் தொடர்பாக நான் லஞ்ச, ஊழல், ஆணைக்குழுவிடம் முறைப்பாடு செய்துள்ளேன் - என்றார். (சி)

# கொடிகாமம் பஸ் நிலையத்தில் காத்திருக்கும் அரச ஊழியர்கள்

யாழ்ப்பாணம், ஜன, 19

கொடிகாமம் பஸ்நிலையத்தில் வன்னிப் பிரதேச அரச ஊழியர்கள் மணிக் கணக்கில் காத்திருக்கும் நிலை தொடர்கிறது.

வன்னிப் பிரதேசத்திலுள்ள அரச அலுவலகங்கள்,பாடசாலைகள் ஆகியவற்றில் பணிபுரியும் நூற்றுக்கு மேற்பட்டோர் கொடிகாமம் பஸ் நிலையத்தில் காலை வேளையில் காத்திருப்பதாகவும் அரச செலவில் நடத்தப்படும் இந்த பஸ்களில் யாழ்ப்பாணத்தில் இருந்து அதிக எண்ணிக்கையான உத்தியோகத்தர்களை ஏற்றி வரப்படுவதால் கொடிகாமம் பஸ் நிலையத்தில் நிறுத் தாமலேயே சென்று விடுகின்றது என்று தெரிவிக்கப்பட்டது.

இதனால் வடமராட்சி, தென்மராட்சி கிழக்கு ஆகிய பகுதிகளைச் சேர்ந்தவர் கள் கொடிகாமத்தில் நீண்ட நேரம் பஸ்ஸிற்காக காத்திருக்க வேண்டியுள்ளதாகவும் இவர்களுக்கென பருத்தித்துறையில் இருந்து கொடிகாமம் ஊடாக பஸ் சேவை நடத்த உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க மாட்டார்களா எனவும் பாதிக்கப்பட்ட அலுவலர்கள் கேள்வி எழுப்புகின்றனர்.

வன்னிப்பகுதியில் கடமையாற்றும் உத்தியோகத்தர்களுக்கு இலவச பஸ் சேவை யாழ்ப்பாணத்தில் இருந்து நடத்தி வருவது குறிப்பிடத்தக்கது. (ஒ-207)

# வெங்காயச் செய்கையில் தோட்டக்காரர் ஆர்வம்

சுழிபுரம், ஜன. 19

சுழிபுரம் பகுதியிலுள்ள பறாளையை அண்டிய தோட்டக் காணிகளில் அமோகமாக வெங்காய நடுகை இவ்வாரம் முதல் நடைபெற்று வருகின்றது.

வெங்காயம் கூடுதலான விலை விற்பதாலும் தென்னிலங்கைக்கு கொண்டு செல்லப் படுவதாலும் தோட்டச் செய்கையாளர் ஆர் வத்துடன் வெங்காயச் செய்கையில் ஈடுபட்டுள்ளனர்.

இதனால் இப்பகுதியிலுள்ள கூலியாட்களுக்கும் அதிக வேலை வாய்ப்புக்கள் கிடைக்கின்றன.

தோட்டக் காணியில் நிலத்தை பண்படுத்தி பாத்திகள் கட்டும் வேலைகளும் வெங்காய நடுகையும் மும்முரமாக நடைபெற்று வருகின்றன.

அநேகமாக இன்னும் இரு வாரங்களில் வெங்காய நடுகை நிறைவடையும் என்று வெங்காயச் செய்கையில் ஈடுபட்டுள்ளவர்கள் தெரிவிக்கின்றனர். (ஒ-28)


## தொடர்பு கொள்ளவும்

Mr.M.யேசுதாசு, Mrs.மேரி பற்றீசியா, சந்திப், ஜிம்றோய் ஆகியோரை அல்லது இவர்கள் பற்றிய தகவல் அறிந்தவர்கள் Mr.J.சமிற்றன் (சுவிஸ்) என்பவருடன் தொடர்பு கொள்ளவும். தொ.பே.: 0033658534396



(94059)

## நூபதி காட்சியறையில்

* பேக்கரி மிசின்
* எலக்ரோனிக் தராசு
  5000ரூபா தொடக்கம் விசேட விலைகளில்
* இலகு முறைக்கட்டண வசதி
* இன்றிலிருந்து 7நாள்கள் விசேட விலைக்கழிவு

தொடர்பு: 0777427777

(C/564197)

## பந்தல் செற் விற்பனைக்கு உண்டு

இணுவில் மேற்கு, இணுவிலில் பந்தல், மணவறை, கதிரைகள், முகப்பு என்பன விற்பனைக்கு உண்டு.
தொடர்பு : 0779906860

## Diploma in English

Become IELTS/TOFEL Qualified!
- Spoken with Grammar.
- Phonetics Practices.
- Computer Based Practices
- Practice Exercises.
- Spoken Practices.
- Letter Writing.
- Listening..

MCS Supported By UNDP/JRRP
IELTS

பதிவுகளை 23.01.2010 க்கு முன்பு மேற்கொள்ளவும்.
மேலதிக விபரங்களுக்கு நேரில்
324, பலாலி வீதி,பரமேஸ்வராசந்தி யாழ்ப்பாணம், 0772395895


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



விஞ்ஞான தொழில்நுட்ப அமைச்சர் கலாநிதி திஸ்ஸ விதாரண அமைச்சின் யாழ். மாவட்ட இணைப்பாளர் ந.தமிழழகன் மற்றும் பிரமுகர்களுடன் கடந்த சனிக்கிழமை கைதடிப் பகுதிக்கு திடீர் விஜயம் ஒன்றை மேற்கொண்டிருந்த போது எடுக்கப்பட்ட படங்கள். அமைச்சர் அப்பகுதி மக்களின் பிரச்சினைகளையும் கேட்டறிந்து கொண்டார். (ஒ-288)

# பாடசாலைகளில் 'கணிதம்- வாசிப்பு அபிவிருத்தி' இவ்வாண்டு முழுமூச்சுடன் மேற்கொள்ளப்படும்

## யாழ்.கல்வி வலயப்பணிப்பாளர் வேதநாயகம் தகவல்

அச்சுவேலி, ஜன.19

யாழ்.கல்வி வலயப் பாடசாலைகளில் இந்த வருடம் ''கணித அபிவிருத்தி - வாசிப்பு அபிவிருத்தி'' செயற்பாடுகளிற்குரிய வேலைத் திட்டங்கள் முன்னெடுக்கப்படும். இதற்கான வேலைத்திட்டம் ஆரம்பப்பிரிவில் இருந்து கனிஷ்ட இடைநிலைப் பிரிவுத் தரங்கள் வரையில் திட்டமிடப்பட்ட வகையில் முழுமூச்சுடன் மேற்கொள்ளப்படவுள்ளது.

இவ்வாறு யாழ்.கல்வி வலய கல்விப் பணிப்பாளர் திருமதி அருளேஸ்வரி வேதநாயகம் அறிவித்துள்ளார்.

யாழ்.கல்வி வலயப் பாடசாலைகளின் இந்த வருடத்திற்கான ''அடையாளப்படுத்தப்பட்ட வேலைத்திட்டம்'' பற்றி வலயக்கல்விப் பணிப்பாளர் தொடர்ந்து உதயனுக்கு கருத்து தெரிவிக்கையில்:

பாடசாலை மாணவர்களின் கல்வி மேம்பாட்டுக்கு எண்ணும் எழுத்தும் அடித்தளமாக அமைகின்றன. அண்மைக் காலத்தில் இவற்றில் ஏற்பட்ட தளம்பல் நிலையை, கல்வி அடைவு மட்டத்திலும் பரீட்சைப் பெறுபேறுகளிலும் தெளிவாக கண்டு கொள்ளக்கூடியதாக உள்ளது.

எண் என்ற வகையில் கணித பாடத்திலும் எழுத்து என்ற வகையில் எழுத்தறிவு மற்றும் வாசிப்பு தொடர்பாகவும் பொருத்தமான அறிவு நிலை ஏற்படும் இடத்து ஏனைய பாடத்துறைகளை மாணவர்கள் கற்றுக்கொள்வதில் தடங்கல் இருக்காது. எண்ணிலும் எழுத்திலும் அடிப்படை அறிவு இல்லாத நிலையில் ஏனைய பாட அறிவை கட்டியெழுப்பலாம் என்பது யதார்த்தபூர்வமானது அல்ல.

எண்ணும் எழுத்தும் ஆரம்ப பிரிவில் உறுதியான (1-5தரங்களில்) முறையில் மாணவர்களுக்கு ஊட்டப்படவேண்டும். இதில் கருத்து மயக்கத்திற்கு இடமேயில்லை. இதற்காக அண்மைக்காலத்தில் உரியமுறையில் பாடசாலைகளில் மேற்கொள்ளப்படவில்லை என்றும் ஆரம்ப வகுப்புச் செயற்பாடுகள் தரம் 5புலமைப் பரிசில் பரீட்சையை முன்நிலைப்படுத்தி மேற்கொள்ளப்படுவதாலும் கல்வி அறிவு குறைவான பெற்றோரின் பிள்ளைகள் தொடர்ந்து பின்தங்கிய நிலையிலே இருந்து வருவதாகவும் கருத்துக்கள் முன்வைக்கப்படுகின்றன. இதில் நியாயம் இல்லாமல் இல்லை.

எல்லா மாணவர்களுக்கும் சம வாய்ப்புடன் கூடிய கல்வி ஊட்டப்படவேண்டும் என்பது தேசியக்கல்வி குறிக்கோளின் முக்கிய வலியுறுத்தல் ஆகும். இது உரிய முறையில் நிறைவு செய்யப்பட வேண்டும்.

கடந்த வருடம் எழுத்தறிவூட்டலில் செயற்றிட்டம் வெற்றிகரமாக முன்னெடுக்கப்பட்டு குறித்த இலக்கை அடைந்துள்ளது. அது இந்த வருடமும் தொடர்ந்து முன்னெடுக்கப்படும். அத்துடன் வாசிப்பு தொடர்பான செயற்றிட்டமும் கணிதபாட அபிவிருத்தி வேலைத் திட்டமும் இந்த வருடம் முன்னெடுக்கப்படவுள்ளன.

கணித பாட அபிவிருத்தி வேலைத்திட்டம் முழுவீச்சுடன் முன்னெடுப்பதற்கு திட்டமுன்மொழிவுகள் தயார் செய்யப்பட்டு சம்பந்தப்பட்ட பாடத்துறை சார்ந்தவர்களுக்கும் அதிபர்களுக்கும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இந்த வகையில் கணித அபிவிருத்தி ஆண்டாக முன்னெடுப்பதற்கு தீர்மானிக்கப்பட்டிருப்பதோடு அதனோடு இணைந்த நிலையில் கணிதப்புதிர் போட்டி நடத்துதல், கணித சஞ்சிகை வெளியிடல், கணித பாசறை நடத்துதல், கணித கண்காட்சி நடத்துதல், கணிதபாட பரீட்சை தொடர்பான முழுமையான பகுப்பாய்வு மேற்கொண்டு அதில் கண்டு கொள்ளப்பட்ட முடிவுகளின் அடிப்படையில் வேலைத் திட்டங்களை முன்னெடுத்தல் என்பன மேற்கொள்ளப்படவுள்ளன- என்றார். (ஒ-11)

## நல்லை ஆதீனத்தில் விசேட சொற்பொழிவு

யாழ்ப்பாணம், ஜன.19

நல்லை ஆதீனத்தில் பிரதி வெள்ளிக்கிழமை தோறும் இடம்பெற்று வரும் தொடர் சொற்பொழிவு நிகழ்வில் எதிர்வரும் வெள்ளிக்கிழமை பிற்பகல் 4மணிக்கு ''நாவலர் காட்டிய சைவ வாழ்வியல் வழியில் வினையின் பயன்'' என்ற தலைப்பில் சிவத்தமிழ் வித்தகர் சிவ மகாலிங்கம் விரிவுரை நிகழ்த்துவார். (1)

## பட்டாசு வெடித்து நால்வர் காயம்

பட்டாசு வெடித்து நான்கு பேர் காயமடைந்தனர்.நேற்றுமுன்தினம் இடம்பெற்ற சம்பவங்களில் காயமடைந்த நால்வரும் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.சரசாலையைச் சேர்ந்த ஆர். சிவவேந்தன்(வயது 18), மீசாலையைச் சேர்ந்த ரி.கோபன்(வயது 10),மட்டுவிலைச் சேர்ந்த எஸ்.பவிர்சன் (வயது11), நுணாவிலைச் சேர்ந்த பீ.பிரகாஸ்(வயது 25) ஆகியோரே பட்டாசு, ஈர்க்கு வாணம்,சக்கர வாணம் ஆகியவை வெடித்து காயமடைந்தவர்களாவர். (ஒ-207)

# கஞ்சிகுடிச்சாறு, தங்கவேலாயுதபுரம் மக்களின் மீள்குடியேற்றம் விரைவில்

## திருக்கோவிலில் வைத்து ஜனாதிபதி தெரிவிப்பு

திருக்கோவில், ஜன.19



''அம்பாறை, கஞ்சிகுடிச்சாறு, தங்கவேலாயுதபுரம் ஆகிய பிரதேசங்களிலிருந்து இடம்பெயர்ந்த மக்கள் மிக விரைவில் மீள்குடியேற்றம் செய்யப்படுவர்.''

- இவ்வாறு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

ஜனாதிபதியின் அம்பாறை மாவட்ட இணைப்பாளர் இனியபாரதியின் தலைமையில் திருக்கோவில் சித்திரவேலாயுத முருகன் ஆலய முன்றிலில் இடம்பெற்ற பிரசாரக் கூட்டத்தில் ஜனாதிபதி மஹிந்த ராஜக்ஷ கலந்துகொண்டு உரையாற்றும் போதே மேற்கண்டவாறு கூறினார்.

அங்கு அவர் மேலும் கூறியவை வருமாறு:-

இலங்கைத் திருநாட்டில் மூவின மக்களும் ஒரு கொடியின் கீழ் வாக்களிக்கும் முதல் சந்தர்ப்பம் இதுதான். 30 வருட கால யுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவந்து இலங்கை மக்களுக்கு ஒரு அமைதியான சூழலை இப்போது உருவாக்கியுள்ளேன். இன்று எமது நாட்டில் பயங்கரவாதம் முற்றாக ஒழிக்கப்பட்டுள்ளது. இன்று எமக்குத் தேவை, மூவின மக்களின் ஒற்றுமை. நாம் அனைவரும் ஒரு தாய் பிள்ளைகள். நமக்குள் ஜாதி, மத, இனம் பேதம் இல்லை. சிங்கள மக்ளுக்குத் தங்கம் கொடுத்தால் தமிழ் மக்களுக்குத் தகரம் கொடுக்க முடியாது. அவர்களுக்கும் தங்கம்தான் கொடுக்க வேண்டும். இதை நான் நிச்சயம் செய்வேன்.

யுத்தத்தாலும், ஆழிப்பேரலையாலும் பாதிக்கப்பட்ட வடக்கு, கிழக்குப் பிரதேசங்களுக்கு உடனடியாக அபிவிருத்திகளைச் செய்யவேண்டும். மிக விரைவில் இடம்பெயர்ந்த மக்கள் மீள்குடியேற்றம் செய்யப்படுவர்.

20 வருடங்களாக விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் இருந்த தங்கவேலாயுதபுரத்தில் மீள் குடியேற்றம் செய்யப்படும். படித்துவிட்டுத் தொழில் இல்லாமல் இருக்கும் இளைஞர்களுக்குத் தொழில் வழங்கப்படும். வேலையில்லாத பட்டதாரிகளுக்கும் நியமனம் வழங்கப்படும். திருக்கோவில் பிரதேசத்துக்கு கலாசார மண்டபம் உடனடியாக நிர்மாணிக்கப்படும். பொத்துவில் -மட்டக்களப்பு வரை அதிவேக பாதை அமைக்கப்படும். திருக்கோவில் சித்திரவேலாயுத ஆலய இராஜகோபுர வேலைகள் உடனடியாகப் பூர்த்தியாக்கப்படும். உள்வீதிகள் கொங்கிரீட் வீதிகளாக மாற்றப்படும். நீங்கள் என்னை நம்பலாம். நான் உங்களை நம்புகின்றேன். எனவே, உங்களது வாக்குகளைவெற்றிலைச் சின்னத்திற்கு அளித்து என்னை வெற்றிபெறச் செய்யுங்கள். (அ-சி)

# தேர்தலை நீதி, நியாயமாக நடத்த இரு தரப்புகளிடமும் வலியுறுத்தல்

## மூன்று பிரசித்தி பெற்ற பிரஜைகள் கடிதம்

கொழும்பு, ஜன. 19

தேர்தல்கள் மக்களுக்கு நம்பிக்கையை ஏற்படுத்தும் விதத்தில் அமைந்திருக்க வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தி ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிற்கும் எதிர்க்கட்சிகளின் பொதுவேட்பாளர் சரத் பொன்சேகாவுக்கும் நாட்டின் மூன்று பிரசித்திபெற்ற பிரஜைகள் கடிதமொன்றை அனுப்பி வைத்துள்ளனர்.

இரு வேட்பாளர்களையும் தமது ஆதரவாளர்களைக் கட்டுப்படுத்துமாறும் சொல்லிலும் செயலிலும் உயர் தராதரத்தைப் பின்பற்றுமாறும் அவர்கள் கோரியுள்ளனர்.

இலங்கை சமாதானச் செயலகத்தின் முன்னாள் பணிப்பாளர் ஜயந்த தனபால, இலங்கை வர்த்தக சம்மேளனத்தின் தலைவர் சந்திரா ஜயரட்ண, பேராசிரியர் அர்ஜூன அலுவிகார ஆகியோர் கூட்டாக எழுதியுள்ள இக்கடிதத்தில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளவை வருமாறு:-

தேர்தலுக்கு முன்னரும், பின்னரும் நடைபெறுகின்ற விடயங்களிலிருந்து எமது குழந்தைகளும், பேரப்பிள்ளைகளும் சாதகமான பாடங்களைக் கற்றுக் கொள்வதை நாம் விரும்புகிறோம்.

அச்சு ஊடகங்களில் வெளிவருபவை, ஊடகங்களிலும் கூட்டங்களிலும் சொல்லப்படுபவை, செய்யப்படுபவை அனைத்தும் சாதகமானவையாக அமையவேண்டும்.

இது இடம்பெற்றால் இயல்பாகவே தேசிய சட்டங்கள் கடைப்பிடிக்கப்படுகின்ற நிலைமை உருவாகிவிடும்.

இது இடம்பெற வேண்டுமென்றால் உங்களது ஆதரவாளர்கள் சிலரைக் கட்டுப்படுத்த வேண்டும். அல்லது கட்சியிலிருந்து வெளியேற்றவேண்டும்.

குறிப்பாக, வன்முறையை விரும்புபவர்கள், சட்டத்தை மீறுபவர்கள், போதைப் பொருளுடன் தொடர்புடையவர்கள், ஜனநாயக வழிமுறைகளை அலட்சியம் செய்பவர்கள் போன்றோரைக் கட்டுப்படுத்த வேண்டும்.

இதற்கு சட்டங்களும், பிரகடனங்களும் இவற்றை அமுல்படுத்துவதைக் கண்காணிக்க சர்வதேச கண்காணிப்பாளர்களும் அவசியமில்லை.

இதனை வேறு வார்த்தைகளில் சொல்வதானால் சரியானது என உங்களுக்குத் தெரிந்ததைச் செய்யுங்கள், நடைமுறைப் படுத்துங்கள்.

எது சரியானது என்பதை எமது மக்கள் அறியாமலுள்ளனர் என்பது இந்த நாட்டின் பிரச்சினையல்ல.

மாறாக அவர்களுக்கு எது சரியானது என்பது தெரிந்துள்ளது. எனினும், குறுகிய கால நலன்களுக்காகப் பிழையானதைச் செய்து அதனை நியாயப்படுத்துகின்றனர்.

நாட்டின் நலன்களுக்கு மாறாகச் செயற்படுகின்றனர்.

அரசியல் என்பது மக்களின் நலனை அடிப்படையாகக் கொண்டதல்ல, மாறாக அரசியல்வாதிகளின் நலனை மேலும் முன்னெடுக்கவே அது பயன்படுத்தப்படுகின்றது என்ற உணர்வு உருவாகுவதிலிருந்து எம்மை விடுவிப்பதற்காகத் தேர்தலுக்கு முன்னர் உங்களது அதிகாரத்தைப் பயன்படுத்துங்கள்.

உங்களுடைய செயற்பாடுகளும் உரைகளும் உயர் தராதரத்தைக் கொண்டவையாக அமையவேண்டும் என எதிர்பார்க்கிறோம்.

மக்களுக்கு எது சரியானது என்பது தெரிந்துள்ளது. அதனைச் செயலில் காட்டவேண்டும். மக்களுக்குச் சரியான செயல்களை இனம்கண்டு பாராட்டும் திறனுள்ளது. அதற்குத் தமது ஆதரவு வாக்குகளை அவர்கள் வழங்குவார்கள். - எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-சி)

## கல்வி மேம்பாட்டுக்கு ஆஸி. நிதியுதவி

மூதூர், ஜன.19

வடக்கு, கிழக்கு உட்பட நாட்டின் கிராமப்புற பாடசாலை மாணவர்களின் அடிப்படைக் கல்வியை மேம்படுத்த அவுஸ்திரேலிய அரசு முன் வந்துள்ளது. இதனடிப்படையில் திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை, நுவரெலியா, பதுளை, மொனறாகலை ஆகிய மாவட்டங்களில் மிகவும் பின் தங்கிய பகுதிகள் உட்பட 600இற்கும் 800இற்கும் இடையிலான பாடசாலைகளைச் சேர்ந்த 2இலட்சத்து 50ஆயிரம் மாணவர்களின் கல்வியை முன்னேற்றும் நோக்கில் அவுஸ்திரேலிய அரசின் நிதியுதவியுடன் இந்நடவடிக்கையை கல்வியமைச்சு முன்னெடுத்துச் செல்லவுள்ளது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காபூலுக்குள் தலிபான்கள் திடீரென ஊடுருவி அதிரடி; எங்கும் குண்டுச்சத்தங்கள் ; தொடர் வேட்டொலிகள்

## ஆப்கான் தலைநகரில் மும்பைத் தாக்குதல் பாணியில் தீவிரவாதிகள் கைவரிசை

காபூல், ஜன. 19

தலிபான் துப்பாக்கிதாரிகள், நேற்று திங்கட்கிழமை ஆப்கான் தலைநகரான காபூலுக்குள் புகுந்து அதிரடித் தாக்குதல்களை மேற்கொண்டார்கள். தீவிரவாதிகள் மேற்கொண்ட மும்பைத் தாக்குதல் பாணியில் அவர்கள் காபூலிலுள்ள வங்கிகள், வர்த்தக நிறுவனங்கள், அரச அமைச்சுகள் ஆகியவற்றில் அதிரடித் தாக்குதல்களை நடத்தினார்கள்.



இந்தத் துப்பாக்கிதாரிகளில் பலர் தற்கொலைக் குண்டுத் தாக்குதலுக்கான உடையணிந்திருந்தனர். அதேசமயம், தலைநகரில் பல இடங்களில் குண்டுவெடிப்புச் சத்தங்களும், துப்பாக்கிப் பிரயோக ஓசைகளும் ஒலித்த வண்ணமிருந்தன. ஒரு வர்த்தக நிறுவனத்திலி ருந்து கரும் புகை மண்டலம் எழுந்தது.

ஆப்கானிஸ்தான் ஜனாதிபதி ஹமீத் கர்சாயின் புதிய அமைச்சரவையில் சில அமைச்சர்கள் பதவிப்பிரமாணம் செய்துகொண்டிருந்த வேளையில், இந்த அதிரடித் தாக்குதல்கள் உக்கிரமாக இடம் பெற்றுள்ளன. இத்தாக்குதல்களுக்கு தலிபான் இயக்கம் உடனடியாக உரிமை கோரியுள்ளது.

''இந்த அதிரடித் தாக்குதல்களை எமது தீவிரவாதப் போராளிகளில் 20 பேர் முழுவீச்சில் நடத்தியுள்ளனர்'' என்றும் தலிபான் இயக்கத்தினர் தெரிவித்துள்ளனர்.

இதுகுறித்து நேட்டோ படை குறிப்பிடுகையில், '' இரு துப்பாக்கிதாரிகள் கொல்லப்பட்டுள்ளார்கள்'' என தெரிவித்தது.

கிராண்ட் ஆப்கான் வர்த்தக மத்திய நிலையத்தில் நேற்றுக் காலை முதல் அதிரடித் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன. இது பாரிய வர்த்தக மையமாகும். இதன் அருகிலேயே நீதியமைச்சும், ஜனாதிபதி மாளிகையும் அமைந்துள்ளன. மத்திய நகருக்குள் துப்பாக்கிதாரிகள் சுலபமாக ஊடுருவி விட்டார்கள்.

நகரின் மத்திய பகுதியிலுள்ள வர்த்தக நிறுவனங்கள் தீப்பற்றி எரிந்தன. கரும் புகை மண்டலங்கள் எழும்பி, அப்பகுதியை மறைத்தன. வீதிகளில் வாகனப் போக்குவரத்துகள் தடைப்பட்டன. எங்கும் பதற்றம் நிலவியது.

இதற்குப் பின்னர் நகரின் மத்திய மாவட்டப் பகுதியிலுள்ள பிறிதோர் இடத்தில் அதிசக்தி வாய்ந்த குண்டொன்று வெடித்தது. இந்தப் பகுதியில்தான் தூதரகக் கட்டடங்களும், அரச அலுவலகங்களும் அமைந்துள்ளன. பலத்தப் பாதுகாப்பும் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

இக்குண்டுவெடிப்புச் சம்பவம் குறித்து தனியார் டொலோ தொலைக்காட்சி நிறுவனம் குறிப்பிடுகையில், ''இது ஒரு தற்கொலைக் கார்க் குண்டுத்தாக்குதல் ஆகும்'' எனத் தெரிவித்தது.

கிராண்ட் ஆப்கான் வர்த்தக மையத் தாக்குதல் குறித்து பாதுகாப்பு அமைச்சின் பேச்சாளர் ஜஹீர் அஸ்மி தெரிவிக்கையில், ''வர்த்தக மையத்துக்குள் ஆயுததாரிகள் ஊடுருவியுள்ளார்கள். பாதுகாப்புப் படைகளால் இப்பகுதி முற்றுகையிடப்பட்டுள்ளது. படையினருக்கும், ஆயுததாரிகளுக்குமிடையே மோதல் ஏற்பட்டுள்ளது. படையினரில் சிலர் உட்புகுந்துள்ளனர்'' என்றார்.

வர்த்தக மையத்திலுள்ள வர்த்தகர் மொஹம்மது ஷா குறிப்பிடுகையில், ''ஜனாதிபதி மாளிகை நுழைவாயிலுக்கருகில் குண்டொன்று வெடித்தது. அச்சமயம் மூவர் வர்த்தக மையத்துக்குள் நுழைந்து இரண்டாம், மூன்றாம் மாடிகளுக்குச் சென்றனர். அவர்கள் தற்கொலைக் குண்டுதாரிகளைப் போன்றே இருந்தார்கள்'' என்றார்.

''இதையடுத்து, பாதுகாப்பு அதிகாரிகள் துப்பாக்கிப் பிரயோகம் செய்யத் தொடங்கினார்கள். எங்கும் கரும் புகை மண்டலம் எழுந்தது. பாதுகாப்பு அதிகாரிகள் எம்மை பாதுகாப்பாக வெளிக்கொணர்ந்தார்கள்'' என்றும் அவர் விவரித்தார்.

''மற்றும் பலர் ஆர்.பி.ஜி. ரொக்கெட்களைக் கொண்டுசென்றனர். இதையடுத்து, இரண்டாம், மூன்றாம் மாடிகளில் தீச்சுவாலைகள் எழுந்தன. மாடிகளில் ஒரு பகுதி எரியத் தொடங்கியது'' என்றும் அந்த வர்த்தகர் குறிப்பிட்டார்.

## அநேக ஆப்கான் பொலிஸார், புலனாய்வு அதிகாரிகள் பலி !

காபூல், ஜன. 19

ஆப்கானிஸ்தான் தலைநகரான காபூலிலுள்ள வர்த்தக மையத்துக்கருகில் நேற்று திங்கட்கிழமை தீவிரவாதிகள் மேற்கொண்ட கார்க்குண்டுத் தாக்குதலில் அநேக பொலிஸாரும் புலனாய்வு அதிகாரிகளும் கொல்லப்பட்டார்கள் எனப் பாதுகாப்பு வட்டாரம் தெரிவித்தது.

வெளிவிவகார அமைச்சுக்கருகிலுள்ள குல்பஹார் வர்த்தக நிறுவனத்திற்கு வெளியே இக்கார்க்குண்டு பயங்கரமாக வெடித்தது. சந்தேகங்கொண்ட பாதுகாப்புப் படையினர் காரை அணுகும்போது குண்டுதாரி குண்டை வெடிக்க வைத்துள்ளார் என்றும் அது குறிப்பிட்டது.

இக்குண்டுத்தாக்குதலில் அநேக பொலிஸாரும், புலனாய்வு அதிகாரிகளும் கொல்லப்பட்டார்கள். நேற்று சினிமா தியேட்டருக்கருகிலும் குண்டொன்று வெடித்துள்ளது. தீவிரவாதிகளின் தொடர் தாக்குதல்கள் இடம்பெற்ற பகுதிகளுக்கு அப்பால் இந்த இடங்கள் அமைந்துள்ளன என்றும் பாதுகாப்பு வட்டாரம் விவரித்தது.

இதற்கு சிறிது நேரத்துக்குப் பின்னர் சினிமா தியேட்டரின் பின்புறத்திலும் ஒரு குண்டுவெடித்தது. இது தொடர்பான தகவல் எமக்கு கிட்டவில்லை. அதேவேளை, அரச படைகளுக்கும், தீவிரவாத துப்பாக்கிதாரிகளுக்குமிடையே துப்பாக்கிச் சண்டை நடைபெற்றுக்கொண்டிருக்கிறது என பாதுகாப்பு அதிகாரியொருவர் ரொய்ட்டர் செய்தி நிறுவனத்துக்குத் தெரிவித்தார்.

# பிரிட்டிஷ் நாடாளுமன்றத் தேர்தலில் எதிர்க்கட்சிக்கு வெற்றி வாய்ப்பு

லண்டன், ஜன. 19

பிரிட்டனில் எதிர்வரும் ஜூன் மாதம் நடைபெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தலில் எதிர்க்கட்சி அதிக இடங்களில் வெற்றி பெற்று ஆட்சியைக் கைப்பற்றும் எனக் கருத்துக்கணிப்பிலிருந்து தெரிய வந்துள்ளது.

பிரிட்டனில் எதிர்வரும் ஜூன் மாதம் நாடாளுமன்றத் தேர்தல் நடைபெறவுள்ளது. அந்தத் தேர்தலில் எந்தக்கட்சி வெற்றி பெறும்? என்பது குறித்து பிரிட்டிஷ் பத்திரிகைகள் சார்பாகக் கருத்துக்கணிப்புகள் நடத்தப்பட்டு வருகின்றன.

கடந்த மாதம் இடம்பெற்ற கருத்துக்கணிப்பில், எதிர்க்கட்சியான 'கன்சர்வேடிவ் கட்சிக்கு' 9 சதவீதம் கூடுதலாக வாக்குகள் கிடைத்தன.

இந்நிலையில், தற்போது இடம்பெற்ற கருத்துக்கணிப்பில் எதிர்க்கட்சிக்கு வெற்றிவாய்ப்பு மேலும் அதிகரித்திருப்பது தெரிய வந்துள்ளது. புதிய கருத்துக்கணிப்பின்படி, கன்சர்வேடிவ் கட்சிக்கு 42 சதவீத வாக்குகள் கிடைத்துள்ளன. ஆளும் கட்சியான 'லேபர் கட்சி'க்கு 29 சதவீத வாக்குகளும், மூன்றாவது கட்சியான 'லிபரல் டெமாக்ரடிக் கட்சி'க்கு 19 சதவீத வாக்குகளும் கிடைத்துள்ளன.

கடந்த மாதம் இருந்ததுபோலவே, 'லேபர் கட்சி', 'லிபரல் டெமாக்ரடிக் கட்சி' ஆகிய இரண்டு கட்சிகளின் வாக்கு சதவீதமும் அப்படியே தொடருகிறது. ஆனால், எதிர்க்கட்சியான கன்சர்வேடிவ் கட்சிக்கு இந்த மாதம் 4 சதவீத வாக்குகள் அதிகரித்துள்ளன. எனவே, அது ஆளுங்கட்சியை விட 13 சதவீதம் முன்னிலையில் உள்ளது.

கருத்துக்கணிப்புகளில் கிடைத்த முடிவுகளின்படி இந்த அளவு வாக்குகள் கிடைத்தாலே எதிர்க்கட்சியான கன்சர்வேடிவ் கட்சியால் ஆட்சியை கைப்பற்ற முடியும். இந்த அளவிலான வாக்குகள் மூலமாக நாடாளுமன்றத்தில் பெரும்பான்மைக்குத் தேவையான 70 இடங்களை அந்தக் கட்சியால் கைப்பற்ற முடியும்.

சர்வதேச நிதி நெருக்கடியே பிரிட்டிஷ் மக்களின் இத்தகைய முடிவுக்குக் காரணமாகும். ஆளும் கட்சியான லேபர் கட்சியால் நிதி நெருக்கடியை சரியாக கையாள முடியவில்லை என்றும் அதற்குத் தகுந்த கொள்கைகளை அந்தக் கட்சி வகுக்கவில்லை என்றும் 60 சதவீத மக்கள் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

கருத்துக்கணிப்பில் முன்னிலை வகித்து வரும் கன்சர்வேடிவ் கட்சியினர், ''நாங்கள் வெற்றிபெற்று ஆட்சியில் அமர்ந்தால், 2010 ஆம் ஆண்டுக்குள் பிரிட்டனின் பற்றாக்குறை நிலைமையைத் தடுப்போம். பிரிட்டனின் பொருளாதாரத்தை பாதுகாப்பான நிலைமைக்குக் கொண்டுசெல்வோம்'' என்று தெரிவித்துள்ளனர்.

## இஸ்ரேலுடன் மீண்டும் பேசத் தயார்: பலஸ்தீன ஜனாதிபதி தெரிவிப்பு

ரமல்லா, ஜன. 19

''இஸ்ரேலுடன் மீண்டும் பேச்சுகளைத் தொடங்க, பலஸ்தீனம் தயாராகவே உள்ளது. குறிப்பிட்ட இலக்குகளைக் கொண்ட வரைவுத் திட்டமொன்றை ஐ.நா.சபையே நிர்ணயிக்க வேண்டும்'' என பலஸ்தீன ஜனாதிபதி முஹம்மது அப்பாஸ் தெரிவித்துள்ளார்.

இஸ்ரேலுக்கும் பலஸ்தீனத்துக்குமிடையே நீண்டகாலமாகப் போர் நடைபெற்று வருகிறது. இரு நாடுகளுக்குமிடையே அமைதியை நிலைநாட்டும் முயற்சியில் அமெரிக்கா ஈடுபட்டுள்ளது.

அமெரிக்க தேசியப் பாதுகாப்பு ஆலோசகர் ஜிம் ஜோன்ஸ், கடந்த வியாழக்கிழமை பலஸ்தீன ஜனாதிபதி முஹம்மது அப் பாஸை சந்தித்துப் பேசினார். அதன் தொடர்ச்சியாக, அமெரிக்க அமைதித் தூதர் ஜோர்ஜ் மிச்சேலும் அப்பாஸை சந்தித்தார்.

இதையடுத்து, பலஸ்தீன புரட்சி சபைக் கூட்டமொன்றில் ஜனாதிபதி முஹம்மது அப்பாஸ், தமது நிலைப்பாடு குறித்து பேசினார்.

## வீட்டு வேலைக்காக சவூதிக்கு பெண்களை அனுப்ப முடியாது

### எகிப்திய அரசு 'திடீர்' அறிவிப்பு

துபாய், ஜன. 19

சவூதி அரேபியாவுக்கு இனிமேல் வீட்டு வேலைக்குப் பெண்களை அனுப்ப முடியாது என எகிப்து அறிவித்துள்ளது.

வளைகுடா நாடான சவூதி அரேபியாவில் வீட்டுவேலை செய்வதற்காக ஏராளமான வெளிநாட்டுப் பெண்கள் செல்கின்றனர். சவூதி அரேபியாவுக்குத் தொழிலாளர்களை அனுப்பும் நாடுகளில் 4 ஆவது இடத்தில் எகிப்து உள்ளது.

இந்நிலையில், சவூதி அரேபியாவுக்கு இனிமேல் வீட்டு வேலை செய்ய பெண்களை அனுப்பமுடியாது என எகிப்து அறிவித்துள்ளது.

எகிப்து தொழிலாளர் நலத்துறை அமைச்சர் ஆயிஷா அப்தெல் ஹாதி, ரியாத் நகரில் நடைபெற்ற பத்திரிகையாளர் மாநாடொன்றில் பேசுகையில், ''சமூக கலாசார காரணங்களை முன்னிட்டு எங்கள் நாட்டு பெண்களை வீட்டு வேலைக்கு இனிமேல் சவூதிக்கு அனுப்பமாட்டோம். வளைகுடா நாடுகளில் வீட்டு வேலை செய்யும் பெண்கள் மீது அதிக அளவில் அவமதிப்பு நிகழ்ந்து வருகிறது'' என்றார்.

## கடல் எல்லை ஆக்கிரமிப்பு: சீனாவுக்கு ஜப்பான் எச்சரிக்கை

டோக்கியோ, ஜன. 19

ஜப்பான் தனது கடல் எல்லைக்குட்பட்ட பகுதியில் எரிவாயு எடுக்கும் வயல்களை அமைக்கும் பணியில் சீனா ஈடுபட்டுள்ளமைக்குக் கடும் கண்டனம் தெரிவித்துள்ளது.

கிழக்கு சீனாவுக்கருகேயுள்ள கடல் பகுதியில் எரிவாயு எடுப்பது தொடர்பாக சீனாவுக்கும், ஜப்பானுக்குமிடையிலான பிரச்சினை நீடித்துவந்தது. நீண்டகால பேச்சுகளுக்குப் பின்னர் 2008 ஆம் ஆண்டில் இரு நாடுகளுக்குமிடையே விரிவான ஒப்பந்தம் கையெழுத்தானது.

அதன்படி சர்ச்சைக்குரிய அந்தப் பகுதியில் இரண்டு நாடுகளும் ஒன்றிணைந்து எரிவாயு எடுக்கும் வயல்களை அமைப்பது என முடிவு செய்யப்பட்டது.

எனினும், அந்த ஒப்பந்தத்தை மீறி தனியாக எரிவாயு எடுக்கும் வயல்களை அமைக்கும் பணியில் சீனா ஈடுபட்டுள்ளது. சீனா சார்பாக பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ள இடம், தனது எல்லைக்கு உட்பட்டது என ஜப்பான் கடும் கண்டனம் தெரிவித்துள்ளது.

மேலும் ஒப்பந்தத்தை மீறி சீனா செயற்பட்டால், அது தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் சீனாவை ஜப்பான் எச்சரித்துள்ளது.

டோக்கியாவுக்கு வந்த சீன வெளியுறவு அமைச்சர் யாங் ஜியெச்சியிடம் ஜப்பான் வெளியுறவு அமைச்சர் கட்சுயா ஒகாடா, நேரடியாகவே இந்த எச்சரிக்கையை விடுத்துள்ளார் என ஜப்பான் வெளியுறவு அமைச்சக அதிகாரி தெரிவித்தார்.

சர்ச்சைக்குரிய அந்தஇடத்தில் 27 கோடி 60 இலட்சம் பீப்பாய் பெட்ரோலிய பொருள்கள் கிடைக்குமென்பது குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org





இனிய வாழ்வு இல்லத்தை மீளமைக்க முனைவோர் சங்கத்தின் பணிமனைத் திறப்பு விழா யாழ். கந்தர்மடம் ஆத்திசூடி வீதியில் நடைபெற்ற போது எடுக்கப்பட்ட படங்கள்.

இனிய வாழ்வு இல்லத்தின் பெயர் பலகையை இல்லத்தின் இயக்குநர் பா. ராஜ்குமார் திரை நீக்கம் செய்து வைப்பதையும் யாழ். பல்கலைக் கழக தமிழ்த்துறை விரிவுரையாளர் எஸ். அருந்தாகரன் பணிமனையைத் திறந்து வைப்பதையும் நிகழ்வில் கலந்துகொண்டவர்களையும்

*(படங்கள்: லக்ஸ்மன்)*

# 6 மாத காலத்துக்குள் நிலைமைகளை இலங்கை சீர்செய்யாவிட்டால் ஜி.எஸ்.பி. வரிச்சலுகை ரத்து

## ஐரோப்பிய ஒன்றியம் அறிவிப்பு

கொழும்பு, ஜன. 19

ஐரோப்பிய ஒன்றிய நாடாளுமன்றம் இலங்கைக்கான ஜி.எஸ்.பி.பிளஸ் வரிச்சலுகைகளை இரத்துச் செய்வதற்கான விசாரணைகளைக் கடந்த14 ஆம் திகதி நடத்தியது.

இலங்கை மீதான, மனிதவுரிமை மீறல் குற்றச்சாட்டுகள் இவ்விசாரணையின் போது ஆராயப்பட்டன. ஆறு மாத காலத்துக் குள் மனித உரிமை மீறல்களை நிறுத்தி நிலைமையைச் சீரமைக்காத பட்சத்தில் வரிச்சலுகை இரத்துச் செய்யப்படுமென ஐரோப்பிய ஒன்றியப் பிரதிநிதிகள் அறிவித்தனர்.

இதன்போது இலங்கைக்கான தூதுவர் அங்கு தெரிவித்தவை வருமாறு:-

முன்னாள் போராளிகள் சிறையிலிருந்து விடுதலை செய்யப்பட்டுப் புனர்வாழ்வு மையங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர், சிறுவர் போராளிகள் புனர்வாழ்வு மையங்களில் இயல்பு வாழ்க்கைக்குத் தயார்ப்படுத்தப்படுகின்றனர். இலங்கை, மனித உரிமை விடயங்களில் கூடிய கவனஞ் செலுத்தும். தற்போது இலங்கையில் மனிதவுரிமை மீறல்கள் வெகுவாகக் குறைந்துள்ளன- என்றார்.

இதன்போது தமிழ் ஒருங்கமைப்பின் சர்வதேச இணைப்பாளர் சேனன், இலங்கைத் தூதுவரின் சாட்சியம் ஏற்றுக் கொள்ள முடியாததும் உண்மைக்குப் புறம்பானதுமென மறுத்துத் தன் விவாதத்தை விசாரணைக்குழுவின் முன் வைத்தார்.

இலங்கையின் தற்போதைய நிலைமையை பாரதூரமானது எனவும், இலங்கை அரசு தமிழ் மக்களை முகாம்களில் அடைத்து வைத்து சித்திரவதை செய்து வருகிறது. முன்னர் விடுவிக்கப்பட்டவர்கள் கூட தற்காலிக முகாம்களில் மீண்டும் வைக்கப்பட்டுள்ளனர். இலங்கையின் வடக்குப் பிரதேசம் திறந்த வெளிச் சிறைச்சாலையாக மாறிக் கொண்டிருக்கிறது. குழந்தைகள் பாதிக்கப்படுகின்றனர். எட்டு வயதுடைய குழந்தையுட்பட பல சிறார்கள் இலங்கை அரசினால் சிறப்பு முகாம்களில் அடைக்கப்பட்டுச் சித்திரவதையை அனுபவிக்கின்றனர். எம்மிடம் அதற்கான ஆதாரமுண்டு - என்றார்.

இதன்போது கடந்த 2008ஆம் ஆண்டு டிசெம்பரிலிருந்து ஒரேயொரு ஊடகவியலாளர் மட்டுமே கடத்திச் செல்லப்பட்டார் என எல்லை தாண்டிய ஊடகவியலாளர் அமைப்பின் இணையப் பக்கத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது என இலங்கைத் தூதுவர் இங்கு குறிப்பிட்டார். அவரது கூற்றை மறுத்த எல்லைகள் தாண்டிய ஊடக வியலாளர் அமைப்பைச் சேர்ந்த வின் சன்ட் புறசல்-

அண்மையில் கூட பி.பி.ஸியின் உள்நாட்டு நிருபர் அரசைச் சார்ந்த அமைச்சர் ஒருவரால் தாக்கப்பட்டார் எனவும் அவர் அரசின் தேர்தல் பிரசாரக் கூட்டமொன்றில் செய்தி சேகரிக்கச் சென்றபோதே தாக்கப்பட்டார் எனவும் தெரியவருகிறது - என்றார்.

இலங்கைத் தூதுவர், 2004இல் ஆழிப் பேரலையால் பாதிக்கப்பட்டோர் சார்பாக வேண்டுகோள் ஒன்றை முன்வைத்து அரசுக்குக் கிடைத்த நிதிகள் மூலம் நிவாரணப் பணிகள் சிறப்பாக மேற்கொள்ளப்பட்டன என்றார். இதனை மறுத்துரைத்த தமிழ் ஒருங்கமைப்பாளர் ஒருவர், ராஜபக்ஷ அரசு உதவிப்பணம், வரிச்சலுகைகள் போன்றவற்றை மக்களின் ஜனநாயக உரிமைகளைப் பறிப்பதற்குச் செலவிடுகின்றதேயொழிய பெரும்பாலும் இப்பணம் பாதிக்கப் பட்ட மக்களைப் போய்ச் சேரவில்லை - என்றார்.

ஐரோப்பியப் நாடாளுமன்ற உறுப்பினர் ஜோய்ஹிக்கின்ஸ் ஜி.எஸ்.பி. வரிச்சலுகையை இரத்துச் செய்ய வேண்டுமென வாதிட்டதுடன், இலங்கையரசு புதிய புதிய செய்திக் கதைகளைத் தயாரித்துப் பரப்பி வருகிறது எனக் குற்றஞ்சாட்டினார். அங்கிருக்கும் யதார்த்த நிலையை இலங்கை அரசு திரிபுபடுத்திக் கூறுகிறது.மக்களின் யதார்த்த வாழ்வுக்கும் இந்தச் செய்திகளுக்கும் எந்தத் தொடர்பும் இல்லை என்றும் வாதிட்டார்.

மேலும் அவர் தனது விவாதத்தில் சாதாரண தொழிலாளருக்கோ வறிய இலங்கை மக்களுக்கோ பாதகமான ஒரு சூழலை உருவாக்கும் நோக்கம் யாருக்கும் இல்லை. இந்த வரிச்சலுகை இரத்துக்கான முழுப் பொறுப்பும் இலங்கையரசையே சாரும் எனவும் குறிப்பிட்டார்.

இறுதியில், இலங்கை அரசு மனிதவுரிமை மீறல்களை நிறுத்தி, நிலமையைச் சீரமைக்காத பட்சத்தில் ஆறு மாதத்துக் குள் வரிச்சலுகை இரத்துச் செய்யப்படுமென ஐரோப்பிய ஒன்றியப் பிரதிநிதிகள் அறிவித்தனர். (சி)

## உள்ளூராட்சி மன்றங்களும் டெங்கு நோய் ஒழிப்பில் தீவிரம்

யாழ்ப்பாணம், ஜன.19

உள்ளூராட்சித் திணைக்களத்தின் உதவியுடன் யாழ் மாவட்டத்தில் டெங்கு நோய் ஒழிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டு வருகின்றன.

பொது இடங்கள், பாடசாலைகள், கைவிடப்பட்ட காணிகள் என பல இடங்களில் இந்த டெங்கு ஒழிப்புச் செயற்பாடுகள் முனைப்புடன் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

கிராம மட்டத்திலுள்ள டெங்கு ஒழிப்பு விழிப்புக் குழுவுடன் இணைந்து பல்வேறு நடவடிக்கைகள் முன்னெடுக் கப்பட்டுவருகின்றன எனவும் இதற்கு பொது மக்களின் ஒத்துழைப்பு அவசியம் தேவையாக இருக்கிறது எனவும் உள்ளூ ராட்சி திணைக்கள உதவி ஆணையாளர் திருமதி மதுமிதா வசந்தகுமார் கேட்டுள்ளார்.

(1-14)

# பொன்சேகா - கூட்டமைப்பு ஒப்பந்தம் எதுவும் இல்லை; விரைவில் அனைத்துத் தரப்பு ஊடகச் சந்திப்பு

## ரவி கருண நாயக்கா தகவல்

கொழும்பு, ஜன.19

ஜெனரல் சரத் பொன்சேகாவுக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குமிடையில் ஒப்பந்தம் ஒன்று செய்துகொள்ளப் பட்டுள்ளது என்று அரசால் முன்வைக்கப் படும் குற்றச்சாட்டை நிராகரித்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உள்ளிட்ட அனைத்து எதிர்க்கட்சிகளும் ஒன்றிணைந்து விரைவில் ஊடகச் சந்திப்பொன்றை நடத்தி நாட்டு மக்களுக்கு உண்மை நிலையைத் தெளிவுபடுத்தும் என்று ரவி கருணா நாயக்க எம்.பி. நேற்றுக் கூறினார்.

எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே இவ்வாறு கூறினார்.

இது தொடர்பாக அவர் மேலும் கூறியவை வருமாறு:-

சரத் பொன்சேகாவுக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குமிடையில் இரகசிய ஒப்பந்தம் ஒன்று செய்துகொள்ளப்பட்டுள்ளது என்று அரசு தொடர்ச்சியாகக் கூறி வருகின்றது. நாமும் அதைத் தொடர்ச்சியாக மறுத்து வருகின்றோம்.

மக்கள் அனைவரும் எம்பக்கம் திரும்பியுள்ளதால் அரசுக்கு வேறு வழி தெரியவில்லை. எப்படியாவது எம்மீது பொய்க் குற்றச்சாட்டுகளை சுமத்தி மக்களை அரசின் பக்கம் இழுக்க அரசு முற்படுகிறது.

நாட்டைப் பிரிப்பதற்கும், வடக்கு - கிழக்கை மீண்டும் இணைப்பதற்கும் ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளது என்றும் அரசு கூறுகின்றது. இந்தக் குற்றச்சாட்டுகள் அனைத்தும் பொய்யானவை என்பது மக்களுக்குத் தெரியும். இருப்பினும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் ஏனைய எதிர்க் கட்சிகளும் ஒன்றிணைந்து ஊடக சந்திப்பொன்றை நடத்தி அதனூடாக நாட்டு மக்களுக்கு மீண்டும் ஒரு தடவை இது தொடர்பில் தெளிவுபடுத்தப்படும் என்றார்.

# மஹிந்த மீண்டும் ஆட்சி.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நேற்று மட்டக்களப்பில் தமது கட்சி யின் முக்கியஸ்தர்களைச் சந்தித்துக் கலந்துரையாடியபோதே இதனைத் தெரிவித்தார்.

அங்கு சம்பந்தன் எம்.பி. மேலும் தெரிவித்த விடயங்கள் வருமாறு:-

தமிழ்மக்களின் தேசிய உணர்வுகளைப் பிரதிபலிக்கக்கூடிய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும், முஸ்லிம் மக்களின் உணர்வுகளைப் பிரதிபலிக்கும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸும் ஒன்றுபட்டு செயற்படக் கூடிய காலம் கனிந்துவிட்டது.

வடக்கு, கிழக்கு மாகாணத்தில் தமிழர்கள் இல்லாமல் முஸ்லிம்களும் இல்லை. முஸ்லிம்கள் இல்லாமல் தமிழர்களும் வாழ முடியாது என்ற யதார்த்தம் தமிழ்ப் பேசும் மக்களால்உணரப்பட்டுள்ளது.

எமது நாட்டில் எந்தவொரு பிரதேசத்திலும் சிறுபான்மை மக்கள் பெரும்பான்மையாக வாழக்கூடாது. அப்படி வாழ்ந்தால் சுயநிர்ணய உரிமையையும், சலுகைகளையும் அவர்கள் கோருவார்கள். அவ்வாறான நிலைக்கு இடமளிக்கக்கூடாது என்பதே ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் கொள்கையாகும். இன்னும் ஆறு வருட காலம் இந்த அரசு நீடிக்குமானால், கிழக்கு மாகாணம் நிச்சயம் பறிபோகும். இதில் எந்த சந்தேகமுமில்லை. இதனைத் தமிழர்கள் மட்டுமல்ல, முஸ்லிம்களும் புரிந்திருக்கிறார்கள்.

கிழக்கு மாகாணத்தில் அம்பாறை அறந்தலாவை தொடக்கம் மட்டக்களப்பு மாவட்டத்தை நோக்கித் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்கள் நடைபெறுகின்றன. இதுதொடர்பாக ஜனாதிபதியிடம் மூன்று தடவைகள் பேசினோம். தேர்தலில் வென்ற பின்னர் இதுபற்றிப் பேசுவோம். இப்போது உங்களது ஆதரவைத் தாருங்கள் என்று சொன்னார். இதன் பின்னரே நாங்கள் எதிர்க்கட்சி வேட்பாளர் சரத் பொன்சேகாவை ஆதரிக்க முடிவு செய்தோம்.

''நாங்கள் எங்களது மக்களுக்குத் துரோகம் செய்யமாட்டோம். நாங்கள் விலைபோகவும் மாட்டோம். எங்களது மக்களது விருப்பத்திற்கு மாறாக நாங்கள் செயற்படமாட்டோம். நாங்கள் தமிழ்மக்களது விருப்பத்திற்கு மாறாகச் செயற்பட்டால் எதிர்வருகின்ற நாடாளுமன்றத் தேர்தலிலே எங்களைத் தூக்கியெறிந்து விடுவார்கள்'' என்று ஜனாதிபதிக்கு நாங்கள் கூறினோம்.

கடந்த [illegible] நாடாளுமன்றத் தேர்தலில் நாங்கள் 6 லட்சத்து 50 ஆயிரம் வாக்குகளைப் பெற்றோம். எதிர்காலத்தில் அவ்வாறான வாக்குகளைப் பெறமுடியாவிட்டாலும் கணிசமான வாக்குகளைப் பெறுவோம்.

கடந்த ஜனாதிபதித் தேர்தலில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ ஒரு லட்சத்து 70 ஆயிரம் வாக்குகளால் மட்டுமே வெற்றி பெற்றார். இம்முறை தமிழ்மக்கள் ஒன்றுபட்டு வாக்களிப்பதன் மூலம் ஜெனரல் சரத் பொன்சேகாவின் வெற்றியைத் தீர்மானிக்கும் சக்தியாகத் தமிழ்மக்களே இருப்பார்கள் என்பதை இந்த நாட்டிற்கும் சர்வதேச சமூகத்திற்கும் எடுத்துக்காட்டுவோம்.

தமிழ்மக்கள் ஒற்றுமையாக இருக்கிறார்கள் என்பதைத் தேர்தல் முடிவுமூலம் எடுத்துக்காட்டுவோம். தமிழ்மக்கள் தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் மீது பெரிய அளவில் இல்லாவிட்டாலும் சிறிதளவேனும் நம்பிக்கை வைத்திருக்கிறார்கள். எமது கட்சி சமூகத்திற்கான விடிவைப் பெற்றுத்தரும் என் பதுவே தமிழ்மக்களது நம்பிக்கையாகும். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஒரு போதும் ஆயுதப் போராட்டத்தை விரும்பியதில்லை. எனினும், எமது இளைஞர்கள் செய்த தியாகங்களை நாங்கள் மதிக்கின்றோம்.

''தமிழர்களின் விடுதலைப் போராட்டமானது ஆயுதங்களுடன் ஆரம்பிக்கவுமில்லை. ஆயுதப் போராட்ட முடிவுடன் தமிழ்மக்களது விடுதலைப் போராட்டம் முற்றுப்பெறவுமில்லை'' அந்த அடிப்படையில் வடக்கு, கிழக்கிலுள்ள மக்கள் மஹிந்த ராஜபக்ஷவின் ஆட்சியை நீடிக்க எந்தவொரு ஆணையையும் வழங்கமாட்டார்கள் என்ற நம்பிக்கையோடு இருக்கிறோம். தற்போதைய தேர்தல் பிரசார நடவடிக்கையில் எமக்கு ஜனநாயகம் இல்லை. அம்பாறை மாவட்டத்தில் எமது மக்களைச் சந்திப்பதற்காக நாங்கள் சென்றிருந்தபோது ஒரு முக்கியஸ்தரின் தலைமையிலான குழுவினரால் தடுத்து நிறுத்தப்பட்டோம். அந்தக் குழுவின் தலைவர் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மாவட்ட அமைப்பாளர் என்றும் ஜனாதிபதியின் இணைப்பாளரென்றும் அறிந்தோம். நாங்கள் வன்முறையை விரும்பவில்லை. இவ்வாறு ஜனநாயகம் இல்லாத நாட்டில் சிறுபான்மையினர் எவ்வாறு வாழமுடியும்? என்றார்.

இக்கூட்டத்தில் நாடாளுமன்ற உறுப்பினர்களான மாவை சேனாதிராஜா, செல்வம் அடைக்கலநாதன், எஸ். துரைரெட்ணசிங்கம், செல்வி. க. தங்கேஸ்வரி, பா.அரியநேத்திரன், முகமது இமாம், எஸ்.கனகசபை உட்பட முக்கியஸ்தர்கள் பலர் கலந்துகொண்டனர். இக்கூட்டத்திற்கு முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் பொன் .செல்வராஜா தலைமை வகித்தார்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# நீதியானதும் நேர்மையானதுமான தேர்தலை நடத்துவதற்கு அரசு முயற்சி எடுக்கவில்லை

## அநுரகுமார திஸ்ஸாநாயக்க எம்.பி. சாடுகிறார்

கொழும்பு, ஜன. 19

இலங்கையில் ஜனாதிபதித் தேர்தல் நெருங்கிக்கொண்டிருக்கும் இந்த வேளையில் நடைபெறவுள்ள தேர்தல் நீதியான மற்றும் நேர்மையான தேர்தலாக அமையுமா என்ற சந்தேகம் மக்கள் மத்தியில் மட்டுமன்றி அரசியல் தலைவர்கள் மத்தியிலும் ஏற்பட்டுள்ளது என அரசியல் ஆய்வாளர்கள் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

தேர்தல் அறிவிப்பு வெளியான திகதி முதல் நேற்றுமுன்தினம் வரை 369 தேர்தல் வன்முறைச்சம்பவங்கள் பதிவாகியுள்ளன என தேர்தலைக் கண்காணிக்கும் 'கபே' அமைப்பு குறிப்பிட்டுள்ளதுடன், இந்த எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது எனவும் அந்த அமைப்புக் கவலை தெரிவித்துள்ளது.

இந்த நிலையில் நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் மாநாட்டில் கருத்துத் தெரிவித்த மக்கள் விடுதலை முன்னணியின் நாடாளுமன்றக் குழுத் தலைவரும், எதிர்கட்சிகளின் பொதுவேட்பாளர் ஜெனரல் சரத்பொன்சேகாவின் ஊடகப்பேச்சளருமான அநுரகுமார திஸ்ஸாநாயக்க கருத்துத் தெரிவிக்கையில் கூறியவை வருமாறு:-

நீதியானதும் நியாயமானதுமான தேர்தலை நடத்த இந்த அரசு முயற்சிக்கவில்லை.

தேர்தல்கள் ஆணையாளரை சந்திக்கும் ஒவ்வொரு தடவையும் தேர்தலை நீதியாகவும் நேர்மையாகவும் நடக்க நடவடிக்கை எடுக்கும்படி வலியுறுத்தி வந்தோம். அதேநேரம் தேர்தல்களுக்குப் பொறுப்பான பிரதி பொலிஸ் மா அதிபரிடம் இது தொடர்பில் அறிவுறுத்தியிருந்தோம்.

அத்தோடு பொலிஸ் அதிகாரிகளும் நீதியானதும் சமாதானமானதுமான தேர்தலை நடத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளவேண்டும் எனவும் கோரிக்கை விடுத்திருந்தோம்.

நீதி மற்றும் சமாதானத்தை நிலைநிறுத்துவதற்கு அர்ப்பணிப்புடன் செயற்படக்கூடிய பதவிநிலை அதிகாரிகள் பலர் இருக்கின்ற போதிலும், அரசின் தேவைக்கேற்ப செயற்படுகின்ற அதிகாரிகளைக் கொண்ட சிறு குழு இன்று நீதியான செயற்பாடுகளுக்குத் தடை விதிப்பவர்களாக காணப்படுகின்றது.

இதனால் நீதியானதும் நேர்மையானதுமான தேர்தலை நடத்துவதற்கும், நாட்டு மக்களுக்கு சுதந்திரமாக தேர்தல் செயற்பாடுகளை மேற்கொள்வதற்கான சூழலை ஏற்படுத்திக்கொடுக்குமாறும் தாம் தொடர்ச்சியாக பொலிஸாரிடம் வலியுறுத்தி வருகிறோம்.

இந்நிலை தொடருமானால் மக்கள் தாக்குதலுக்குள்ளாகும் போது, அலுவலகம் உடைத்து சேதமாக்கப்படும்போது, அதற்கு எதிராக அவர்கள் சட்டத்தைக் கையிலெடுக்கும் நிலைமை உருவாகும்.

அவ்வாறான ஒரு நிலைமையே இன்று தோன்றிவருகிறது. இந்த நிலைமையானது ஜனநாயக ரீதியில் செயற்படும் ஒரு ஜனநாயக நாட்டிற்கு உகந்ததல்ல - என்றார்.

# அடுத்த வருடத்தில் நம்நாட்டு பெற்றோல் சந்தைக்கு வரும்

## அமைச்சர் பௌஸி தகவல்

கொழும்பு, ஜன.19

2011ஆம் ஆண்டில் முதலாவது உள்நாட்டு பெற்றோல் சந்தைக்கு வரும். அதன் பின்னர் இங்குள்ள சகல வாகனங்களும் எமது பெற்றோல் மூலமே இயங்கும்-

இவ்வாறு பெற்றோலியம் மற்றும் எண்ணை வளத்துறை அமைச்சர் ஏ.எச்.எம். பௌஸி தெரிவித்தார்.

இதனைக் குழப்பியடிப்பதற்காகவே ஐ.தே. கட்சியும் ஜே. வி. பியும் கூட்டணி அமைத்து செயற்படுகின்றன. இதனை சகலரும் உணர்ந்து செயற்படுவது அவசியம் என்றார்.

அக்குறணை நகரில் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் உரையாற்றும்போதே அமைச்சர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் அங்கு மேலும் கருத்துத் தெரிவிக்கையில் கூறியவை வருமாறு:-

இன்று வடக்கு, கிழக்கு, தெற்கு என முழு நாட்டு முஸ்லிம்களும் நிம்மதியாக வாழ்கின்றனர். இதற்கு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவே முழுக் காரண கர்த்தா ஆவார்.

ஜனாதிபதி யுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவராமல் இருந்திருந்தால் இந் நாட்டில் வாழும் முஸ்லிம்கள் அச்சம், பீதியுடனும், துன்ப துயரங்களுடனுமே வாழ வேண்டிய நிலை ஏற்பட்டிருக்கும். பயங்கரவாதம் முழுமையாக ஒழித்துக் கட்டப்பட்டதன் பயனாக அச்சம், பீதியற்ற சூழ்நிலை உருவாக்கப்பட்டிருக்கின்றது.

ஆகவே எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை அமோக வெற்றிபெறச் செய்யவேண்டும். அதில் முஸ்லிம்களும் பங்காளர்களாக வேண்டும். இது முஸ்லிம்களின் பொறுப்பாகும் - என்றார்.

# தேர்தல் பிரசாரத்தில் கலந்துகொண்டு திரும்பிய மங்கள சமரவீர குழுவினர் மீது தாக்குதல்!

கொழும்பு, ஜன.19

ஜெனரல் சரத் பொன்சேகாவிற்கு ஆதரவான தேர்தல் பிரசாரத்தில் கலந்து கொண்ட பின்னர் கொழும்பு நோக்கிச் சென்றுகொண்டிருந்த ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மக்கள் பிரிவுத் தலைவர் மங்கள சமரவீர உள்ளிட்டோர் மீது கடந்த சனிக்கிழமை மாலை மாத்தறை, மாவெரல பகுதியில் வன்முறைக் குழுவொன்றுத் தாக்குதல் நடத்தியுள்ளது.

கற்கள் மற்றும் இரும்பு ஆகியவற்றைப் பயன்படுத்தி இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளதாக காவல்துறையினர் தெரிவித்துள்ள னர். ஐக்கிய தேசியக் கட்சியின் மாத்தறை மாவட்ட தலைவர் சாகல ரத்நாயக்க, தென் மாகாண எதிர்க்கட்சித் தலைவர் புத்திக்க பத்திரன ஆகியோர் இந்தத் தாக்குதலில் சிக்கிக்கொண்ட போதிலும் அவர்களுக்குக் காயங்கள் ஏற்படவில்லை.

சமரவீர பயணித்த ஜீப் வண்டி உள்ளிட்ட நான்கு வாகனங்கள் சேதப்படுத்தப் பட்டுள்ளன. இந்தச் சம்பவத்தில் தமது ஆதரவாளர்கள் மூன்று பேர் காயமடைந்த தாக ஐக்கிய தேசியக் கட்சி கூறியுள்ளது. படுகாயமடைந்த நிலையில் மாத்தறை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட ஒருவர் ஆபத்தான நிலையில் கொழும்பு தேசிய வைத்தியசாலைக்கு மாற்றப்பட் டுள்ளார்.

# ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத் தலைவர் நடத்திய நிகழ்ச்சிகள் இடைநிறுத்தம்!

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் தலைவரான ஹட்சன் சமரசிங்க, அவர் நடத்தி வந்த எல்லா நிகழ்ச்சிகளிலிருந்தும் இடைநிறுத்தப்பட்டுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

அரச ஊடகங்களைக் கண்காணிக்கும் வகையில் தேர்தல் ஆணையாளரால் நியமிக்கப்பட்ட தகுதிவாய்ந்த அதிகாரியை அவரது கடமையைச் செய்ய விடாமல் இடையூறு செய்த காரணத்தினாலேயே நிகழ்ச்சிகளிலிருந்து அவர் தடை செய்யப்பட்டுள்ளார் என அறியவருகிறது.

தகுதி வாய்ந்த அதிகாரியான ஜயம்பதி ஹெட்டியாராய்ச்சி, ஹட்சன் சமரசிங்க நிகழ்ச்சிகளிலிருந்து இடைநிறுத்தப்பட்டுள்ளார் என்பதை உறுதிப்படுத்தியிருக்கிறார்.

தேர்தல் சட்டங்களை மீறும் அரச ஊடகங்களைக் கண்காணிக்கவும் அவற்றுக்கெதிராக நடவடிக்கைகளை மேற்கொள்ளவுமெனவே தகுதி வாய்ந்த அதிகாரியாக நியமிக்கப்பட்டுள்ளார்.

முன்னதாக ஜனாதிபதி வேட்பாளர்களைக் கடந்த செய்வாய்க்கிழமை சந்தித்த தேர்தல் ஆணையாளர், இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத் தலைவர் ஹட்சன் சமரசிங்க, வாக்குப் பெட்டிகள் குறித்த விடயங்களைக் கண்காணிப்பதே தேர்தல் ஆணையாளரின் வேலை தவிர ஊடகங்களைக் கண்காணிப்பதல்ல என்று விமர்சித்திருந்தார். (அ-சி)

### அமைச்சரின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பொதுவேட்பாளர் சரத் பொன்சேகாவின் தரப்பையும் சேர்ந்தவர்களாவர்.

ஜனாதிபதித் தேர்தலுக்கு இன்னும், 7 நாள்கள் இருக்கும் நிலையில் வன்முறைச் சம்பவங்கள் அதிகரித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (அ-சி)

# வன்முறைகளற்ற தேர்தல் நடத்துவதற்கு சகல தரப்பினரும் ஒத்துழைக்க வேண்டும்

## பௌத்த பீடாதிபதிகள் வலியுறுத்து

கொழும்பு, ஜன. 19

வன்முறைகளற்ற தேர்தலை நடத்துவதற்கு அனைத்துத் தரப்பினரும் ஒத்துழைப்பு வழங்க வேண்டுமென நாட்டின் முக்கிய பௌத்த மாநாயக்கத் தேரர்கள் தெரிவித்துள்ளனர்.

அமைதியானதும், சுயாதீனமானதுமான முறையில் தேர்தல் பிரசாரங்கள் மேற்கொள்ளப்பட வேண்டுமென சகல வேட்பாளர்களிடமும் மற்றும் ஆதரவாளர் களிடமும் அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இம்முறை ஜனாதிபதித் தேர்தலின் போது சேறு பூசும் நடவடிக்கைகள் உச்சக்கட்டத்தை அடைந்துள்ளன என குறிப்பிடப்படுகிறது

மல்வத்த, அமரபுர மற்றும் ராமன்ஜய பீடங்களின் பீடாதிபதிகள் இந்த விடயம் குறித்து வலியுறுத்தியுள் ளனர்.

நாட்டின் அதி உயர் பதவியான ஜனாதிபதிப் பதவிக்காக நடத்தப்படும் தேர்தலில் நியாயமான முறையில் வாக்களிக்க வேண்டியது அவசியமாகுமென அவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

ஒருவரை ஒருவர் தூற்றும் தேர்தல் பிரசாரக் கலாச்சாரத்தை புறந்தள்ளி சகோதரத்துவத்துடன் கூடிய பிரசாரங்கள் மேற்கொள்ளப்பட வேண்டுமென அவர் தெரிவித்துள்ளனர்.

தொடர்ச்சியாக இடம்பெற்று வரும் வன்முறைச் சம்பவங்களினால் மக்கள் அதிருப்தி அடைந்துள்ளதாகக் குறிப்பிடப்படுகிறது. (சி)

# விசாரணைசெய்யாத 100 முறைப்பாடுகள் பொலிஸ்மா அதிபரின் நேரடிக் கவனத்திற்கு

## கட்சிப் பிரதிநிதிகள் சமர்ப்பித்துப் பேச்சு

கொழும்பு, ஜன.19

தேர்தல் வன்முறைகள் குறித்து நாடெங்கும் செய்யப்பட்டுள்ள முறைப்பாடுகளில் இதுவரை பொலிஸார் விசாரணை செய்யாத நூறு முறைப்பாடுகளை சம்பந்தப்பட்ட கட்சிப் பிரதிநிதிகள் பொலிஸ் மா அதிபரின் நேரடிக் கவனத்துக்குக் கொண்டு வந்துள்ளனர்.

கடந்த 16ஆம் திகதி காலை கட்சிப் பிரதிநிதிகள் பொலிஸ் மா அதிபரின் காரியாலயத்தில் அவரைச் சந்தித்து இந்த முறைப்பாடுகளைச் சமர்ப்பித்துள்ளனர் எனப் பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது.

இச்சந்திப்பின் போது பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிகளும், உயரதிகாரிகளும் பக்கச்சார்பாக செயல்படுகின்றனர் எனவும், முறைப்பாடுகளை விசாரிக்கவோ, குற்றமிழைத்தவர்களைக் கைது செய்து சட்ட நடவடிக்கைகளை முன்னெடுக்கவோ அவர்கள் தாமதம் அல்லது உதாசீனம் காட்டுகின்றனர் எனவும், கட்சிப்பிரதிநிதிகள் பொலிஸ் மா அதிபருக்குச் சுட்டிக் காட்டியுள்ளனர்.

பொலன்னறுவையிலும், கொலன்னாவையிலும் அண்மையில் நடந்த தேர்தல் வன்முறைச் சம்பவங்கள் பற்றி இது வரை பொலிஸார் எவ்வித நடவடிக்கையையும் எடுக்கவில்லை என கட்சிப்பிரதிநிதிகள் சுட்டிக்காட்டியபோது -

கொலன்னாவ சம்பவத்தில் ஒன்பது பேர் கைது செய்யப்பட்டு விசாரணை செய்யப்படுகின்றனர் எனவும் இது சம்பந்தமாக ஐக்கிய மக்கள் கூட்டமைப்பின் மேல் மாகாணசபை உறுப்பினர் துமிந்த சில்வாவின் வாக்குமூலமும் பெறப்பட்டுள்ளது எனவும் பொலிஸ் மா அதிபர் தெரிவித்தார்.

நாட்டின் பல பாகங்களிலும் விசேடமாக முக்கிய கேந்திர நிலையங்களின் முன் இன்னமும் 'கட் - அவுட்' டுகள் போஸ்டர்கள், விளம்பரங்கள் அகற்றப் படாமல் இருக்கின்றமை குறித்தும் கட்சிப் பிரதி நிதிகள் பொலிஸ் மா அதிபரிடம் சுட்டிக் காட்டினர்.

பொலிஸ் மா அதிபருடனான இச்சந்திப்பில் ஐக்கிய தேசியக்கட்சி, ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு மற்றும் ஜே.வி.பி. உட்பட பல அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள் பங்கேற்றனர். (அ-சி)

### வன்னி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மக்களது தனித்தன்மைகளைப் பாதுகாக்கத் தொடர்ந்தும் உழைப்பதே எனது பிரதான நோக்கமாகும்.

தற்போது இலங்கை அரசு தமது சொந்த இலாபத்திற்காகவும் ஆட்சிப் பதவிகளைத் தக்க வைப்பதற்காகவும் தென் பகுதி சிங்கள மக்களையும் வட பகுதி தமிழ் மக்களையும் ஒருவருக்கொருவர் எதிரிகளாக உருவாக்கும் சதித்திட்டங்களை மேற்கொண்டு வருகின்றது.

நாட்டின் இறைமையைக் காப்பதற்காக வன்னியில் இறுதிக்கட்ட போரின்போது முப்பதாயிரத்திற்கு மேற்பட்ட சிங்கள இளைஞர்கள் உயிரிழந்தனர். முப்பத்தியாறாயிரத்திற்கும் மேற்பட்ட படையினர் அங்கவீனர்கள் ஆக்கப்பட்டனர். இவற்றுக்கெல்லாம் காரணமாக அமைந்தவை எவை என்பதனை மக்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும். ஒருவருக்கொருவரை எதிரிகளாக்கும் சுயநல அரசியல்வாதிகளை மக்கள் இனங்கண்டு ஒதுக்கவேண் டும்.

அவ்வாறான ஒரு போராட்டத்திற்காகவே எதிரணிகள் சார்பில் உங்கள் முன் ஜனாதிபதி வேட்பாளராக வந்திருக்கின்றேன் - என்றார். (அ-சி)

### தேர்தல்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஜெனரல் சரத் பொன்சேகாவிற்கு ஆதரவு நிலவும் பிரதேச மக்கள் வாக்களிப் பில் கலந்து கொள்வதனை தடுக்கும் முனைப்புக்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிற்கு ஆதரவான பிரதேசங்களில் கூடுதலான வாக்காளர்களை வாக்களிப்பில் ஈடுபடுத்தவும் சதித் திட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகிறது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

எதிர்க்கட்சிகளுக்கு ஆதரவு நிலவும் வாக்களிப்பு நிலையங்களில் வன்முறைகளைக் கட்டவிழ்த்துவிட்டு அதன் மூலம் வாக்காளர்களின் கவனத்தை திசை திருப்ப முயற்சி மேற்கொள்ளப்பட உள்ளன என்றும்-

இன்று நடைபெறும் தேர்தல் ஆணையாளருடனான சந்திப்பின்போது இந்த விடயம் தொடர்பாக நேரடியாகக் கோரிக்கை விடுக்கப்படும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (சி)

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிடெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 19.01.2010 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org